# T.P.M Sunday School

# Standard : 9

**பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து;** நீதி:22:6

# TPM ஞாயிறுபள்ளி
# 9-ம் வகுப்பு பாடங்கள்

## I. பாடங்கள் (80 மதிப்பெண்கள்)

1. இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி I)
2. இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி II)
3. இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி III)
4. இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி IV)
5. இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி V)
6. இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி VI)
7. இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி VII)
8. அப். பவுலின் மூன்றாம் சுவிசேஷப் பிரயாணம்
9. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (பகுதி I)
10. கிறிஸ்துவின் இரண்டாம் வரகை (பகுதி II)
11. வெளிப்படுத்தின விசேஷத்திற்கு ஒரு முன்னுரை
12. உயர்த்தெழுதலின் ஏழு வரிசைகள் (பகுதி I)
13. உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள் (பகுதி II)
14. உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள் (பகுதி III)
15. இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல்
16. திரித்துவ தேவன் (பகுதி I)
17. திரித்துவ தேவன் (பகுதி II)
18. கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியம்
19. தேவனுடைய வாசஸ்தலங்கள் (பகுதி I)
20. தேவனுடைய வாசஸ்தலங்கள் (பகுதி II)

Praise the LORD

# STD 9 (Memory Verse & Moral)

| L# | LESSON NAME | MEMORY VERSE | | MORAL |
|---|---|---|---|---|
| 1 | இஸ்ரவேலின் பிரயாணம் (பகுதி 1) | மத்தேயு 11:28 | வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். | இஸ்ரவேல் புத்திரருடைய கூக்குரலைக் கேட்டு, அவர்களுடைய உபத்திரவங்களிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் அவர்கள் பஸ்கா ஆசரித்ததின் மூலம் தேவன் அவர்களை விடுதலையாக்கினார். அதுபோலவே, நம்முடைய பாவங்களுக்காக நாம் மனஸ்தாபப்பட்டு, கர்த்தராகிய இயேசுவை நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தேவனை நோக்கிக் கூப்பிடும்போது, நம்மை எல்லாவித அடிமைத்தனங்களிலிருந்தும் விடுதலையாக்க அவர் வல்லவராயிருக்கிறார். |
| | | 1 யோவான் 1:9 | நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். | |
| 2 | இஸ்ரவேலின் பிரயாணம் (பகுதி 2) | ரோமர் 6 : 11-13 | அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள், ஆகையால் நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள். | நாம் தொடக்கத்தில் கிடைக்கிறதான இரட்சிப்பின் சந்தோஷத்தில் மட்டும் திருப்தியடையாமல், தண்ணீர் ஞானஸ்நானத்தில் தேவ ஆலோசனைக்குக் கீழ்ப்படிய ஆயத்தமுள்ளவர்களாய் இருந்து, ஜெய ஜீவியம் செய்ய வாஞ்சிக்க வேண்டும். |
| | | கலா 2 : 20 | கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன் ஆயினும், பிழைத்திருக்கிறேன் இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். | |
| 3 | இஸ்ரவேலின் பிரயாணம் (பகுதி 3) | யாத் 15:26 | நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க்கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன், நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார். | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 11 பேதுரு 1:4 : | இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. | |
| **4** | இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி 4) | யாக்கோபு 1: 2, 3 | என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும் என்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். | நாம் பரீட்சைகளின் மத்தியில் முறுமுறுக்காது, பலவிதமான சோதனைகளைச் சந்திக்கும்போது அவைகள் யாவையும் மிகுந்த சந்தோஷமாக எண்ணவேண்டும். நாம் பின்தங்கிக் காணப்படுவோமானால், பிசாசு நம் ஆவிக்குரிய ஜீவியத்தை அழித்துப் போடுவான். எனவே பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாக நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். |
| **5** | இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி 5) | எபிரெயர் 5 : 4 | மேலும், ஆரோனைப்போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை. | நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் இஸ்ரவேல் ஜனங்களைப் போலவே நாம் பலவிதமான அனுபவங்களின் வழியாகக்கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. நாம் எல்லாக் காரியங்களையும் வழக்கம் போலவே செய்து கொண்டு போகாமல், ஒவ்வொரு முறையும் தேவனுடைய பூரணமான சித்தம் இன்னதென்று அறிந்து நிச்சயித்துக் கொள்ளும்படி நம் மனம் புதிதாகிக் கொண்டே இருக்க எப்போதும் கவனமாக இருக்க வேண்டும். |
| | | 1 கொரி 10:11, 12 | இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.<br>இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன். | |
| **6** | இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி 6) | எபிரெயர் 6:11,12 | நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து,<br>உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம். | விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் வாக்குத்ததங்களைச் சுதந்தரித்துக் கொள்பவர்களை நாம் பின்பற்றுகிறவர்களாயிருந்து, பயத்தோடும், நடுக்கத்தோடும் நம் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட்டு, முடிவு பரியந்தமும் அதே ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டும். |
| **7** | இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி 7) | எரேமியா 12:5 | நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப்பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்ன செய்வாய்? | நாம் எப்போதும், சத்தியத்திற்காகப் போராடுகிற தேவ ஊழியரோடு சேர்ந்து நின்று, நம்முடைய பாதையில் வரும் சோதனைகளுக்கும் முகங்காட்ட ஆயத்தமாயிருந்து அவற்றை ஜெயிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **8** | அப். பவுலின் மூன்றாம் சுவிசேஷப் பிரயாணம் | அப்போ 20 : 24 | ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன், என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன். | கர்த்தருக்கு ஊழியஞ்செய்யும்படி புறப்படுகிற ஒருவன், கர்த்தருக்காக எந்தச் சூழ்நிலையையும் சந்திக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். சில சமயங்களில் ஆவியானவரால் நடத்தப்பட்டு செல்லும் இடங்களிலுங்கூட உபத்திரவம் உண்டாகலாம். எனினும் அவன் சந்தோஷமாகப் பாடுபட ஆயத்தமாயிருந்து, எல்லா சந்தர்ப்பங்களிலும் தேவசித்தம் செய்யவேண்டும். |
| **9** | கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (பகுதி 1) | 1 தெச 5 : 23, 24 | சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்ததமாக்குவாராக, உங்கள் ஆவி, ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார். | |
| **10** | கிறிஸ்துவின் இரண்டாம் வரகை (பகுதி 2) | சகரியா 12 : 10 | நான் தாவீது குடும்பத்தாரின் மேலும், எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காகப் புலம்பி ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள். | *நாம் கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கென்று அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய கர்த்தர் தம் மணவாட்டியைச் சேர்த்துக்கொள்ளும்படி எந்த நாழிகையில் வருவாரென்று நமக்குத் தெரியாது. ஆகையால் நாம் விழித்திருந்து, அவரைச் சந்திக்க ஆயத்தமாகக் காணப்பட வேண்டும்.* |
| | | மத்தேய 24:42-44 | உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்.<br>திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டை கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார் ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள். | |
| **11** | வெளிப்படுத்தின விசேஷத்திற்கு ஒரு முன்னுரை | வெளி 1:3 | இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது. | நமக்கென்று நித்தியத்தில் ஆயத்தம் பண்ணப்பட்டுள்ளதைப் பற்றிய இன்னும் அதிக தெளிவானதும் பிரகாசமானதுமான தரிசனத்தைப் பெற்றுக் கொண்டு, அந்த மகிமையான நித்திய சுதந்தரத்துக்காக நம்மை நாம் ஆயத்தப்படுத்திக் கொள்ள இந்தப் புத்தகத்தை நாம் படிக்க வெண்டியது மிகவும் இன்றியமையாததாகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **12** | உயர்த்தெழுதலின் ஏழு வரிசைகள் (பகுதி 1) | 1 பேதுரு 1:3-5 | *நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.*<br>*அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாக்கும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.*<br>*கடைசிக் காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.* | கிறிஸ்துவின் இரகசிய வருகையின போது மறுரூபமாகுதல் அல்லது அப்போது நடைபெறும். உயிர்த்தெழுதலில் பங்கு பெறுதலே நம்முடைய குறிக்கோளாக இருக்க வேண்டும். |
| | | 1 தெச 4 : 16, 17 | *ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்: அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.*<br>*பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.* | |
| **13** | உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள் (பகுதி 2) | வெளி 20 : 4-6 | அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன் அவைகளின் மேல் உட்கார்ந்தார்கள் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும், தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்.<br>மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல் .<br>முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான். இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராய் இருந்து, அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள். | முதலாம் உயிர்த்தெழுதலின் இரண்டாம் வரிசையில் நாம் பங்குள்ளவர்களாகும்படி நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் முழுவதுமாக பரிசுத்தமாக்கப்பட்டு, குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதற்காக, நாம் நம்மைச் சமாதானத்தின் தேவனுக்கு முற்றிலுமாக ஒப்புக்கொடுக்க வேண்டும், |

| | | | | |
|---|---|---|---|---|
| **14** | உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள் (பகுதி 3) | பிலிப்பியர் 1: 9-11 | மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும், தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன். | தேவன் நம்மை இரட்சித்து, பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்து, பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் வைத்திருப்பதின் நோக்கம், நாம் பொதுவான உயிர்த்தெழுதலில் பங்கு பெறும்படியாக அல்ல: கிறிஸ்துவின் மணவாட்டிக்குரிய உயிர்த்தெழுதலின் வரிசையில் காணப்படுவதற்கே ஆகும். |
| **15** | இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல் | எபி. 13 : 12 - 14 | அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ் செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக் கடவோம். நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை, வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம். | நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்பத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவங்களற கழுவப்படும் நாம், முற்றிலும் பரிசுத்தமாக்கப்படும் படியாக, பாவங்களிலிருந்தும் பாவிகளிலிருந்தும் நம்மை நாமே வேறுபிரித்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நாம் தீட்டுப்பட்டுப் போவோம். நம்மைப் பரிசுத்தமாக்க கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் நமக்காகச் சிந்தப்பட்டது. அவருடைய விலையேறப் பெற்ற இரத்தத்தினால் நாம் பூரண பரிசுத்தமாகுதலுக்குக் கடந்து போக வேண்டும். |
| **16** | திரித்துவ தேவன் (பகுதி 1) | I யோவான் 5 : 7 | பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்; | |
| | | யோவான் 17 : 21 | அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன் | |
| **17** | திரித்துவ தேவன் (பகுதி 2) | 2 கொரி 13 : 14 | கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். | மனுஷன் தமக்கு முன்பாக அன்பில் பரிசுத்தமுள்ளவனும் குற்றமில்லாதவனுமாயிருப்பதற்காக தேவன் உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்து இயேசுவுக்குள் அவனைத் தெரிந்துகொண்டார். எனவே மனிதன் தன் ஆவி ஆத்துமா சரீரத்தில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டு, கர்த்தராகிய இயேசு வரும்போது குற்றமற்றவனாய்க் காக்கப்பட்டிருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **18** | கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியம் | எபே 5: 25 - 27 | புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூறுங்கள் அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். | கிறிஸ்து பரலோகத்தின் சகல மகிமைகளையும் விட்டு தம்மைத்தாமே சபைக்காக ஒப்புக்கொடுத்ததுபோல, நாமும் அவரில் அன்புகூரும்படியாகவும், அவருடைய பெரிதான அன்புக்கு பாத்திரராகக் காணப்படும்படியாகவும், நம்முடைய சகல சிற்றின்பங்களையும் தியாகம் செய்யவேண்டும். |
| **19** | தேவனுடைய வாசஸ்தலங்கள் (பகுதி 1) | ஏசாயா 57 : 15 | நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்தஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிற்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன் | |
| **20** | தேவனுடைய வாசஸ்தலங்கள் (பகுதி 2) | எபே 2:19 - 22 | ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள் அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார் அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள். | |

1 L1 1. *யாத்திராகமம் 13:21*

அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்.

1 L1 2. *லேவியராகமம் 18:5*

ஆகையால் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள்; அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்; நான் கர்த்தர்.

1 L1 3. *லேவியராகமம் 26:6*

தேசத்தில் சமாதானம் கட்டளையிடுவேன்; தத்தளிக்கப்பண்ணுவார் இல்லாமல் படுத்துக்கொள்வீர்கள்; துஷ்ட மிருகங்களைத் தேசத்தில் இராதபடிக்கு ஒழியப்பண்ணுவேன்; பட்டயம் உங்கள் தேசத்தில் உலாவுவதில்லை.

1 L1 4. *1 சாமுவேல் 12:24*

நீங்கள் எப்படியும் கர்த்தருக்குப் பயந்து, உங்கள் முழுஇருதயத்தோடும் உண்மையாய் அவரைச் சேவிக்கக்கடவீர்கள்; அவர் உங்களிடத்தில் எவ்வளவு மகிமையான காரியங்களைச் செய்தார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

1 L1 5. *2 சாமுவேல் 22:30*

உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்.

1 L1 6. *2 சாமுவேல் 22:34*

அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி, என் உயர் தலங்களில் என்னை நிறுத்துகிறார்.

2 L2 7. *1 நாளாகமம் 16:30*

பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள்; அவர் பூச்சக்கரத்தை அசையாதபடிக்கு உறுதிப்படுத்துகிறவர்.

2 L2 8. *யோபு 19:25*

என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.

2 L2 9. *சங்கீதம் 2:11*

பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள்.

2 L2 10. *சங்கீதம் 9:18*

எளியவன் என்றைக்கும் மறக்கப்படுவதில்லை; சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை ஒருபோதும் கெட்டுப் போவதில்லை.

2 L2 11. *சங்கீதம் 19:8*

கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது.

2 L2 12. *சங்கீதம் 25:12*

கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார்.

3 L3 13. *சங்கீதம் 29:11*

கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார்; கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்.

3 L3 14. *சங்கீதம் 31:15*

என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது; என் சத்துருக்களின் கைக்கும் என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும்.

3 L3 15. *சங்கீதம் 33:5*

அவர் நீதியிலும் நியாயத்திலும் பிரியப்படுகிறார்; பூமி கர்த்தருடைய காருணியத்தினால் நிறைந்திருக்கிறது.

3 L3 16. *சங்கீதம் 34:7*

கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.

3 L3 17. *சங்கீதம் 34:19*

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.

3 L3 18. *சங்கீதம் 36:7*

தேவனே, உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது! அதினால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள்.

4 L4 19. *சங்கீதம் 37:7*

கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு; காரியசித்தியுள்ளவன்மேலும் தீவினைகளைச் செய்கிற மனுஷன்மேலும் எரிச்சலாகாதே.

4 L4 20. *சங்கீதம் 41:1*

சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.

4 L4 21. *சங்கீதம் 43:3*

உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்; அவைகள் என்னை நடத்தி, உமது பரிசுத்த பர்வதத்திற்கும் உமது வாசஸ்தலங்களுக்கும் என்னைக் கொண்டுபோவதாக.

4 L4 22. *சங்கீதம் 45:6*

தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.

4 L4 23. *சங்கீதம் 48:2*

வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது, அதுவே மகாராஜாவின் நகரம்.

4 L4 24. *சங்கீதம் 52:8*

நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப்போலிருக்கிறேன், தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்கிறேன்.

5 L5 25. *சங்கீதம் 68:20*

நம்முடைய தேவன் இரட்சிப்பை அருளும் தேவனாயிருக்கிறார்; ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு.

5 L5 26. *சங்கீதம் 71:5*
கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், என் சிறுவயதுதொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்.

5 L5 27. *சங்கீதம் 73:1*
சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார்.

5 L5 28. *சங்கீதம் 73:24*
உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்.

5 L5 29. *சங்கீதம் 73:25*
பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை.

5 L5 30. *சங்கீதம் 84:5*
உம்மிலே பெலன்கொள்ளுகிறமனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்.

---

6 L6 31. *சங்கீதம் 87:3*
தேவனுடைய நகரமே! உன்னைக் குறித்து மகிமையான விசேஷங்கள் வசனிக்கப்படும்.

6 L6 32. *சங்கீதம் 91:1*
உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.

6 L6 33. *சங்கீதம் 91:2*
நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.

6 L6 34. *சங்கீதம் 91:3*
அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார்.

6 L6 35. *சங்கீதம் 91:4*
அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.

6 L6 36. *சங்கீதம் 97:11*
நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது.

7 L7 37. *சங்கீதம் 102:15*
கர்த்தர் சீயோனைக் கட்டி, தமது மகிமையில் வெளிப்படுவார்

7 L7 38. *சங்கீதம் 121:1*
எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.

7 L7 39. *சங்கீதம் 121:2*
வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை

7 L7 40. *சங்கீதம் 121:3*
உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார்.

7 L7 41. *சங்கீதம் 121:4*
இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை.

7 L7 42. *சங்கீதம் 121:5*
கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்.

8 L8 43. *சங்கீதம் 121:6*
பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை.

8 L8 44. *சங்கீதம் 121:8*
கர்த்தர் உன் போக்கையும் உன்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங்

8 L8 45. *நீதிமொழிகள் 1:33*
எனக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான்.

8 L8 46. *நீதிமொழிகள் 6:23*
கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதகசிட்சையே ஜீவவழி.

8 L8 47. *நீதிமொழிகள் 12:8*
தன் புத்திக்குக்தக்கதாக மனுஷன் புகழப்படுவான்; மாறுபாடான இருதயமுள்ளவனோ இகழப்படுவான்.

8 L8 48. *நீதிமொழிகள் 12:21*
நீதிமானுக்கு ஒரு கேடும் வராது; துன்மார்க்கரோ தீமையினால் நிறையப்படுவார்கள்.

8 L8 49. *நீதிமொழிகள் 13:20*
ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்; மூடருக்குத் தோழனோ

9 L9 50. *நீதிமொழிகள் 14:29*
நீடிய சாந்தமுள்ளவன் மகாபுத்திமான்; முற்கோபியோ புத்தியீனத்தை விளங்கப்பண்ணுகிறான்.

9 L9 51. *நீதிமொழிகள் 15:32*
புத்திமதியைத் தள்ளிவிடுகிறவன் தன் ஆத்துமாவை வெறுக்கிறான்; கடிந்துகொள்ளுதலைக் கேட்கிறவனோ ஞானமடைவான்.

9 L9 52. *நீதிமொழிகள் 16:5*
மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்; கையோடே கைகோத்தாலும் அவன் தண்டனைக்குத் தப்பான்.

9 L9 53. *நீதிமொழிகள் 17:22*
மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்; முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்.

9 L9 54. *நீதிமொழிகள் 18:12*
அழிவு வருமுன் மனுஷனுடைய இருதயம் இறுமாப்பாயிருக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை.

9 L9 55. *நீதிமொழிகள் 21:2*
மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும்; கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப்பார்க்கிறார்.

9 L9 56. *நீதிமொழிகள் 28:9*
வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும்

10 L10 57. *நீதிமொழிகள் 29:15*

பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்; தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான்.

10 L10 58. *பிரசங்கி 7:8*

ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது; பெருமையுள்ளவனைப்பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன்.

10 L10 59. *ஏசாயா 8:13*

சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம்பண்ணுங்கள்; அவரே உங்கள் பயமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக.

10 L10 60. *ஏசாயா 28:16*

ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்.

10 L10 61. *ஏசாயா 33:17*

உன் கண்கள் ராஜாவை மகிமை பொருந்தினவராகக் காணும், தூரத்திலுள்ள தேசத்தையும் பார்க்கும்.

10 L10 62. *ஏசாயா 40:29*

சோர்ந்துபோகிறவனுக்கு அவர்பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்.

11 L11 63. *ஏசாயா 43:1*

இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப்பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்.

11 L11 64. *ஏசாயா 53:5*

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

11 L11 65. *ஏசாயா 58:11*

கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்.

11 L11 66. *ஏசாயா 59:1*

இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை.

11 L11 67. *எரேமியா 33:6*

இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்.

11 L11 68. *எசேக்கியேல் 18:32*
மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

11 L11 69. *யோனா 2:8*
பொய்யான மாயையைப் பற்றிக்கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள்.

12 L12 70. *மீகா 6:8*
மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயமஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்

12 L12 71. *நாகூம் 1:7*
கர்த்தர் நல்லவர், இக்கட்டுநாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்.

12 L12 72. *சகரியா 8:2*
நான் சீயோனுக்காக கடும் வைராக்கியங்கொண்டேன்; அதற்காக மகா உக்கிரமான வைராக்கியங்கொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

12 L12 73. *சகரியா 8:16*
நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள் என்னவென்றால்: அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள்; உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள்.

12 L12 74. *மத்தேயு 5:8*
இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

12 L12 75. *மத்தேயு 5:14*
நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.

12 L12 76. *மத்தேயு 10:16*
ஆடுகளை ஓய்நாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போலவினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்.

13 L13 77. *மாற்கு 11:25*
நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு [illegible]

13 L13 78. *லூக்கா 6:32*
உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே.

13 L13 79. *யோவான் 3:3*
இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

13 L13 80. *யோவான் 10:10*

திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும்

13 L13 81. *அப்போஸ்தலர் 17:30*

அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.

13 L13 82. *ரோமர் 8:10*

மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்.

13 L13 83. *ரோமர் 8:14*

மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.

14 L14 84. *ரோமர் 14:8*

நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்.

14 L14 85. *2 கொரிந்தியர் 5:17*

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

14 L14 86. *எபேசியர் 4:32*

ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

14 L14 87. *2 தெசலோனிக்கேயர் 3:13*

சகோதரரே, நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்துபோகாமலிருங்கள்.

14 L14 88. *1 யோவான் 3:8*

பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.

14 L14 89. *3 யோவான் 11*

பிரியமானவனே, நீ தீமையானதைப் பின்பற்றாமல், நன்மையானதைப் பின்பற்று, நன்மைசெய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான்; தீமைசெய்கிறவன் தேவனைக் காணவில்லை.

14 L14 90. *வெளிப்படுத்தின விசேஷம் 22:14*

ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.

# 9 - ஆம் வகுப்பு - விசேஷித்த வேத பகுதி வாசிப்பு - நாட்காட்டி

| பாடம் | வசனக் குறிப்புகள் | வசன எண்ணிக்கை | உள்ளடக்கத்தின் சுருக்கம் |
|---|---|---|---|
| | | | **பாகம் 1: இஸ்ரவேல் கானானை முற்றிலுமாக முறியடிக்க தவறியதும் பின்னடைந்ததும்** |
| L 1 | நியாயாதிபதிகள் 1: 1 - 20 | 20 | I. இஸ்ரவேல் முற்றிலும் முறியடிக்க தவறியது<br>A. யூதாவின் தவறு |
| L2<br>L2 | நியாயாதிபதிகள் 1: 21 - 21<br>நியாயாதிபதிகள் 1: 22 -29 | 1<br>8 | B. பென்யமின் தவறு<br>C. யோசேப்பின் கோத்திரத்தாருடைய தவறு |
| L2<br>L3 | நியாயாதிபதிகள் 1: 30 - 30<br>நியாயாதிபதிகள் 1: 31 - 32 | 1<br>2 | A. செபுலோனின் தவறு<br>B. ஆசேரின் தவறு |
| L3<br>L3 | நியாயாதிபதிகள் 1: 33 - 33<br>நியாயாதிபதிகள் 1: 34 - 36 | 1<br>3 | C. நப்தலியின் தவறு<br>D. தானின் தவறு |
| L4 | நியாயாதிபதிகள் 2: 1 - 5 | 5 | II. தேவனின் நியாயத்தீர்ப்பு<br>A. தூதனானவர் நியாயத்தீர்ப்பு உரைத்தது |
| L4<br>L4 | நியாயாதிபதிகள் 2: 6 - 10<br>நியாயாதிபதிகள் 2: 11 -19 | 5<br>9 | B. தேவனுக்கு பயந்த சந்ததியார் மரித்தனர்<br>C. தேவ நியாயத்தீர்ப்பு விவரிக்கப்படுதல் |
| L5<br>L5 | நியாயாதிபதிகள் 2: 20 -36<br>நியாயாதிபதிகள் 3: 1 -4 | 17<br>4 | D. சத்துரு சோதனைக்காக மீதம் வைக்கப்பட்டது<br>சத்துரு சோதனைக்காக மீதம் வைக்கப்பட்டது |
| | | | பாகம் - 2: 7 சுழற்ச்சிகளில் இஸ்ரவேலுக்கு மீட்பு<br>I. தெற்கு இயக்கம் |
| L6<br>L6 | நியாயாதிபதிகள் 3: 5 -11<br>நியாயாதிபதிகள் 3: 12 -30 | 7<br>19 | A. நியாயதிபதி ஒத்னியேல்<br>B. நியாயதிபதி ஏகூத் |
| L6<br>L | நியாயாதிபதிகள் 3: 31 -31 | 1 | C. நியாயதிபதி சம்கார்<br>II. வட இயக்கம் |
| L7<br>L7 | நியாயாதிபதிகள் 4: 1 - 11<br>நியாயாதிபதிகள் 4: 12 - 24 | 11<br>13 | A. தெபோராளும் பாராக்கும் அழைக்கப்பட்டது<br>B. கானானியர் முறியடிக்கப்பட்டது |
| L8<br>L | நியாயாதிபதிகள் 5: 1 - 31 | 31 | C. தெபோராள் பாரக் பாடின பாட்டு<br>III. மத்திய இயக்கம் |
| L9<br>L9 | நியாயாதிபதிகள் 6: 1 - 40<br>நியாயாதிபதிகள் 7: 1 - 25 | 40<br>25 | A. நியாயதிபதி கிதியோன்<br>நியாயதிபதி கிதியோன் |
| L9<br>L10 | நியாயாதிபதிகள் 8: 1 - 32<br>நியாயாதிபதிகள் 8: 33 - 35 | 32<br>3 | நியாயதிபதி கிதியோன்<br>B. நியாயதிபதி அபிமெலேக்கு |
| L10<br>L11 | நியாயாதிபதிகள் 9: 1 - 57<br>நியாயாதிபதிகள் 10: 1 - 2 | 57<br>2 | நியாயதிபதி அபிமெலேக்கு<br>C. நியாயதிபதி தோலா |
| L11<br>L | நியாயாதிபதிகள் 10: 3 - 5 | 3 | D. நியாயதிபதி யாவீர்<br>IV. கிழக்கு இயக்கம் |
| L12<br>L13 | நியாயாதிபதிகள் 10: 6 - 18<br>நியாயாதிபதிகள் 11: 1 - 40 | 13<br>40 | A. இஸ்ரவேல் பாவம் செய்தது<br>B. இரட்சிப்பு - யெப்தா |
| L13 | நியாயாதிபதிகள் 12: 1 - 6 | 6 | இரட்சிப்பு - யெப்தா<br>V. 2வது வட இயக்கம் |
| L14<br>L14 | நியாயாதிபதிகள் 12: 7 - 10<br>நியாயாதிபதிகள் 12: 11- 12 | 4<br>2 | A. நியாயதிபதி இப்சான்<br>B. நியாயதிபதி ஏலோன் |
| L14 | நியாயாதிபதிகள் 12: 13 -15 | 3 | C. நியாயதிபதி அப்தோன்<br>VI. மேற்கு இயக்கம் |
| L15<br>L15 | நியாயாதிபதிகள்13: 1 - 25<br>நியாயாதிபதிகள்14: 1 - 20 | 25<br>20 | A. சிம்சோனின் அதிசய பிறப்பு<br>B. சிம்சோனின் பாவத்திற்குட்பட்ட விவாகம் |
| L15<br>L16 | நியாயாதிபதிகள்15: 1 - 20<br>நியாயாதிபதிகள்16: 1 - 31 | 20<br>31 | C. சிம்சோனின் நியாயம் விசாரித்தல்<br>D. சிம்சோனின் தோல்வி |
| | | | பாகம் - 3: புறஜாதியரின் பாவம் செய்த இஸ்ரவேலின் பொல்லாப்பு<br>I. விக்கிரகாரதனையினால் தோல்வி |
| L17<br>L17 | நியாயாதிபதிகள்17: 1 - 13<br>நியாயாதிபதிகள்18: 1 - 31 | 13<br>31 | A. தனிப்பட்ட மனிதனின் விக்கிரக வழிபாட்டின் எடுத்துகாட்டு<br>B. கோத்திரத்தாரின் விக்கிரக வழிபாட்டின் எடுத்துகாட்டு |

| பாடம் | வசனக் குறிப்புகள் | வசன எண்ணிக்கை | உள்ளடக்கத்தின் சுருக்கம் |
|---|---|---|---|
| L<br>L18 | நியாயாதிபதிகள்19: 1 - 10 | 10 | II. ஒழுக்கேட்டினால் வந்த தோல்வி<br>A. தனிப்பட்ட ஒழுக்ககேடு - எடுத்துக்காட்டு |
| L18 | நியாயாதிபதிகள்19: 11 - 30 | 20 | B. கோத்திரமாக ஒழுக்க நெறி தவறியது<br>III. யுத்தத்தினால் தோல்வி |
| L19<br>L20 | நியாயாதிபதிகள் 20: 1 - 48<br>நியாயாதிபதிகள் 21: 1 -25 | 48<br>25 | A. இஸ்ரவேலுக்கும் தானுக்கும் வந்த யுத்தம்<br>B. யுத்தத்திற்கு பின் இஸ்ரவேலுக்கு தோல்வி |

## ஆண்டுத் தேர்வு வினாக்கள் கூட்டமைப்பு

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1 | 1. | இஸ்ரவேலர் எகிப்தை விட்டதின் காரணங்களை விளக்குக. அதன் ஆவிக்குரிய அர்த்தத்தையும் எழுதுக. (அல்லது) இஸ்ரவேலர் எகிப்தை விட்டதின் மூன்று/நான்கு காரணங்களைக் குறிப்பிடு. (அல்லது) இஸ்ரவேலர் எகிப்தை விட்டதின் நான்கு காரணங்களை குறிப்பிடு. (அல்லது) இஸ்ரவேலர் எகிப்தை விட்டதின் முதல் இரண்டு காரணங்களை ஆவிக்குரிய கருத்துடன் எழுதுக. | 2008, 20 2012, 20 2014, 20 2003. |
| 1. | 2. | கிறிஸ்து நமக்காக பஸ்காவாக (பஸ்கா ஆட்டுக்குட்டியாக) பலியிடப்பட்டது ஏன்? (அல்லது) இஸ்ரவேலர் எகிப்திலிருந்து தாங்கள் விடுதலையாகும்படி ஆசரித்த பஸ்காவின் மூலம் நமக்கு வெளிப்படும் ஆவிக்குரிய கருத்து என்ன? (அல்லது) புதிய ஏற்பாட்டு பஸ்கா யார்? வசன ஆதாரங்கள் தருக. ஏசாயா 53:5-இல் தீர்க்கதரிசியாகிய ஏசாயா அவரைப் பற்றி கூறியிருப்பதை எழுதுக. (அல்லது) இஸ்ரவேலர் பஸ்கா-வை ஆசரித்தது, புதிய ஏற்பாட்டில் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் எதைக் காட்டுகிறது என்பதை எவையேனும் இரண்டு வசன ஆதாரங்களுடன் விளக்கு. (அல்லது) வனாந்தரத்தில் தேவனுக்கு பலி செலுத்தினார்கள் இது நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் எதைக் காட்டுகிறது? (அல்லது) புதிய ஏற்பாட்டில் பஸ்காவை ஆசரிப்பது எதைக் காட்டுகிறது? வசன ஆதாரம் தருக. | 2011, 20 2015, 20 2003, |

| | எண் | வினாக்கள் | கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1. | 3. | 'எகிப்து' எதற்கு அடையாளமாயிருக்கிறது? (அல்லது) 'எகிப்து' 'பார்வோன்' இவைகள் எவற்றிற்கு அடையாளமாயிருக்கின்றன? (அல்லது) பின்வருவனவற்றின் ஆவிக்குரிய அர்த்தம் என்ன? அ) எகிப்து ஆ) பார்வோன் | 2016, 2001 |
| 1. | 4. | தேவன் பார்வோனையும் எகிப்து தேசத்தையும் ஏன் வாதித்தார்? (அல்லது) கர்த்தர் பார்வோனையும் எகிப்து தேசத்தையும் ஏன் வாதித்தார்? ஏதேனும் நான்கு காரணங்களைக் கூறுக. (அல்லது) கர்த்தர் பார்வோனையும் எகிப்து தேசத்தையும் எந்தெந்த காரணங்களுக்காக வாதித்தார்? இதன் மூலம் நாம் கற்றுக்கொள்வது என்ன? | 200[illegible] 200[illegible] |
| 1. | 5. | எகிப்திலிருந்து இஸ்ரவேலர் விடுதலையாக்கப்பட்ட விதத்தை ஆவிக்குரிய அனுபவங்களோடு விவரி? (அல்லது) இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து விடுதலையான இரண்டு வழிகளைக் குறிப்பிடு. ஏதேனும் ஒன்றை வசன ஆதாரத்துடன் விளக்குக (அல்லது) இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட விதத்தை வசன ஆதாரத்துடன் விளக்குக? | 2004, 2001 |
| 1. | 6. | இஸ்ரவேலரின் பிரயாணம் எதற்கு மாதிரியாயிருக்கிறது? (அல்லது) எதற்கு இஸ்ரவேலரின் பிரயாணம் மாதிரியாயிருக்கிறது. | 2016. |

| | எண் | வினாக்கள் | கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 2. | 1. | ஏ.ரோத் என்ற இடத்தில் சம்பவித்தது என்ன? இதின் ஆவிக்குரிய அர்த்தத்தையும் விளக்குக? (அல்லது) 'ஏரோத்' - குறிப்பு வரைக. தேவன் இஸ்ரவேலரை விடுதலையாக்கும் முன் அவர்கள் என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டியதாயிருந்தது? அவற்றின் ஆவிக்குரிய கருத்துகளை எழுது. (அல்லது) இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தண்டையில் தேவன் தங்களை விடுதலையாக்கும் முன் செய்ய வேண்டியதாயிருந்த இரு காரியங்களையும் அவை நமக்கு வெளிப்படுத்தும் ஆவிக்குரிய அனுபவங்களையும் எழுதுக. (அல்லது) சிவந்த சமுத்திரத்திற்கு அருகில் வந்த இஸ்ரவேலரை எகிப்தியர் பின்தொடர்ந்த சந்தர்ப்பத்தில் தேவன் தங்களை விடுதலையாக்கும் முன்பு அவர்கள் செய்ய வேண்டியதாயிருந்த இரண்டு காரியங்கள் யாவை? அவற்றின் ஆவிக்குரிய கருத்துகளை எழுது. (அல்லது) 'ஏ.ரோத்' - குறிப்பு வரைக. | 2012<br>2014<br>2015<br>2002<br>2003<br>2004 |
| 2. | 2. | சுக்கோத்தில் இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்ட கட்டளை யாது? (அல்லது) இஸ்ரவேல் புத்திரருக்குக் கர்த்தர் சுக்கோத்தில் கொடுத்த கட்டளை என்ன? அது கொடுக்கப்பட்ட காரணம் என்ன? (அல்லது) இஸ்ரவேலர் பல்வேறு இடங்களில் பாளயமிறங்கினது எதைக் குறிக்கிறது? சுக்கோத் குறிப்பு வரைக. (அல்லது) 'சுக்கோத்' - குறிப்பு வரைக. | 201[illegible]<br>2014<br>2015<br>200[illegible]<br>200[illegible]<br>200[illegible] |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 2. | 3. | சிவந்த சமுத்திரத்தைக் கடத்தல் என்பது எதற்கு நிழலாட்டமாயிருக்கிறது? (அல்லது) தண்ணீர் ஞானஸ்நானத்தில் நம்முடைய பாவ சுபாவத்துக்குச் சம்பவிப்பது என்ன? (அல்லது) சிவந்த சமுத்திரத்தைக் கடத்தலின் ஆவிக்குரிய கருத்து என்ன? | 201[illegible] 200[illegible] |
| 2. | 4. | இஸ்ரவேல் ஜனங்கள் சிவந்த சமுத்திரத்திற்கு அருகில் இருந்த போது தேவன் அவர்களுக்கு கொடுத்த இரண்டு கட்டளைகள் என்ன? (அல்லது) இஸ்ரவேல் புத்திரருக்கு சிவந்த சமுத்திரத்திற்கு அருகில் இருந்த போது தேவன் அவர்களுக்கு கொடுத்த இரண்டு கட்டளைகள் என்ன? (அல்லது) இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தைக் கடக்கும்போது தேவன் கொடுத்த இரண்டு கட்டளை என்ன? | 200[illegible] 200[illegible] |
| 2. | 5. | இஸ்ரவேலர் எகிப்தை விட்டு கானானை சென்றடையும் வரை கால்நடையாய் தங்கள் பிரயாணத்தை தொடர்ந்தார்கள் இது ஆவிக்குரிய ஜீவியத்தில் எதைக் காட்டுகிறது? (அல்லது) பின்வருபவை ஆவிக்குரிய பிரகாரமாக எவற்றை வெளிப்படுத்துகின்றன? (i) இஸ்ரவேலர் கானானை சென்றடையும் வரை கால்நடையாய் பிரயாணம் செய்தது. (ii) இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்தது. | 2009 |
| 2. | 6. | சிவந்த சமுத்திரத்தைக் கடந்ததும் இஸ்ரவேலர் பாடின ஜெயகீதம் நமது ஜீவியத்தில் எதை வெளிப்படுத்துகிறது? | 2008 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | கேட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 2. | 7. | இஸ்ரவேலரின் பிரயாணத்திற்கு தேவன் வனாந்தர வழியை ஏன் தேர்ந்தெடுத்தார்? (அல்லது) ஆவிக்குரிய பிரகாரமாக வனாந்தரம் எதைக் குறிக்கிறது? விவரி. இஸ்ரவேலரின் பிரயாணத்தில் அவர்கள் கடந்த நான்கு வனாந்தரங்கள் யாவை? | 201 |
| 2. | 8. | இஸ்ரவேலரின் பிரயாணத்தின் போது கர்த்தர் பகலில் மேக ஸ்தம்பத்திலும், இரவில் அக்கினி ஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றது எதைக் காட்டுகிறது? (அல்லது) கர்த்தர் பகலில் மேகஸ்தம்பத்திலும் இரவில் அக்கினி ஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றது எதைக் கூறுகிறது? | 200 |
| 2. | 9. | 'இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைக் கடத்தல்' இதன் ஆவிக்குரிய அர்த்தத்தை வசன ஆதாரத்துடன் எழுது? (அல்லது) சிவந்த சமுத்திரத்தைக் கடத்தல் விவரி? இப்பாடத்தின் போதனையை எழுது? | 200 |
| 3. | 1. | இஸ்ரவேல் ஜனங்களுக்கு மாராவில் சம்பவித்தது என்ன? அங்கே தேவன் அவர்களுக்கு கட்டளையிட்ட நியமங்களும், நியாயங்களும் யாவை? தெய்வீக சுகத்தை யார் அனுபவிக்கக் கூடும் என்பதை விளக்குக. (அல்லது) 'மாரா' - வசன ஆதாரங்களுடன் விவரி? (அல்லது) மாராவைப் பற்றியும் அதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளுகிற ஆவிக்குரியப் பாடங்களைப் பற்றியும் விவரி? (அல்லது) 'மாரா' - குறிப்பு வரைக. | 201.<br>2016<br>200<br>200 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆண்டு |
| --- | --- | --- | --- |
| 3. | 2. | "தொபிகா" என்பதன் பொருள் என்ன? (அல்லது) (i) தொபிகா (ii) ஏத்தாம் என்பவற்றின் பொருளை எழுதுக. (அல்லது) பின்வருவனவற்றின் பொருள் எழுதுக. (a) தொபிகா (b) ஆஷுராஸ் (அல்லது) (i) சீன் வனாந்தரம் (ii) தொபிகா குறிப்பு வரைக. (அல்லது) சீன் வனாந்திரம் மற்றும் ஆஷுராஸ் குறிப்பு வரைக. (அல்லது) சூர் வனாந்திரம் | 201[illegible]<br>200[illegible]<br>200[illegible] |
| 3. | 3. | ஏலீம் - குறிப்பு வரைக. (அல்லது) 'ஏலீம்' - சிறுகுறிப்பு வரைக. | 20[illegible]<br>200[illegible] |
| 3. | 4. | வனாந்தரம் நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் எதைக் குறிக்கிறது? (அல்லது) 'இஸ்ரவேல் புத்திரர் சூர் வனாந்தரத்தைக் கடந்தது' - இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் ஆவிக்குரிய சத்தியம் என்ன? | 2011 |
| 3. | 5. | தேவனுடைய வசனத்திலிருந்து புதிய வெளிப்படுத்தல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நாம் எவற்றை பேணி வளர்த்துக் கொள்ள வேண்டும்? (அல்லது) தேவனுடைய வசனத்திலிருந்து புதிய வெளிப்படுத்தல்களைப் பெற்றுக் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் அதை அலட்சியமாக விட்டுவிட்டால் என்ன சம்பவிக்கும்? | 2014 |
| 3. | 6. | மாராவின் தண்ணீர் எவ்வாறு மதுரமாயிற்று? (அல்லது) மாராவின் தண்ணீர் எவ்விதமாய் மதுரமாக்கப்பட்டது என்பதை விவரி? இவ்விடத்தில் தேவன் தமது ஜனத்துக்கு அருளிய வாக்குத்தத்தத்தைக் குறிப்பிடு. ஆவிக்குரிய பிரகாரமாக வெளிப்படுத்துவது என்ன? | 200[illegible] |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்க ஆண் |
|---|---|---|---|
| 4. | 1. | 'கன்மலை', 'கோல்', 'கன்மலையை கோலால் அடிப்பது' இவைகள் ஆவிக்குரிய பிரகாரம் எவைகளைக் குறிக்கிறது? (அல்லது) ரெவிதீமிற்குக் கொடுக்கப்பட்ட வேறு பெயர்கள் யாவை? இச்சந்தர்ப்பத்தில் பின்வருபவை எவற்றைக் குறிக்கின்றன? (i) கன்மலை (ii) கோல் (iii) கன்மலையைக் கோலினால் அடிப்பது (அல்லது) ரெவிதீமிற்குக் கொடுக்கப்பட்ட வேறுபெயர்கள் யாவை? அங்கே இஸ்ரவேலர் மோசேயிடம் ஏன் வாதாடினார்கள்? பின்வருபவை எவற்றைக் குறிக்கின்றன? (i) கன்மலை (ii) கோல் (iii) கன்மலையைக் கோலால் அடிப்பது ஆவிக்குரிய அர்த்தத்தைத் தருக. (அல்லது) பின்வருபவற்றின் (i) கன்மலை (ii) கோல் (அல்லது) கிறிஸ்து எவ்விதம் அடிக்கப்பட்டு கன்மலையானார் என்பதை வசன ஆதாரத்துடன் விவரி. இந்த நிழலாட்டமாக பழைய ஏற்பாட்டின் சந்தர்ப்பத்தை விளக்குக. | 201<br>201<br>20<br>20 |
| 4. | 2. | அமலேக்கியரை மேற்கொள்ளும்படியாய் மோசேயும் இஸ்ரவேலரும் எந்த மூன்று காரியங்களைச் செய்ய வேண்டியதாயிருந்தது?. அவற்றை சபையின் அனுபவத்தோடு விவரி. (அல்லது) அமலேக்கியரைக் குறித்து கர்த்தர் கூறியது என்ன? அவைகளை மேற்கொள்ள செய்யப்பட வேண்டியதாயிருந்தது என்ன? அதின் ஆவிக்குரிய அர்த்தத்தை விவரி? அல்லது) அமலேக்கியரை மேற்கொள்ள செய்ய வேண்டியதாயிருந்த மூன்று காரியங்கள் என்ன? | 200<br>200<br>200 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 4. | 3. | சீனாய் வனாந்தரத்தில் தேவன் மோசேயை மலையுச்சிக்கு அழைத்து அவனுக்கு கொடுத்தவைகள் யாவை? (அல்லது) சீனாய் மலையில் தேவன் மோசேக்குக் கொடுத்தவற்றையும் புதிய ஏற்பாட்டில் அவை வெளிப்படுத்தும் ஆவிக்குரிய கருத்துகளையும் எழுது. (அல்லது) மலையின் உச்சியில் மோசேக்கு கர்த்தர் கொடுத்த இரண்டு பொருட்கள் என்ன? | 2015<br>200 |
| 4. | 4. | சீனாய் மலையில் சம்பவித்தவைகளையும் அதன் ஆவிக்குரிய கருத்துகளையும் விவரி? (அல்லது) சீனாய் வனாந்தரத்தில் நடந்த சம்பவத்தைக் குறிப்பிடு. அது எதற்கு நிழலாட்டமா-யிருக்கிறது? தேவன் மோசேயை மலையுச்சிக்கு அழைத்து அவனுக்குக் கொடுத்தவை யாவை? புதிய ஏற்பாட்டில் அவை எவற்றை வெளிப்படுத்துகின்றன? (அல்லது) சீனாய் வனாந்தரத்-தில் நடந்த சம்பவத்தை வசன ஆதாரத்துடன் விவரித்து எழுது. | 201<br>200 |
| 4. | 5. | இஸ்ரவேலரைத் தாக்கி பின்வருகிற பாளயத்திலுள்ள பலவீன-ரையும், இளைத்த விடாய்த்தவர்களையும் வெட்டிப்போட்டவர்-கள் யார்? (அல்லது) அமலேக்கியர் இஸ்ரவேலர் பாளயத்தில் யாரை வெட்டிப்போட்டார்கள்? அமலேக்கியருக்கு விரோதமாக நடந்த யுத்தத்தில் முக்கிய பங்கு வகித்த நால்வர் யார்? | 201 |
| 4. | 6. | கன்மலையைப் பார்த்துப் பேசும்படி கர்த்தர் மோசேயிடம் கூறிய போது அவன் அதை அடித்த இடத்தின் பெயர் என்ன? அதன் விளைவு என்ன? | 200 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 4. | 7. | மோசேயின் கைகளை மலையில் தாங்கிய ஆரோனும், ஊரும் புதிய ஏற்பாட்டில் யாருக்கு அடையாளமாயிருக்கிறார்கள்? (அல்லது) பின்வருவனவற்றிலிருந்து நீ கற்றுக்கொள்வது யாது? (i) கானானைப் பற்றி துர்ச்செய்தி கொண்டு வந்தவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்தார்கள். (ii) அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்தில் ஆரோனும் ஊரும் மோசேயின் கைகளைத் தாங்க வேண்டியதாயிருந்தது | 2010 |
| 4. | 8. | இயேசு பத்துக் கற்பனைகளை எத்தனைப் பிரிவுகளாக பிரித்தார்? அவைகள் யாவை? (அல்லது) இயேசு பத்து கற்பனைகளையும் எவ்வாறு பிரித்தார்? வசன ஆதாரம் தருக. | 200 |
| 4. | 9. | கர்த்தர் சீனாய் மலையில் அக்கினியில் இறங்கி இஸ்ரவேல் புத்திரரோடு நேரடியாக சம்பாஷித்தது எதற்கு நிழலாட்டமாயிருக்கிறது? (அல்லது) இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்தில் பாளயமிறங்கின போது நடந்த சம்பவங்களை விவரி. மோசே மலையுச்சியில் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டவை யாவை? புதிய ஏற்பாட்டில் அவற்றின் ஆவிக்குரிய அர்த்தத்தை ஏதேனும் இரண்டு வசன ஆதாரங்களுடன் விளக்குக. | 200 |
| 4 | 10. | சீனாய் வனாந்தரம் குறிப்பு வரைக. | 2003 |
| 4 | 11. | ரெவிதீமிற்கு இடப்பட்ட வேறு இரு பெயர்கள் யாது? ஏன் அவ்வாறு அழைக்கப்பட்டது? இங்கு தேவனுடைய வல்லமை எப்போது வெளிப்படுத்தப்பட்டது? (அல்லது) ரெவிதீம் - சிறுகுறிப்பு வரைக. | 200 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 5. | 1. | பாரானின் வனாந்தரத்தில் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக<br>எழும்பினவர்கள் யார்? அவர்களுக்கு சம்பவித்தது என்ன? கர்த்தரின்<br>சமுகத்தில் வைக்கப்பட்ட 12 கோல்களில் ஆரோனின் கோல்<br>துளிர்த்திருந்தது நாம் அறிந்து கொள்ளும் இரண்டு ஆவிக்குரிய<br>கருத்துகள் யாவை? (அல்லது) 'ஆரோனின் துளிர்த்த கோல்' வெளிப்<br>-படுத்தப்படும் இரு ஆவிக்குரிய கருத்துகளை எழுதுக. (அல்லது)<br>பாரான் வனாந்தரத்தில் சபையார் எல்லாரும் இராமுழுவதும்<br>ஏன் கூக்குரலிட்டு அழுதனர்? ஆரோனுடைய கோலைத் தேவன்<br>துளிர்க்கச் செய்ததின் ஆவிக்குரிய கருத்துகளை எழுது. (அல்லது)<br>பின்வருபவை ஆவிக்குரிய பிரகாரமாக எவற்றைக் குறிக்கின்றன. - வசன ஆதாரங்கள் தருக.<br>(i) ஆரோனின் ~~கோல்~~ துளிர்த்த கோல் - ஆரோனின் துளிர்த்த கோல்<br>(ii) மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்ட<br>(அல்லது) இஸ்ரவேல் புத்திரர் பாரான் வனாந்தரத்தில் பாளயமிறங்<br>-கிய போது நடந்த சந்தர்ப்பத்தை வசன ஆதாரத்துடன் விவரி? | 2011<br>2008<br>200<br>2013<br>200 |
| 5. | 2. | ஆஸரோத் - வசன ஆதாரத்துடன் குறிப்பு வரைக. | 2002, 2 |
| 5. | 3. | காதேஸில் நடந்த சம்பவங்களை கூறு (அல்லது) இஸ்ரவேலரின்<br>பிரயாணத்தின் போது காதேஸில் நடந்த சம்பவங்களையும்<br>அவைகள் வெளிப்படுத்தும் ஆவிக்குரிய கருத்துகளையும் விவரி?<br>(அல்லது) காதேஸ் - சிறுகுறிப்பு வரைக. | 2015<br>200 |
| 5. | 4. | கிப்ரோத் அத்தாவா வால் இஸ்ரவேலர் எதை இச்சித்தார்கள் ?<br>அவர்களுக்கு சம்பவித்தது என்ன? இச்சம்பவங்களினால்<br>இதினிமித்தம் நாம் அடையும் ~~எச்சரிப்பு~~ எச்சரிப்பு என்ன? (அல்லது) 'கிப்ரோத் அத்தாவா'<br>என்னும் ஸ்தலத்திற்கு 'இச்சையின் கல்லறைகள்' என பொருள்படும் | 200<br>200 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| | | பெயர் ஏன் வழங்கப்பட்டது? இதிலிருந்து நீ விளங்கிக் கொள்வது யாது? (அல்லது) பின்வருபவற்றை விவரி (i) கிப்ரோத் அத்தாவா (ii) ஆஸெரோத். | |
| 5 | 5. | பாரானின் வனாந்தரத்திலிருந்து கானானை வேவு பார்க்க அனுப்பப்பட்டவர்கள் எத்தனை பேர்? அவர்கள் கொண்டு வந்த செய்தி என்ன? பின் நடந்தது என்ன? இச்சம்பவங்களினால் நாம் கற்றுக்கொள்ளும் காரியங்கள் யாவை? (அல்லது) பாரான் வனாந்தரத்திலிருந்து கானான் தேசத்தை வேவு பார்க்கும்படியாக மோசே பன்னிரண்டு வேவுகாரரை அனுப்பினபோது நடந்த சம்பவங்களை அதன் ஆவிக்குரிய கருத்துகளுடன் விவரி? (அல்லது) பாரான் வனாந்தரத்தைப் பற்றி விவரி. | 201 200 |
| 5. | 6. | கிப்ரோத் அத்தாவாவில் இச்சித்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் கொடுத்த ஆகாரம் என்ன? (அல்லது) இஸ்ரவேலர் இறைச்சியை~~யும்~~ இச்சித்தநிமித்தம் தேவன் அவர்களுக்குக் காடைகளைக் கொடுத்தார். ஆயினும் அவர்களை அழிக்க அவர் ஒரு மகா பெரிய வாதையையும் அனுப்பினார். இதிலிருந்து நாம் ஆவிக்குரிய பிரகாரமாக என்ன கற்றுக் கொள்கிறோம்? | 2013. |
| 6 | 1. | மோசேயின் சகோதரனாகிய ஆரோன் எங்கு மரித்தான்? (அல்லது) ஆரோன் எந்த மலையில் மரித்தான்? அந்த மலை எதற்கு அடையாளமாயிருக்கிறது? (அல்லது) ஓர் என்னும் மலையில் மரித்தது யார்? அவனுக்குப் பின் அந்த ஸ்தானத்தை ஏற்றது யார்? (அல்லது). | 2010, 2014 2004 2005 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| | | ஓர் என்னும் மலையைப் பற்றி விவரி? | |
| 6. | 2. | வெண்கலச் சர்ப்பம் புதிய ஏற்பாட்டில் யாரைக் குறிக்கிறது? (அல்லது). வனாந்தரத்தில் வெண்கல சர்ப்பம் ஏன் உயர்த்தப்பட்டது? அதன் ஆவிக்குரிய அர்த்தத்தை வசன ஆதாரங்களுடன் விவரி? | 2009, 200[illegible] |
| 6. | 3. | தேவன் இஸ்ரவேல் ஜனங்களிடையே கொள்ளிவாய் சர்ப்பங்களை ஏன் அனுப்பினார்? கொள்ளிவாய் சர்ப்பங்களினால் கடிக்கப்பட்டவர்-கள் எவ்வாறு சுகமாக்கப்பட்டார்கள்? இதிலிருந்து நாம் அறியும் ஆவிக்குரிய கருத்து என்ன? (அல்லது) கொள்ளிவாய்ச் சர்ப்பங்கள் கடித்ததினால் ஜனங்கள் மாண்டபோது, கர்த்தர் மோசேக்குக் கொடுத்த ஆலோசனை என்ன? அதன் ஆவிக்குரிய கருத்து யாது? (அல்லது) கொள்ளிவாய் சர்ப்பங்களால் கடிக்கப்பட்டவர்கள் வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்த போது சுகமடைந்தனர். ஆவிக்குரிய பிரகாரமாக அது எதைக் காண்பிக்கிறது? | 2012, 2011 |
| 6 | 4. | இஸ்ரவேல் ஜனங்களை பிலேயாம் ஏன் சபிக்க கூடியவில்லை? அதற்கு காரணம் என்ன? இஸ்ரவேல் ஜனங்கள் வேறுபாட்டின் ஜீவியத்தைப் பாதுகாத்து தனித்து வாசம் பண்ணும் ஜனமாக இருந்தவரை அவர்களுக்கிருந்த மேன்மை என்ன? (அல்லது) தங்கள் வேறுபாட்டின் ஜீவியத்தைக் காத்துக் கொண்ட இஸ்ரவேலரில் காணப்பட்ட நான்கு விசேஷித்த தன்மைகளைக் குறிப்பிடுக. (அல்லது) மோவாபின் சமனான வெளியில் வந்தபோது இஸ்ரவேல் புத்திரரைக் குறித்துச் சொல்லப்பட்ட நான்கு விசேஷித்த காரியங்கள் என்ன? | 2013, 2006 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 6 | 5. | இஸ்ரவேல் ஜனங்கள் மோவாபின் சமனான வெளியில் வருவதற்கு முன்பாக எந்தெந்த இராஜாக்களை ஜெயித்தார்கள்? (அல்லது) இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் சமனான வெளியில் வருவதற்கு முன்பாக எந்த இரண்டு இராஜாக்களை ஜெயித்தார்கள்? | 2001 |
| 6. | 6. | பிலேயாம் பாலாக்கிற்கு கற்றுக் கொடுத்த போதனை யாது? | 2015 |
| 6. | 7. | மோவாபின் சமனான வெளியில் வந்தபோது இஸ்ரவேல் புத்திரரைக் குறித்துச் சொல்லப்பட்ட நான்கு விசேஷித்த காரியங்கள் என்ன? | 2014 |
| 6. | 8. | பாலாக் பிலேயாமின் ஆலோசனையின்படி இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக எவ்விதமான இடறலைப் போட்டான்? (அல்லது) இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக இடறலைப் போடும்படியாகப் பிலேயாம் பாலாக்கிற்குக் கற்றுக் கொடுத்த இரண்டு காரியங்கள் யாவை? | 2009 |
| 6. | 9. | கானான் தேசத்தை மோசே எங்கிருந்து பார்த்தான்? அதற்குள் பிரவேசிக்க அவனுக்கு ஏன் அனுமதி மறுக்கப்பட்டது? (அல்லது) கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க மோசேக்கு அனுமதி ஏன் மறுக்கப்பட்டது? இதிலிருந்து நீ கற்றுக்கொள்வது யாது? | 2008 |
| 6. | 10. | மோவாபின் சமனான வெளியில் இஸ்ரவேல் ஜனங்களின் பிரயாணத்தின் போது நடந்த சம்பவங்களையும் அதிலிருந்து நாம் அறிந்துகொள்ளும் ஆவிக்குரிய கருத்துக்களையும் விரிவாக எழுது? (அல்லது) மோவாபின் சமனான வெளியில் நடந்த சந்தர்ப்பத்தை விரிவாக எழுது. | 2003. |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 7. | 1. | யோர்தானைக் கடப்பது எதற்கு நிழலாட்டமாயிருக்கிறது? (அல்லது) யோர்தானைக் கடப்பது எதைக் காண்பிக்கிறது? செங்கடலை இரண்டாகப் பிரித்தது யோர்தானை பிரித்ததினின்று எவ்வாறதும் வித்தியாசமானது என்பதை அதன் ஆவிக்குரிய கருத்துகளுடன் விவரி? (அல்லது) யோர்தானைக் கடப்பது என்பது ஆவிக்குரிய பாரகாரமாக எதைக் குறிக்கிறது? உரிய ஆதாரம் தருக. (அல்லது) இஸ்ரவேலர் பிரயாணத்தின் இறுதியில் யோர்தானை எவ்வாறு கடந்தார்கள் என்பதை உரிய ஆதாரத்துடன் விவரி? | 2012<br>201[illegible]<br>200[illegible]<br>200[illegible]<br>200[illegible]<br>200[illegible] |
| 7. | 2. | யோர்தானிலே நாட்டப்பட்ட 12 கற்களும் யோர்தானிலிருந்து எடுக்கப்பட்டு கில்காலில் நாட்டப்பட்ட 12 கற்களும் வெளிப்படுத்தும் ஆவிக்குரிய சத்தியம் என்ன? (அல்லது) யோசுவா கில்காலிலும் யோர்தானிலும் கற்களை நாட்டியதைப் பற்றியும் அவற்றின் ஆவிக்குரிய கருத்துகளையும் விளக்கி எழுது (அல்லது) யோர்தானிலிருந்து எடுக்கப்பட்டு கில்காலிலே நாட்டப்பட்ட 12 கற்கள் இவற்றின் ஆவிக்குரிய கருத்துகளை விவரி? | 2013,<br>2016<br>200[illegible] |
| 7. | 3. | யோர்தானில் நாட்டப்பட்ட கற்கள் எதனை குறிக்கின்றன? (அல்லது) யோர்தானின் நடுவில் நாட்டப்பட்ட 12 கற்கள் எவற்றைக் குறிக்கின்றன? | 2008 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆ… |
|---|---|---|---|
| 8 | 1. | தேவன் துரோவா பட்டணத்தில் செய்த அற்புதம் என்ன? (அல்லது) துரோவாவில் அப். பவுல் செய்த அற்புதம் என்ன? | 201. |
| 8. | 2. | செசரியா பட்டணத்திலிருந்த தீர்க்கதரிசி யார்? அவர் கூறிய தீர்க்கதரிசனம் என்ன? (அல்லது) அப். பவுல் செசரியாவில் இருந்த போது அகபு என்னும் தீர்க்கதரிசி அவரைக் குறித்து உரைத்த தீர்க்கதரிசனம் யாது? | 20… |
| 8. | 3. | எபேசு பட்டணத்தில் பரி. பவுல் செய்த ஊழியத்தைப் பற்றி எழுது. (அல்லது) எபேசுவில் கர்த்தருடைய வசனம் எவ்வாறு பலமாய் விருத்தியடைந்து மேற்கொண்டது (அல்லது) அப். பவுல் தன்னுடைய மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தில் எபேசுவிலே செய்த ஊழியத்தைப் பற்றி எழுது. | 2003 |
| 9. | 1. | கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எத்தனை பகுதிகளைக் கொண்டது? அவை யாவை? (அல்லது) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் மூன்று பகுதிகள் யாவை? கர்த்தராகிய இயேசு தாம் உயிர்த்தெழுந்த பின்பு எத்தனை நாட்கள் தமது சீஷர்களுக்குக் காணப்பட்டார்? (அல்லது) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் மூன்று பகுதிகள் யாவை? அர்மகெதோன் யுத்தத்தைக் குறித்து விளக்குக. | 2012 2015 |
| 9. | 2. | கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையின் போது கண்ணிமைப் பொழுதிலே நடைபெறும் இரு சம்பவங்கள் யாவை? (அல்லது) இயேசுவின் இரகசிய வருகையின் போது ஒரு கண்ணிமைப் பொழுதில் நடைபெறும் இரண்டு சம்பவங்கள் யாவை? அவருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுபவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு பெயர்களை எழுது. | 2008 2014 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 9. | 3. | இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுபவர்களுக்கு கொடுக்கப்பட்ட பல்வேறு பெயர்கள் யாவை? வசன ஆதாரத்துடன் எழுது. (அல்லது) கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும் இரு கூட்டத்தாருக்கும் வேத வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு பெயர்கள் யாவை? ஒவ்வொன்றிற்கும் வசன ஆதாரம் தருக. | 2013 |
| 9. | 4. | கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையைப் பற்றி வசன ஆதாரத்துடன் எழுது (அல்லது) கர்த்தராகிய இயேசு யாரைச் சேர்த்துக்கொள்ளும்படி தம்முடைய இரகசிய வருகையில் வருகிறார்? இச்சம்பவம் எப்படி நடைபெறும்? ஒரு வசன ஆதாரம் தருக. வேத வசனத்தில் கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் பல்வேறு பெயர்கள் யாவை? | 200 |
| 10. | 1. | அறுவடை என்றால் என்ன? (அல்லது) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த வரையில் (i) அறுவடை (ii) "யாக்கோபுக்கு இக்கட்டுக் காலம்" என்பவை எவற்றைக் குறிக்கின்றன? (அல்லது) அதன் முடிவில் இயேசு அதற்காக, எப்படி எந்த இடத்தில் இறங்கி வருவார்? இதற்கு ஆதாரமாகப் பழைய ஏற்பாட்டிலிருந்தும் புதிய ஏற்பாட்டிலிருந்தும் ஒவ்வொரு வசன ஆதாரம் தருக. | 200<br>2016 |
| 10. | 2. | அர்மகெதோன் யுத்தம் பற்றி குறிப்பு வரைக. (அல்லது) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றி சிறுகுறிப்பு வரைக. அர்மகெதோன் யுத்தம் (அல்லது) தீட்டுக்கழிக்கும் ஜலம் (அல்லது) பின்வருவனவற்றைப் பற்றி சிறுகுறிப்பு வரைக. (i) அர்மகெதோன் யுத்தம் (ii) இரத்தத்தினால் பரிசுத்தமாகுதலின் அவசியம். | 2011<br>200 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 10. | 3. | ஆண்பிள்ளை சிங்காசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு வானத்தில் நடைபெறும் யுத்தத்தைப் பற்றியும் அதைத் தொடர்ந்து முதல் மூன்றரை வருடங்களில் சம்பவிப்பவைகளைப் பற்றியும் எழுதுக. | 2015 |
| 11. | 1. | யோவான் கண்ட தரிசனத்தில் 'இவைகளுக்கு பின்பு சம்பவிப்பவைகள்' என்பதில் உட்படும் எதிர்கால சம்பவங்கள் யாவை? (அல்லது) வெளிப்படுத்தின விசேஷத்தில் "இவைகளுக்கு பின்பு சம்பவிப்பவைக "சீக்கிரமாகிய காரியங்கள்" என்ற பிரிவின் கீழ் வரும் சம்பவங்கள் யாவை? இப்புத்தகத்தின் முக்கியமான அம்சம் என்ன? (அல்லது) வெளிப்படுத்தின விசேஷத்தில் "இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகள் என்பதில் உட்படும் எதிர்கால சம்பவங்கள் யாவை? | 200[illegible] 2015 |
| 11. | 2. | ஏழு சபைகளுக்கும் கொடுக்கப்பட்ட எல்லா தூதுகளும் எந்த எச்சரிப்பின் வார்த்தைகளுடன் முடிவடைகின்றன? (அல்லது) வெளிப்படுத்தின விசேஷத்தில் ஒவ்வொரு சபைக்கும் கொடுக்கப்பட்ட தூது, எந்த எச்சரிப்பின் வார்த்தைகளோடு முடிவடைகின்றன. | 2016 |
| 11. | 3. | வெளிப்படுத்தின விசேஷத்தின் முதல் அதிகாரத்திலும் கடைசி அதிகாரத்திலும் கடைசி அதிகாரத்திலும் கொடுக்கப்பட்டுள்ள இந்தப் புத்தகத்தை ஆக்கியோன் யார்? எச்சரிப்பு என்ன? | 2012 |
| 11. | 4. | நித்திய பரலோக வாசஸ்தலங்கள் யாவை? (அல்லது) கர்த்தர் பரலோகத்தில் நாம் வாசம் பண்ணும்படியாகத் தெரிந்து கொண்ட வாசஸ்தலம் எது? வசன ஆதாரம் தருக. | 2014 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 11. | 5. | வெளிப்படுத்தின விசேஷத்தின் 20 முதல் 22 வரையுள்ள அதிகாரங்கள் எவற்றை விவரிக்கின்றன? (அல்லது) வெளிப்படுத்தின விசேஷத்தின் 20-22 வரையுள்ள அதிகாரங்கள் எவற்றை குறித்து விவரிக்கின்றன? | 200 |
| 11. | 6. | வெளிப்படுத்தின விசேஷத்தின் 4,5 - ம் அதிகாரங்களின் கூறப்பட்டுள்ளவைகள் யாவை? (அல்லது) அப். யோவான் எந்த இடத்திற்கு நாடு கடத்தப்பட்டிருந்த போது வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள தரிசனங்களைப் பெற்றுக் கொண்டார்? வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள தரிசனங்களைப் பெற்றுக் கொண்டார்? வெளிப்படுத்தின விசேஷத்தில் 4,5 மற்றும் 17, 18, 19 அதிகாரங்கள் எவற்றைக் குறித்து விவரிக்கின்றன. | 2013 |
| 11. | 7. | வெளிப்படுத்தின விசேஷத்தின் அதிகாரம் 15, 16 - இல் கூறப்பட்டுள்ளவைகள் எவை? (அல்லது) வெளிப்படுத்தின விசேஷத்தின் 12 முதல் 14 வரையுள்ள அதிகாரங்கள் மற்றும் 15, 16 அதிகாரங்கள் எவற்றை வெளிப்படுத்துகின்றன. | 2014. |
| 12 | 1. | உயிர்த்தெழுதலின் கடைசி இரண்டு வரிசைகளும் எவ்வாறு அடைக்கப்படுகின்றன? (அல்லது) உயிர்த்தெழுதலின் கடைசி இரண்டு வரிசைகள் எவ்வாறு அடைக்கப்படுகின்றன? அவை எப்போது நடைபெறும்? | 2014 |
| 12. | 2. | இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததினால் பரிகரிக்கப்பட்டது எது? வெளியரங்கமாக்கப்பட்டது எது? (அல்லது) கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மரித்து உயிர்த்தெழுதலின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்கள் யாவை? எவையேனும் இரு வசன ஆதாரங்கள் தருக. | 2012 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 12. | 3. | கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு வெற்றியுள்ள ஜீவியம் செய்து, நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையை நோக்கி முன்னேறிச் செல்ல காரணம் என்ன? (அல்லது) உண்மையான கிறிஸ்தவர்களாகிய நமக்கிருக்கும் ஜீவனுள்ள நம்பிக்கை யாது? நாம் எவ்விதம் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்து, அந்த நம்பிக்கையை நோக்கி முன்னேறிச் செல்வோம்? | 201 |
| 13. | 1. | முதலாம் உயிர்த்தெழுதலின் முதல் வரிசையில் உயிரோடு எழுப்பப்பட்டவர் யார்? (அல்லது) முதலாம் உயிர்த்தெழுதலின் முதல் வரிசையை விளக்கு. ஏதேனும் ஒரு வசன ஆதாரம் கொடு. (அல்லது), உயிர்த்தெழுதலின் ஒரு வரிசைகளில் பங்கு பெறுபவர்களைக் குறிப்பிட்டு முதலாம் வரிசையை விவரி. | 2012<br>201 |
| 13. | 2. | முதலாம் உயிர்த்தெழுதலின் ஐந்தாம் வரிசையில் யார் உயிரோடெழுப்பப்படுவார்கள்? (அல்லது) உயிர்த்தெழுதலின் ஐந்தாம் வரிசை எப்பொழுது நடைபெறும்? அதில் பங்குபெறுபவர்கள் யார்? | 201 |
| 13. | 3. | கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படாமல் கைவிடப்பட்டவர்களுக்கு என்ன சம்பவிக்கும்? (அல்லது). கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகைக்குப் பின் உடனடியாக நடைபெறும் சம்பவங்கள் யாவை? விவரி | 2013 |
| 13. | 4. | முதலாம் உயிர்த்தெழுதல் அல்லது மேன்மையான உயிர்த்தெழுதலில் காணப்படுகின்ற ஐந்து வரிசைகளைப் பற்றி விவரி? (அல்லது), முதலாம் உயிர்த்தெழுதலின் பல்வேறு வரிசைகளை ஒவ்வொரு வசன ஆதாரத்துடன் விவரி. | 2009 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | கேட்கப்பட்ட ஆண்டு |
| --- | --- | --- | --- |
| 14 | 1. | இரண்டாம் உயர்த்தெழுதல் அல்லது பொதுவான உயர்த்தெழுதல் எப்போது நடைபெறும்? (அல்லது). முதலாம் உயர்த்தெழுதலின் இரண்டாம் வரிசையில் பங்குகொள்பவர்களாவதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன? வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பைப் பற்றி எழுது. | 200[illegible] |
| 14. | 2. | இரண்டாம் உயர்த்தெழுதல் அல்லது பொதுவான உயர்த்தெழுதல் என்று அழைக்கப்படுவது எது? (அல்லது) இரண்டாம் உயர்த்தெழு -தலைப் பற்றியும், அதில் பங்கடைவோரின் முடிவைப் பற்றியும் விரிவாய் எழுதுக. | 2016 |
| 14. | 3. | நான்காம் வரிசையில் உயர்த்தெழும் பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள் யாவர்? அவர்களுடைய உயர்த்தெழுதலைக் குறித்து எழுது. | 2015 |
| 14. | 4. | வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பைப் பற்றி குறிப்பு வரைக. | 2013 |
| 14. | 5. | உயர்த்தெழுதலின் ஆறாம், ஏழாம் வரிசைகளை பற்றி எழுது. உயர்த்தெழுதலின் ஆறாம், ஏழாம் வரிசைகளில் யார் (அல்லது) உயிரோடெடுக்கப்படுவார்கள்? அவர்கள் எவற்றை சுதந்தரித்துக் கொள்வார்கள்? (அல்லது) உயர்த்தெழுதலின் ஆறாம் மற்றும் ஏழாம் வரிசைகளில் உயிரோடு எடுக்கப்படுவார்கள் யாவர்? நித்தியத்தில் அவர்கள் எந்தெந்த இடங்களுக்குச் செல்வர்? | 2012 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 15. | 1. | சிவப்பான கிடாரியால் சுட்டெரிக்கப்பட வேண்டிய பகுதிகள் யாவை? அதின் ஆவிக்குரிய கருத்து என்ன? (அல்லது). சிவப்புக் கிடாரியின் தோல் மற்றும் மாம்சம் சுட்டெரிக்கப்படுவது எதைக் காட்டுகிறது? (அல்லது). சிவப்புக் கிடாரியின் தோல், மாம்சம், இரத்தம், சாணி போன்றவை வெளிப்படுத்தும் விழுந்துபோன மனுஷனின் சுபாவங்கள் யாவை? தீட்டுக்கழிக்கும் ஜலத்தைப் பற்றி குறிப்பு வரைக. (அல்லது), இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதலின் அவசியத்தைப் பற்றி எழுதுக. சிவப்புக் கிடாரியின் மூன்று தன்மைகளை அவற்றின் ஆவிக்குரிய கருத்துகளுடன் விவரி. (அல்லது) நாம் பரிசுத்தமாக்கப் ஒவ்வொன்றுக்கு வசன -படும் மூன்று விதங்கள் யாவை? ஒவ்வொன்றுக்கு வசன ஆதாரம் கொடு. தீட்டுக்கழிக்கும் ஜலம் உண்டாக்கப்பட சிவப்புக் கிடாரியுடன் சேர்த்து எரிக்கப்பட்ட பொருட்கள் யாவை? அவை எவற்றைக் காட்டுகின்றன? (அல்லது) இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப் -படுதலின் அவசியத்தை ஒரு வசன ஆதாரத்துடன் விவரி? | 2011, 2013, 2014, 2015, 2016 |
| 15. | 2. | சிவப்பான கிடாரி எதற்கு நிழலாட்டமாக காணப்படுகிறது? (அல்லது) சிவப்புக்கிடாரி எதற்கு அடையாளமாயிருக்கிறது? அது பழுதற்றது, ஊனமில்லாதது - இவற்றின் ஆவிக்குரிய கருத்தை விவரி. | 2012 |
| 15. | 3. | சிவப்பு கிடாரி எத்தன்மை உடையதாக இருக்க வேண்டும்? அதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன? | 2008 |
| 16. | 2. | தேவன் கிறிஸ்துவத்தின் மூலமாக தம் அன்பை மனிதனுக்கு எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதை விவரி? (அல்லது) அன்பின் பூரணரான தேவன் மனுஷனைக் குறித்த தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றும்படி, கிறிஸ்துவத்தின் மூலமாக தம் அன்பை எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதை விளக்கு. | 2014, 2016. |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 16. | 1. | திரித்துவ தேவனுக்கும், திரித்துவ மனிதனுக்கும் உள்ள வித்தியாசத்தை எழுது (அல்லது). மனிதன் திரித்துவத்திற்கு ஒரு மாதிரி – எவ்வாறு? (அல்லது) பின்வருவனவற்றிற்கு விளக்கம் தருக. (i) சிருஷ்டிப்பில் வெளிப்படுத்தப்பட்ட திரித்துவம் (ii) மனிதன் திரித்துவத்திற்கு ஒரு மாதிரி. (அல்லது) சபையின் முதுகெலும்பு யாது? 'மனிதன் திரித்துவத்திற்கு ஒரு மாதிரி' – இதற்கான ஒரு வசன ஆதாரம் தருக. | 200[illegible]<br>2012<br>2016 |
| 16. | 3. | சிருஷ்டிப்பில் திரித்துவம் பற்றி எழுதுக. (அல்லது) இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது திரித்துவம் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டது? | 2013 |
| 16. | 4. | 'எலோஹிம்' – குறிப்பு வரைக. (அல்லது) எபிரேய மொழியில் தேவனைக் குறிப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் பெயர் என்ன? அது எதை வெளிப்படுத்துகிறது? | 2014 |
| 16. | 5. | புதிய ஏற்பாட்டில் திரித்துவம் பற்றி வசன ஆதாரங்களுடன் எழுது. (அல்லது). புதிய ஏற்பாட்டில் தேவனின் திரித்துவத்தை நிரூபிக்கும் வகையில் ஏதேனும் ஆறு குறிப்புகளை வசன ஆதாரங்களுடன் எழுது. | 200[illegible] |
| 17. | 1. | பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் ஒரே ஆள்தத்துவம் அல்ல என்பதை நிரூபி. (அல்லது) குமாரனும், பரிசுத்த ஆவியும் ஒரே ஆள்தத்துவம் அல்ல என்பதை வசன ஆதாரங்களுடன் விவரி. (அல்லது) (i) பிதாவாகிய தேவனும் குமாரனும் (ii) பிதாவும் பரிசுத்த ஆவியும் – ஒரே ஆள்தத்துவம் அல்ல என்பதை விவரி. | 200[illegible]<br>200[illegible] |
| 17. | 2. | குமாரனும் பரிசுத்த ஆவியும் ஒரே ஆள்தத்துவம் அல்ல என்பதை நிரூபி. (அல்லது) குமாரனும் பரிசுத்த ஆவியும் ஒரே ஆள்தத்துவம் அல்ல என்பதை வசன ஆதாரங்களுடன் விவரி. | 200[illegible] |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 18. | 1. | கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்தின் அம்சங்கள் எத்தனை? அவை யாவை? (அல்லது), கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்தின் மூன்று அம்சங்களைக் குறிப்பிடு. அவைகளில் ஒன்றினை விவரி? (அல்லது) கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்தின் மூன்று அம்சங்களை ஒவ்வொரு வசன ஆதாரத்துடன் விளக்கு. (அல்லது). கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்தின் அம்சங்களில் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றினை விவரி.<br>(i) மனுஷன் தன் தகப்பனையும் தாயையும் விடுவது.<br>(ii) மனுஷன் தன் மனைவியுடன் இசைந்திருப்பது. (அல்லது)<br>கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்தின் மூன்று அம்சங்கள் யாவை? மூன்றாம் அம்சத்தை வசன ஆதாரங்களுடன் விவரி? (அல்லது) கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்தில் 'மனுஷன் தன் தகப்பனையும் தாயையும் விடுவது' என்கிற அம்சத்தை விளக்கு. | 2014<br>2008<br>2009<br>2012<br>2016 |
| 19. | 1. | இயேசு பூமியில் இருந்த நாட்களில் இருந்த ஆலயம் எது? (அல்லது) இயேசு பூமியிலிருந்த நாட்களில் இருந்த ஆலயம் எது? அது யாரால் எப்பொழுது அழிக்கப்பட்டது? | 2013 |
| 19. | 2. | தேவன் எப்பொழுதும் மனுஷரோடு வாசம்பண்ணுவதையே வாஞ்சிக்கிறார் என்பதைக் காட்டும் வசனங்களை வசன ஆதாரத்துடன் எழுது. தேவன் எப்பொழுதும் மனுஷரோடு வாசம்பண்ணுவதையே வாஞ்சிக்கிறார் என்பதைக் காட்டும் இரு வசன ஆதாரங்கள் கொடு. சாலமோனின் ஆலயம் எந்த மலையின் மீது கட்டப்பட்டது? | 2012 |

| பாடம் | வினா எண் | வினாக்கள் | வினா கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 19. | 3. | பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலமாகிய 'வனாந்தரத்திலிருந்து ஆசரிப்புக் கூடாரம்' பற்றி விளக்குக. (அல்லது) பழைய ஏற்பாட்டில் ஆசரிப்பு கூடாரம் எவ்வாறு தேவனுடைய வாசஸ்தலமாக இருந்தது என்பதை விளக்குக. (அல்லது) எபிரேயர் 'தேவனுடைய அடிகளான வாசஸ்தலங்களாக' எவ்வாறு காணப்பட்டார்கள் என்பதை விவரி. | 200 |
| 19. | 4. | சாலமோனின் ஆலயத்தைப் பற்றியும், ஏரோதின் ஆலயத்தைப் பற்றியும் குறிப்பு வரைக. (அல்லது). சாலமோனின் ஆலயம் பற்றி குறிப்பு வரைக. | 2015 |
| 19. | 5. | பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலங்கள் பற்றி வசன ஆதாரங்களுடன் விவரித்து எழுதுக. (ஏதேனும் மூன்று) (அல்லது). ~~உண்மையான கிறிஸ்தவர்களாகிய நமக்கிருக்கும் ஜீவனுள்ள நம்பிக்கை யாது? நாம் எவ்வாறு ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்து, அந்த நம்பிக்கையை நோக்கி முன்னேறிச் செல்கிறோம்?~~ பழைய ஏற்பாட்டில் காணப்பட்ட தேவனுடைய பல்வேறு வாசஸ்தலங்களின் பெயர்களைக் குறிப்பிடு. புதிய ஏற்பாட்டில் சபை எவ்வாறு தேவனுடைய வாசஸ்தலமாகிறது என்பதை வசன ஆதாரங்களுடன் விளக்கு. ஏதேனும் இரண்டு | 2008 |

| | | | |
|---|---|---|---|
| 20 | 1. | புதிய ஏற்பாட்டில் காணப்படும் தேவனுடைய வாசஸ்தலங்கள் எவை? (அல்லது). புதிய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலங்களைக் குறித்து விவரி? புதிய ஏற்பாட்டில் சபை தேவனுடைய வாசஸ்தலமாயிருப்பது பற்றி குறிப்பு வரைக. (அல்லது) 'சபை – தேவனுடைய வாசஸ்தலம்' – இது குறிப்பு வரைக. பழைய ஏற்பாட்டில் காணப்பட்ட தேவனுடைய பல்வேறு வாசஸ்தலங்களின் பெயர்களை குறிப்பிடு. புதிய ஏற்பாட்டில் சபை எவ்வாறெல்லாம் தேவனுடைய வாசஸ்தலமாயிருக்கிறது என்பதை ஏதேனும் இரண்டு வசன ஆதாரங்களுடன் விளக்குக. | 2012<br>2011<br>201<br>201 |
| 20. | 2. | நித்தியத்தில் காணப்படும் தேவனுடைய வாசஸ்தலங்கள் எவை? (அல்லது). நித்தியத்தில் தேவனுடைய வாசஸ்தலம் பற்றிக் குறிப்பு வரைக. | 2009 |
| 20 | 3. | சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு பூமியில் காணப்படும் ஜனத்திற்குரிய ஆலயங்கள் பற்றி எழுதுக. (அல்லது) சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு பூமியிலிருக்கும் ஜனத்திற்குரிய ஆலயங்களைப் பற்றி விவரி. | 2009 |
| 5. | | தேவன் லேவி கோத்திரத்தின் ஊழியத்தையும் ஆரோனுடைய ஊழியத்தையும் எவ்வாறும் உறுதிப்படுத்தினார்? அதனுடைய ஆவிக்குரிய கருத்துக்களை விவரி. | 2016. |

| அதிகாரம் | வசனம் | நியாதிபதிகள் (2010 - 2017) வினாக்கள் | வினா கேட்க ஆண் |
|---|---|---|---|
| 1 | 15 | அக்சாள் தன் தகப்பனிடம் கேட்டது என்ன? (அல்லது) வறட்சியான நிலத்தைத் தனக்குத் தந்த தன் தகப்பனாகிய காலேபிடம் அக்சாள் கேட்டது என்ன? (அல்லது) காலேப் தன் மகளிடம் அவளுக்கு என்ன வேண்டும் என்று கேட்டபோது அவள் அவனிடம் கூறியது என்ன? அவன் அவளுக்குக் கொடுத்தது என்ன? | 2014, 2011, 2016. |
| 4 | 1. | சிசெராவைப் பின் தொடர்ந்து வந்தது யார்? அவனைக் கொன்றுப் போட்டது யார்? (அல்லது) யாகேல் சிசெராவை எவ்வாறு கொன்று போட்டாள்? (அல்லது) தொள்ளாயிரம் இருப்புரதங்களுடன் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம் செய்த சேனாபதியின் பெயர் என்ன? அவனைக் கொன்றது யார்? (அல்லது) தன்னுடைய கூடாரத்தில் அடைக்கலம் புகுந்த சிசெராவை யாகேல் எவ்விதம் கொன்றாள்? | 2015, 2011, 2013, 2016 |
| 9 | 11 | அத்தி மரத்தையும் திராட்சச் செடியையும் தங்களுக்கு மேல் ராஜாவாக்கும்படி விரும்பிய மரங்களுக்கு அவை கொடுத்த பதில்கள் யாவை? (அல்லது) ஒலிவமரத்தையும், அத்திமரத்தையும் தங்கள் மேல் ராஜாவாயிருக்கும்படி கேட்ட விருட்சங்களுக்கு அவை கொடுத்த மறுமொழிகள் யாவை? | 2011, 20 |
| 5 | 18. | போர்க்களத்து முனையிலே தங்கள் உயிரை எண்ணாமல் மரணத்திற்குத் துணிந்து நின்றவர்கள் யாவர்? நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து யாரோடு யுத்தம் பண்ணின? (அல்லது) போர்க்களத்து முனையிலே தங்கள் உயிரை எண்ணாமல் மரணத்துக்குத் துணிந்து நின்றவர்கள் யார்? | 2012, 2015. |

| அதிகாரம் | வசனம் | வினாக்கள் | கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 6 | 11 | மரங்கள் திராட்சச் செடியைப் பார்த்து, "நீ வந்து, எங்களுக்கு ராஜாவாயிரு" என்று சொன்னபோது, அது கூறிய மறுமொழி என்ன? (அல்லது) மரங்கள் "நீ வந்து எங்களுக்கு ராஜாவாயிரு" என்று திராட்சச் செடியைப் பார்த்து சொன்னபோது, அது கூறிய மறுமொழி என்ன? | 2016, 2013 |
| 16 | 17. | சிம்சோன் தன் இருதயத்தையெல்லாம் வெளிப்படுத்தி தெலீலாளுக்குச் சொன்னது என்ன? | 2014. |
| 16 | 28. | சிம்சோனின் கடைசி ஜெபம் என்ன? | 2012 |
| 6 | 32. | பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்தது யார்? அவன் அதைச் செய்ததினிமித்தம் அவனுக்குக் கொடுக்கப்பட்ட பெயர் என்ன? | 2013. |
| 15 | 15. | ஒரு கழுதையின் பச்சைத் தாடையெலும்பைக் கொண்டு சத்துருக்களைக் கொன்று போட்டது யார்? அவன் எத்தனைப் பேரைக் கொன்றான்? | 2012. |
| 6 | 14. | மீதியானியருக்கு விரோதமாக யுத்தத்திற்குச் செல்லும்படி கர்த்தர் கிதியோனைத் தைரியப்படுத்தி சொன்ன வார்த்தைகள் யாவை? | 2012 |
| 4,5 | 1,7. | "கூடாரத்தில் வாசமாயிருக்கிற ஸ்திரீகளுக்குள்ளே அவள் ஆசீர்வதிக்கப்பட்டவளே" என்று யாரைக் குறித்துச் சொல்லப்பட்டது? இஸ்ரவேலிலே தாயாக எழும்பினது யார்? | 2012. |
| 1 | 2,20 | கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணும்படி யார் முதல் முதல் புறப்பட வேண்டும் என்று கேட்ட இஸ்ரவேலருக்குக் கர்த்தர் கொடுத்த உத்தரவு என்ன? எபிரோன் யாருக்குச் சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டது? | 2012. |

| அதிகாரம் | வசனம் | வினாக்கள் | வினா கேட்கப் ஆண் |
|---|---|---|---|
| 6 | 24 | கிதியோன் கர்த்தருக்குக் கட்டின பலிபீடத்தின் பெயர் என்ன? அது எந்த இடத்தில் இருக்கிறது? | 2014 |
| 7 | 7 | கிலேயாத் மலையிலிருந்து திரும்பிப் போனவர்கள் எத்தனை பேர்? கர்த்தர் எத்தனை பேராலே மீதியானியரை முறியடித்தார்? | 2013 |
| 13 | 3 | தன் மகனை வளர்க்க வேண்டிய முறையைப் பற்றி தேவதூதன் மனோவாவின் மனைவிக்குக் கொடுத்த ஆலோசனை என்ன? | 2013 |
| 13 | 23 | "நாம் தேவனைக் கண்டோம், சாகவே சாவோம்" என்று சொன்ன மனோவாவிற்கு அவன் மனைவி கொடுத்த மறு உத்தரவு என்ன? | 2014 |
| 11 | 11 | தன் காரியங்களையெல்லாம் யெப்தா எந்த இடத்தில் யாருடைய சந்நிதியில் சொன்னான்? | 2014 |
| 7 | 13 | கிதியோன் மீதியானியரின் சேனைக்குள் சென்றபோது ஒருவன் தான் கண்ட சொப்பனத்தைக் குறித்து மற்றொருவனிடம் சொன்னது என்ன? | 2015 |
| 11 | 31 | யெப்தா அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தத்திற்குச் செல்லும் முன்பு கர்த்தரிடம் செய்த பொருத்தனை என்ன? | 2015 |
| 13 | 2 | மனோவாவின் மனைவிக்குக் கர்த்தருடைய தூதன் தரிசனமாகி சொன்னது என்ன? | 2015 |
| 14 | 12 | சிம்சோன் திம்னாத்திலிருந்த தன் தோழர்களிடம் சொன்ன விடுகதை என்ன? அதை அவர்கள் விடுத்தால் அவன் அவர்களுக்கு என்ன தருவதாக கூறினான் | 2015 |

| அதிகாரம் | வசனம் | வினாக்கள் | கேட்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 6 | 32 | பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து, அதின் அங்கேயிருந்த தோப்பை வெட்டிப் போட்டது யார்? அச்சந்தர்ப்பத்தில் அவனுக்கு இடப்பட்ட பெயர் யாது? | 2016. |
| 13 | 3. | கர்த்தருடைய தூதன் மலடியாயிருந்த மனோவாவின் மனைவிக்குத் தரிசனமாகி அவன் பெறப் போகிற குமாரனைக் குறித்து அவனுக்குச் சொன்னது என்ன? | 2016 |
| 5 | 18. | தெபோராள், செபுலோனையும் நப்தலியையும் குறித்து என்ன பாடினான்? | 2016. |
| 6 | 17 | "உன்னுடைய மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது" என்று கேட்ட தெலீலாளுக்கு சிம்சோன் தன் இருதயத்தையெல்லாம் வெளிப்படுத்திக் கூறியது என்ன? | 2013 |

# TAMBARAM Sunday School

## Lesson Memory Verse & Moral Exam

Standard - 9

| <Actual Marks> / 116 | X 24 = |
|---|---|

Time : 2 Hours
Marks : 24

## PART - A

**Write down the following memory verses.** **49 X 2 = 98**

1. Heb 6:11 எபிரெயர் 6:11
2. Heb 6:12 எபிரெயர் 6:12
3. I John 1:9 1 யோவான் 1:9
4. II Cor 13 : 14. 2 கொரி 13 : 14
5. II Pt 1:4 11 பேதுரு 1:4
6. Jas 1:2 யாக்கோபு 1: 2
7. Jas 1:3 யாக்கோபு 1: 3
8. Jer 12:5 எரேமியா 12:5
9. John 17:21 யோவான் 17 : 21
10. Mat 11:28 மத்தேயு 11:28 :
11. Act 20:24 அப் 20 : 24
12. Eph 2 : 19 எபேசியர் 2 : 19
13. Eph 2 : 20 எபேசியர் 2 : 20
14. Eph 2 : 21 எபேசியர் 2 : 21
15. Eph 2 : 22 எபேசியர் 2 : 22
16. Eph. 5 : 25 எபேசியர் 5 : 25
17. Eph. 5 : 26 எபேசியர் 5 : 26
18. Eph. 5 : 27 எபேசியர் 5 : 27
19. Ex 15:26 யாத் 15:26 :
20. Gal 2 : 20 கலா 2 : 20
21. Heb 13 : 12 எபி. 13 : 12
22. Heb 13 : 13 எபி. 13 : 13
23. Heb 13 : 14 எபி. 13 : 14
24. Heb 5 : 4 எபிரெயர் 5 : 4
25. I Cor 10:11 1 கொ 10:11
26. I Cor 10:12 1 கொ 10:12
27. I John 5 : 7 1 யோவான் 5 : 7
28. I Pt 1 : 3 1 பேதுரு 1 : 3
29. I Pt 1 : 4 1 பேதுரு 1 : 4
30. I Pt 1 : 5 1 பேதுரு 1 : 5
31. I Th 5:23 1 தெச 5 : 23
32. I Th 5:24 1 தெச 5 : 24
33. I Thess 4 : 16 1 தெச 4 : 16
34. I Thess 4 : 17 1 தெச 4 : 17
35. Isa 57:15 ஏசாயா 57 : 15
36. Mat 24 : 42 மத்தேயு 24 : 42
37. Mat 24 : 43 மத்தேயு 24 : 43
38. Mat 24 : 44 மத்தேயு 24 : 44
39. Phil 1 : 10 பிலிப்பியர் 1: 10
40. Phil 1 : 11 பிலிப்பியர் 1: 11
41. Phil 1 : 9 பிலிப்பியர் 1: 9
42. Rev 1: 3 வெளி 1:3
43. Rev 20:4 வெளி 20 : 4
44. Rev 20:5 வெளி 20 : 5
45. Rev 20:6 வெளி 20 : 6
46. Rom 6:11 ரோமர் 6 : 11
47. Rom 6:12 ரோமர் 6 : 12
48. Rom 6:13 ரோமர் 6 : 13
49. Zec 12 : 10 சகரியா 12 : 10

## PART - B

**Write the Moral of the following lessons.** **9 X 2 = 18**

| | | |
|---|---|---|
| 8. | ST.PAUL'S THIRD MISSIONARY JOURNEY | அப். பவுலின் மூன்றாம் சுவிசேஷப் பிரயாணம் |
| 10. | THE SECOND COMING OF CHRIST(Part – II) | கிறிஸ்துவின் இரண்டாம் வரகை (பகுதி 2) |
| 11. | AN INTRODUCTION TO THE BOOK OF REVELATION | வெளிப்படுத்தின விசேஷத்திற்கு ஒரு முன்னுரை |
| 12. | THE SEVEN ORDERS OF RESURRECTION(Part – I) | உயர்த்தெழுதலின் ஏழு வரிசைகள் (பகுதி 1) |
| 13. | THE SEVEN ORDERS OF RESURRECTION(Part – II) | உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள் (பகுதி 2) |
| 14. | THE SEVEN ORDERS OF RESURRECTION(PART – III) | உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள் (பகுதி 3) |
| 15. | SANCTIFICATION THROUGH THE BLOOD | இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல் |
| 17. | THE TRIUNE GOD(PART – II) | திரித்துவ தேவன் (பகுதி 2) |
| 18. | THE MYSTERY CONCERNING CHRIST AND HIS CHURCH | கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியம் |

# இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி 1)

எகிப்திலிருந்து விடுதலை

**I** *மனப் பாடவசனம் :* (2 Marks)

மத்தேயு 11:28 :

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

1 யோவான் 1:9

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::*

1. இஸ்ரவேலரின் பிரயாணம் எதற்கு மாதிரியாயிருக்கிறது?
   நம் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மாதிரியாயிருக்கிறது. (பாடத்திட்டம்)

2. எகிப்து எதற்கு அடையாளமாயிருக்கிறது?
   பாவ உலகத்திற்கு அடையாளமாயிருக்கிறது. (பாடத்திட்டம்)

3. இவ்வுலகத்தின் அதிபதி யார்?
   பிசாசு.(யோவான் 14:30)

4. பார்வோன் யாருக்கு அடையாளமாய் இருக்கிறான்?
   இவ்வுலகத்தின் அதிபதியாகிய பிசாசுக்கு அடையாளமாய் இருக்கிறான். ( பாடத்திட்டம்)

5. பாவத்தின் சம்பளம் என்ன?
   மரணம். (ரோமர் 6:23)

6. மரணத்தின் அதிகாரி யார்?
   பிசாசு (எபி 2:14)

7. அநேக வேதனைகளாலே நம்மை உருவக்குத்துவது எது?
   பண ஆசை (1தீமோ 6:10)

8. எல்லாத் தீமைக்கும் வேராயிருப்பது எது?
   பண ஆசை (1தீமோ 6:10)

9. நம் சரீரங்களை ஜீவபலியாக ஏன் ஒப்புக் கொடுக்க வேண்டும்?
   தேவசித்தம் செய்யும்படியாக நம்முடைய சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும்.(ரோமர் 12:1)

10. நம்முடைய பஸ்கா யார்?
    கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (1 கொரி 5:7)

11. நாம் எதினால் பாவமன்னிப்பாகிய மீட்பை பெற்றுக் கொள்ளுகிறோம்?
    இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவமன்னிப்பாகிய மீட்பை நாம் பெற்றுக்கொள்ளுகிறோம்.(எபேசி 1: 7)

**III** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

1. இஸ்ரவேலரின் பிரயாணத்தில் அவர்களுக்கு சம்பவித்தவைகள் எல்லாம் வேதத்தில் எழுதப்பட்டிருப்பதின் நோக்கம் என்ன?
 இஸ்ரவேலரின் பிரயாணம் நம் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மாதிரியாயிருக்கிறது. அவர்களுடைய பிரயாணத்தில் அவர்களுக்கு சம்பவித்தவைகள் யாவும் திருக்ஷ்டாந்தங்களாக அவர்களுக்கு சம்பவித்தன நமக்கு எச்சரிப்புண்டாகும்படி அவை எழுதப்பட்டிருக்கின்றன.(1 கொரி 10:1,11)

2. பிசாசனவன் நம் ஜீவனை கசப்பாக்கும்படி நம்மேல் நியமித்த ஆளோட்டிகள் யாவை?
 பிசாசானவன் நம் ஜீவனை கசப்பாக்கும்படி வியாதிகள், கக்ஷ்டநக்ஷ்டங்கள் மற்றும் சாபங்கள் போன்ற ஆளோட்டிகளை நம்மேல் நியமித்திருக்கிறான். (பாடத்திட்டம்)

3. நம்முடைய ஜீவியத்தில் நாம் எவைகளுக்கு அடிமைகளாய் இருந்தோம்?
 நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு பாவத்துக்கும் (யோ 8:34), பிசாசுக்கும் ( எபி 2:14,15), உலகத்துக்கும் (கலா 1:4) அடிமைகளாய் இருந்தோம்,

4. தேவன் எப்பொழுதெல்லாம் பார்வோனையும் எகிப்தையும் வாதித்தார்?
 பார்வோன் தன் இருதயத்தை கடினப்படுத்தி ஜனங்களை போக விடுவதற்கு மறுத்த ஒவ்வொருமுறையும் தேவன் அவர்களை வாதித்தார், (யாத் 6:1)

5. கிறிஸ்து நமக்காக, பஸ்காவாக (பஸ்கா ஆட்டுக்குட்டியாக) பலியிடப்பட்டது ஏன்?
 நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரம களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 53:5)

6. தேவன் ஏன் நமக்கு மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார்?
 நாம் இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, அவருடைய திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். (2பேதுரு1:4)

7. தேவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து தம்முடைய ஓங்கிய புயத்தினாலும் பலத்த கையினாலும் விடுதலையாக்கினது எதை வெளிப்படுத்துகிறது?
 தேவன் எகிப்தில் நடப்பித்த அடையாளங்களையும், அற்புதங்களையும் வெளிப்படுத்துகிறது. இது புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் புறஜாதிகளை (சுவிசேக்ஷத்திற்கு) கீழ்படியப்பண்ணும்படி தேவன் நடப்பிக்கிற அற்புதங்களுக்கும், அடையாளங்களுக்கும் நிழலாட்டமாயிருக்கிறது. (எபிரெயர்2:4)

**IV** *சுருக்கமானவிடைய* (4 Marks)

1. இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக் கொண்டிருக்கும் போது, தேவன் மோசே மூலம் அவர்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் என்ன?
 இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கர்த்தர் எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன். அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன்.(யாத்3:7)
 அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும் அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி, கானானியரும் ஏத்தியரும், எமோரியரும், பெரிசியரும், ஏவியரும், எபூசியரும் இருக்கிற இடமாகிய பாலும், தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பேன் என்று வாக்குதத்தம் கொடுத்தார்.(யாத் 3:8)

2. தேவனுடைய பிள்ளைகள் பண ஆசையை விட்டு விலகி ஏன் ஓட வேண்டும?எவைகளை அடையும்படி நாட வேண்டும்,
 தேவனுடைய பிள்ளைகள் பண ஆசையை விட்டு விலகி ஓடவேண்டும் என்பதற்கான காரணங்கள்.
 i. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது.
 ii. அது விசுவாசத்தை விட்டு நம்மை வழுவச் செய்கிறது.

iii. அநேக வேதனைகளாலே நம்மை உருவக் குத்துகிறது (1 தீமோ 6 : 10)

நாம் அடையும்படி நாட வேண்டியவைகள்: நாம் நீதியையும், தேவபக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், சாந்தகுணத்தையும் அடையும்படி நாட வேண்டும். (1 தீமோத் 6 : 11)

**3.** தேவன் பார்வோனையும்,எகிப்து தேசத்தையும் ஏன் வாதித்தார்?

i. தேவனாகிய கர்த்தரை (யோகோவா) அன்றி வேறே தேவர்கள் இல்லை என்பதை எகிப்தியர்கள் அறிந்துகொள்ளும்படியாகவும் (யாத் 7 : 5)

ii. தேவனாகிய கர்த்தருக்கு ஒப்பான வேறே தேவன் இல்லை என்று பார்வோன் அறிந்து கொள்ளும்படியாகவும் (யாத் 8: 10)

iii. இஸ்ரவேலருக்கும், எகிப்தியருக்கும் ஒருவித்தியாசம் உண்டாக்கும்படியாகவும் (யாத் 8 : 22,23 )

iv. யோகோவாவாகிய தங்கள் தேவனாகிய கர்த்தர் ஒருவரே தங்களை விடுதலையாக்குகிறவர் என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் அறிந்து கொள்ளும்படியாகவும்,

v. தேவனுக்கு மகிமை உண்டாக்கும்படி, தம்முடைய மீட்பின் கிரியைகளை வெளிப்படுத்திக் காண்பிக்கும்படியாகவும் தேவன் பார்வோனையும், எகிப்து தேசத்தையும் வாதித்தார்,

**4.** பஸ்கா - குறிப்பு வரைக

அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேல் ஜனங்கள், எகிப்தில் விடுதலையாக்கப்படும்படியாக ஒவ்வொரு வீட்டாரும் ஒரு ஆட்டுக்குட்டியை அடித்து, பஸ்காவை ஆசரிக்க வேண்டியதாயிருந்தது. அதுபோலவே புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பாவத்தின் அடிமைத்தனத்தில் ஜீவித்துக் கொண்டிருக்கிறவர்கள் விடுதலையாக்கப்படும்படியாக,கிறிஸ்துவாகிய பஸ்கா, பலியிடப்பட்டிருக்கிறார்,(1கொரி 5 : 7) (எபி 2: 9). இதையே ஏசாயா தீர்க்கதரிசியும் நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் என்று கூறுகிறார்.(ஏசா 53:5) ஆகையால் நாம் நம்முடைய பஸ்காவாகிய இயேசுவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு நம்முடைய பாவங்களுக்காக மெய்யாகவே மனஸ்தாபப்பட்டு அவைகளை அறிக்கை செய்துவிட்டுவிடும் போது, அவருடைய இரத்தம் நம்மைச் சுத்திகரிக்கிறது(1 யோ 1:7,9) நாம் அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பைப் பெற்றுக் கொள்ளுகிறோம்.(எபேசி 1: 7).

**V** _விரிவான விடையளி_ : (10 Marks)

**1.** இஸ்ரவேலர் எகிப்தை விட்டதன் காரணங்களை விளக்குக. அதின் ஆவிக்குரிய அர்த்தத்தையும் எழுதுக.

இஸ்ரவேலர் எகிப்தை விட்டதற்கான காரணங்கள்:

(i) கடின உழைப்பினால் அவர்களுடைய ஜூவன் அவர்களுக்கு கசப்பாயிருந் (யாத் 1:14)

நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தோம். அப்போது மரணத்தின் அதிகாரியான பிசாசு நம் ஜீவனை கசப்பாக்கும்படி வியாதிகள், கஷ்டநஷ்டங்கள், மற்றும் சாபங்கள் போன்ற ஆளோட்டிகளை நம்மேல் நியமித்தான். மேலும் பண ஆசை நம்மை அநேக வேதனைகளாலே உருவக்குத்துகிறது. (1தீமோத்தேயு 6: 10)அதின் நிமித்தமாக நாம் உலகத்தையும் சேவித்துக் கொண்டு இருந்தோம். நாம் பண ஆசையை விட்டோடும்படி சொல்லப்பட்டுள்ளது. (1தீமோத்தேயு 6:11) ஆகையால் இயேசு நம்மைப் பார்த்து, வருத்தப்பட்டு, பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று சொன்னார். (மத்தேயு 11:28)

(ii) இஸ்ரவேலர் தங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறும்படியாக (யாத் 2:23;3:8)

நம் ஜீவியத்தில் நாம் பாவத்துக்கும் (யோவான் 8:34), பிசாசுக்கும் (எபி 2:14,15), உலகத்துக்கும் (கலா 1:4) அடிமைகளாயிருந்தோம்,

(iii) வனாந்திரத்தில் தேவனுக்குப் பலி செலுத்தும்படியாக (யாத் 3:18)

நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் தேவசித்தம் செய்யும் படியாக நம் சரீரங்களை ஜீவபலியாக ஒப்பக்கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. இதற்காக நாம் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் இருக்க வேண்டும், (ரோமர் 12:1,2 எபி 10 : 5-7)

(iv) அவர்களைப் பாலும், தேனும் ஓடுகிற தேசத்திற்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதாக தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின் நிமித்தமாக (யாத் 3:8)

நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் இச்சையினால் உலகத்தில் உண்டான கேட்டுக்குத் தப்பி, அவருடைய திவ்ய சுபாவத்திற்குப்பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களைத் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார் (2 பேதுரு 1:4)

**2.** எகிப்திலிருந்து இஸ்ரவேலர் விடுதலையாக்கப்பட்ட விதத்தை ஆவிக்குரிய அனுபவங்களோடு விவரி?

(i) கர்த்தருடைய பலத்தகையினாலும் ஓங்கிய புயத்தினாலும், மகா தண்டனைகளினாலும் விடுதலையாக்கினார். பார்வோன் தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, இஸ்ரவேலரைப் போகவிடுவதற்கு மறுத்த ஒவ்வொருமுறையும், தேவன் பார்வோனையும் எகிப்தியரையும் வாதித்து இஸ்ரவேலரை (யாத் 6:1,6)விடுதலையாக்கினார். இது ரோமர் 15: 18,19 இல் விவரிக்கப்பட்டுள்ளவற்றிற்கு ஒரு நிழலாட்டமாயிருக்கிறது. புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப் பண்ணும் பொருட்டு, தேவன் தாமே அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் நாம் பிரசங்கிக்கிற சுவிசேக்ஷத்திற்குச் சாட்சி கொடுத்திருக்கிறார்(எபி 2:4)

(ii) பஸ்காவை ஆசரிப்தின் மூலமாக விடுதலையாக்கினார்(எபி 11:28). ஒவ்வொரு வீட்டாரும் ஒரு ஆட்டுக்குட்டியை அடித்ததின் மூலம் பஸ்காவை ஆசரித்தனர். புதிய ஏற்பாட்டில், பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டு இருக்கிறார் (1 கொரி 5:7)(எபி2:9) நம்முடைய மீறுகல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்ளினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசா 53:5)

ஆகையால் நாம் இயேசுவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, நம்முடைய பாவங்களுக்காக மெய்யாகவே மனஸ்தாபப்பட்டு அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடும் போது அவருடைய இரத்தம் நம்மைச் சுத்திகரிக்கிறது.(1 யோ 1:7-9) நாம் அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பைப் பெற்றுக் கொள்கிறோம்.(எபே 1:7)

**VI** *<u>போதனை :</u>* (2 Marks)

இஸ்ரவேல் புத்திரருடைய கூக்குரலைக் கேட்டு, அவர்களுடைய உபத்திரவங்களிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் அவர்கள் பஸ்கா ஆசரித்ததின் மூலம் தேவன் அவர்களை விடுதலையாக்கினார். அதுபோலவே, நம்முடைய பாவங்களுக்காக நாம் மனஸ்தாபப்பட்டு, கர்த்தராகிய இயேசுவை நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தேவனை நோக்கிக் கூப்பிடும்போது, நம்மை எல்லாவித அடிமைத்தனங்களிலிருந்தும் விடுதலையாக்க அவர் வல்லவராயிருக்கிறார்.

*****************

# இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி 2)

வனாந்தரத்திற்குள் தப்பிச் சென்றதும் சிவந்த சமுத்திரத்தைக் கடந்ததும்

**I** *மனப் பாடவசனம் :* (2 Marks)

ரோமர் 6 : 11-13 :

அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்,

ஆகையால் நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக.

உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்.

கலாத்தியர் 2 : 20

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காக் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::*

1. இஸ்ரவேலர் எகிப்தில் எந்த இடத்திலிருந்து கால்நடையாய் தங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தனர்?
   ராமசேஸ் (யாத் 12: 37 )

2. இஸ்ரவேலரின் பிரயாணத்தில், எகிப்தை விட்டுப் புறப்பட்டவர்கள் எத்தனை பேர்?
   பிள்ளைகள் தவிர மொத்தம் ஆறுலட்சம் புருக்ஷர்கள் எகிப்தை விட்டுப் புறப்பட்டார்கள் (யாத் 12: 37)

3. இஸ்ரவேலர் எகிப்தை விட்டு கானானை சென்றடையும் வரை கால்நடையாய் தங்கள் பிரயாணத்தை தொடந்தார்கள் - இது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் எதைக் காட்டுகிறது?
   இது நம் ஆவிக்குரிய ஜவியத்தின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை நம்மில் காணப்பட வேண்டிய தாழ்மையைக் காட்டுகிறது.(பாடத்திட்டம்)

4. ஏத்தாம் என்பதன் பொருள் என்ன?
   கோட்டை (சங்கீதம் 18:1,2)

5. சுக்கோத்தில் இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்ட கட்டளை யாது?
   இங்கு முதற்பேறனைத்தையும் கர்த்தருக்குப் பரிசுத்தப்படுத்த வேண்டுமென்ற கட்டளை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.(யாத் 13:2)

6. இஸ்ரவேலரின் பிரயாணத்தில் நாணல்கள் மிகுதியாக காணப்பட்ட பள்ளத்தாக்கு எது?
   ஈரோத் (யாத் 14:2)

7. சிவந்த சமுத்திரத்தைக் கடத்தல் - என்பது எதற்கு நிழலாட்டமாயிருக்கிறது?
   தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதற்கு நிழலாட்டமாயிருக்கிறது. (பாடத்திட்டம்)

8. தேவன் நம்மை எதற்காக சத்திய வசனத்தைக் கொண்டு ஜெநிபித்தார்?
   தேவன் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மை சத்திய வசனத்தினாலே ஜெநிபித்தார் (யாக் 1:18)

**III** ***ஒரிரு வாக்கிய□களில் விடையளி :*** (2 Marks)

1. இஸ்ரவேலர் பல்வேறு இடங்களில் பாளயமிறங்கினார்கள் - இது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் எதைக் குறிக்கிறது?
   நம்மை ஆழமான பரிசுத்தமாகுதலின் ஜுவியத்திற்கு வழி நடத்தும் பலவித ஆவிக்குரிய அனுபவங்களையும் பரீட்சைகளையும் சோதனைகளையும் குறிக்கிறது. (பாடத்திட்டம்)

2. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து ராமசேசை விட்டு புறப்பட்டதிலிருந்து சிவந்த சமுத்திரம் வரும் வரைக்கும் அவர்கள் பாளயமிறங்கிய இடங்களை வரிசையாக குறிப்பிடுக?
   1. சுக்கோத் (யாத் 12:37)
   2. ஏத்தாம் (யாத் 13:20)
   3. ஈரோத் (யாத் 14:2)

3. இஸ்ரவேலரின் பிரயாணத்திற்கு தேவன் வனாந்தர வழியை ஏன் தேர்ந்தெடுத்தார்?
   ஜனங்கள் யுத்தத்தைக் கண்டால் மனமடிந்து எகிப்துக்குத் திரும்புவார்கள் என்று சொல்லி, பெலிஸ்தரின் தேசவழியாய்ப் போவது சமீபமானாலும் தேவன் அவர்களை அந்த வழியாய் நடத்தாமல் சிவந்த சமுத்திரத்தின் வனாந்தர வழயாய் ஜனங்களைச் சுற்றிப் போகப் பண்ணினார் (யாத் 13:17,18)

4. இஸ்ரவேலரின் பிரயாணத்தில், சுக்கோத்தில் நடந்தது என்ன? அதன் ஆவிக்குரிய அர்த்தத்தையும் எழுதுக?
   சுக்கோத் என்ற இடத்தில், முதற்பேறு அனைத்தையும் கர்த்தருக்குப் பரிசுத்தபடுத்த வேண்டுமென்ற கட்டளை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது (யாத் 13:2) இதன் காரணம் பஸ்காவை ஆசரித்ததின் மூலம் பாதுகாக்கப்பட்வர்கள் முதற்பேறானவர்களே அதுபோலவே தேவன் சித்தங்கொண்டு தம்முடைய சிருக்ஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்திருக்கிறார் (யாத் 1:18)

5. ஏத்தாம் என்பதன் பொருள் என்ன? அது நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் எவ்வகையான அனுபவங்களைக் காட்டுகிறது?
   ஏத்தாம் என்பதன் பொருள் கோட்டை என்பதாகும். இது நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் ஆரம்பத்தில் கிடைக்கும் இரட்சிப்பின் சந்தோக்ஷமாகிய அனுபவத்திற்குப் பின் நாம் நம் தேவன் பேரில் வைக்கும் விசுவாசத்தைக் குறிக்கிறது. அதன் பின் கர்த்தர் நமக்குப் பெலன், கன்மலை, கோட்டை முதலானவைகளாகிறார். (சங்கீதம் 18:1,2)

6. இஸ்ரவேலரின் பிரயாணத்தின் போது கர்த்தர் பகலில் மேகஸ்தம்பத்திலும், இரவில் அக்கினி ஸதம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றது எதைக் காட்டுகிறது?
   கர்த்தர் பகலில் மேகஸ்தம்பத்திலும், இரவில் அக்கினி ஸ்தம்பத்திலும் இஸ்ரவேலருக்கு முன் சென்றார் என்பது, நாம் கர்த்தர் மேல் நம் நம்பிக்கையை வைக்கும் போது பகலானாலும் இரவானாலும் தேவன் நம்மை எவ்விதம் வழி நடத்துகிறார் என்பதைக் காட்டுகிறது.

7. ஈரோத் என்ற இடத்தில் என்ன சம்பவித்தது? இதின் ஆவிக்குரிய அர்த்தத்தையும் விளக்குக?
   ஈரோத் மிகுதியான நாணல்கள் இருந்த ஒரு பள்ளத்தாக்கு ஆகும். இந்த இடத்தில் தங்களுக்கு முன்பாக சிவந்த சமுத்திரத்தையும், பின்பாக தங்களைப் பின்தொடருகிற எகிப்திய சேனையையும் இஸ்ரவேலர் கண்டனர். அவர்கள் இதை ஒரு கடும் சோதனையாக உணர்ந்து, நாணலைப் போல அசைந்து எகிப்தை விட்டுப் புறப்பட்டதற்காக வருந்த ஆரம்பித்தனர் (யாத் 14: 11,12)
   இதனை ஆவிக்குரிய அர்த்தத்தில் பார்க்கும் போது, ஒருவன் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்ற பின்பும் தன் அவயவங்களில் போராடுகிற பிரமாணமாகிய தனக்குள் வாசமாயிருக்கிற பாவ சுபாவத்தின் காரணமாக உறுதியற்றவனாய் அசைந்து உலகத்திற்குத் திரும்பிப்போக ஏதுவுண்டு (ரோமர் 7:23) என்பதைப் காட்டுகிறது.

8. நாம் எப்பொழுது உறுதியற்றவர்களாக அசைந்து உலகத்திற்கு திரும்பிப்போக ஏது உண்டாகிறது?
   ஒருவன் இரட்சிக்கப்பட்டபின்பு சரீரத்தின் அவயவங்களில் உண்டாயிருக்கிற போராடுகிற பிரமாணமாகிய தனக்குள் வாசமாயிருக்கிற பாவ சுபாவத்தின் காரணமாக உறுதியற்றவனாய் அசைந்து உலகத்திற்குத் திரும்பிப்போக ஏதுவுண்டாகிறது(ரோமர்7:18-23)

9. இஸ்ரவேல் ஜனங்கள் சிவந்த சமுத்திரத்திற்கு அருகில் இருந்த போது தேவன் அவர்களுக்கு கொடுத்த இரண்டு கட்டளைகள் என்ன?
   இஸ்ரவேல் ஜனங்கள் சிவந்த சமுத்திரத்திற்கு அருகில் இருந்த போது, தேவன் அவர்களை நோக்கி:

(i) நீங்கள் நின்று கொண்டு இன்றைக்கு கர்த்தர் உங்களுக்கு செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள். இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை என்றைக்கும் இனி காணமாட்டீர்கள் (யாத் 14:13)

(ii) புறப்பட்டுப் போங்கள் (யாத் 14:15) என்ற இந்த இரண்டு கட்டளைகளை அவர்களுக்குக் கொடுத்தார்.

**10.** நாம் எப்பொழுதிலிருந்து ஜெய ஜீவியம் செய்ய ஆரம்பிக்கிறோம்?

தண்ணீர் ஞானஸ்நானத்திலே நம் பழைய மனுக்ஷன் தன் பாவ சரீரத்துடன் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக அடக்கம் பண்ணப்படுகிறான். அப்பொழுதிருந்து நாம் ஜெயஜீவியம் செய்ய ஆரம்பிக்கிறோம். (ரோமர் 6:4-7,9)

**IV** ***<u>சுருக்கமான விடையளி:</u>*** (4/6 Marks)

ஈரோத் என்னும் இடத்தில் இஸ்ரவேலர் ஒரு கடும் சோதனையைச் சந்தித்தபொழுது கர்த்தர் தங்களை விடுவிக்கும்படியாக அவர்கள் செய்தது என்ன?அதனை புதிய ஏற்பாட்டு அனுபவங்களோடு ஒப்பிடுக?

(i) <u>தேவனை நோக்கி கூப்பிட்டனர் (யாத் 14:10)</u>

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். அதுபோலவே, புதிய ஏற்பாட்டு ஜீவியத்தில், நம்முடைய பாவ சுபாவத்தினால் நெருக்கப்படும் போது, சலிப்படைந்து, நிர்பந்தமான மனுக்ஷன் நான்! இந்த மரணசரீரத்திலிருந்து யார் என்னை விடுதலையாக்குவார்? என்று கர்த்தரை நோக்கி முறையிடும் இடத்திற்கு வந்து விடுகிறோம் (ரோமர் 7:24)

(ii) <u>கர்த்தர் பேரில் விசுவாசம் வைத்தார்கள்:</u>

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் விசுவாசத்தை கர்த்தர் பேரில் வைத்து, மோசேக்கு கொடுக்கப்பட்ட தேவ ஆலோசனைக்குக் கீழ்படிய வேண்டியிருந்தது.(யாத் 4:30,31) அதுபோலவே, கர்த்தரில் நம் நம்பிக்கையை வைத்து, அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய ஆலோசனையான தண்ணீர் ஞானஸ்நானத்துக்கு கீழ்படிய ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**V** ***<u>விரிவான விடையளி</u>*** : (10 Marks)

**1.** 'இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைக் கடத்தல்' இதன் ஆவிக்குரிய அர்த்தத்தை வசன ஆதாரத்துடன் எழுது?

(i) சிவந்த சமுத்திரத்தைக் கடத்தல் என்பது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதற்கு நிழலாட்டமாயிருக்கிறது. தண்ணீர் ஞானஸ்நானத்தில் நாம் நம்முடைய பாவசுபாவத்துக்கு மரித்து கிறிஸ்துவின் மரணத்திற்குள் அடக்கம் பண்ணப்படுகிறோம். (ரோமர் 6: 2-4) அதன் பின்னர் நம் ஜீவிய காலமெல்லாம் நம்மை பாவத்திற்கு மரித்தவர்களாக நாம் தொடர்ந்து எண்ணிக்கொண்டிருக்கிறோம் (ரோமர்6:11) அப்போது நம்முடைய பாவ சுபாவம் மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகிறது (ரோமர் 8:3)

(ii) 'புறப்பட்டுப்போங்கள்'. (யாத் 14:15). இஸ்ரவேல் ஜனங்கள் புறப்பட்டுப் போகவேண்டுமென்று அவர்களுக்கு சொல்லப்பட்டபோது, அவர்கள் கீழ்படிந்தார்கள். நாமும் கூட புறப்பட்டுப்போக வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதன் முலம் தேவனுடைய ஆலோசனைக்கு நாம் கீழ்படியும்போது, மரணபரியந்தம் கீழ்படிந்தவரான கிறிஸ்துவின் சிந்தைக்கு பங்குள்ளவர்களாகிறோம். இப்படியாக நீதியை நடப்பிக்கும்படி நாம் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகிறோம். (ரோமர் 6: 11-13)

(iii) இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தபின், அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார். குதிரையையும், குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார் என்று ஜெயத்தின் கீதம் பாடினார்கள் (யாத் 15:1). அதுபோலவே, தண்ணீர் ஞானஸ்நானத்தில் பழைய மனுக்ஷன் தன் பாவ சரீரத்துடன் கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக அடக்கம் பண்ணப்படுகிறான். நாம் ஜெய ஜீவியம் செய்ய ஆரம்பிக்கிறோம் (ரோமர் 6:4-7,9).

**VI** ***<u>போதனை :</u>*** (2 Marks)

நாம் தொடக்கத்தில் கிடைக்கிறதான இரட்சிப்பின் சந்தோக்ஷத்தில் மட்டும் திருப்தியடையாமல், தண்ணீர் ஞானஸ்நானத்தில் தேவ ஆலோசனைக்குக் கீழ்ப்படிய ஆயத்தமுள்ளவர்களாய் இருந்து, ஜெய ஜீவியம் செய்ய வாஞ்சிக்க வேண்டும்.

**************

# இஸ்ரவேலரின் பிரயாணம் (பகுதி 3)

## சூர் முதல் ஆலூஸ் வரை

**I** *மனப பாடவசனம் :* (2 Marks)

யாத் 15:26 :

நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க்கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன், நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்.

11 பேதுரு 1:4 :

இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::*

1. சூர் வனாந்தரம் எங்கே உள்ளது?
   ஏத்தாம் வனாந்தரத்தின் ஒரு பகுதி சூர் வனாந்தரம் எனப்படும் (எண் 33:8)

2. இஸ்ரவேலர் சூர் வனாந்தரத்தில் எத்தனை நாட்கள் பிரயாணம்செய்தனர்?
   மூன்று நாட்கள் (எண்,33:8)

3. வனாந்தரம் நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் எதை குறிக்கிறது,
   வேறுபாட்டின் ஜீவியத்தை குறிக்கிறது. (பாடத்திட்டம்)

4. கசப்பான தண்ணீர் எங்கே மதுரமானது?
   மாரா (யாத் 15: 23-26)

5. நம்முடைய மாராக்களை மதுரமாக்குகிறவர் யார்?
   இயேசு

6. ஏலீம் எப்படிப்பட்ட இடமாயிருந்தது?
   ஏரீம் பன்னிரண்டு நீரூற்றுகளையும், எழுபது பேரீச்ச மரங்களையும் கொண்ட ஒரு பாலைவனச் சோலையாயிருந்தது.(யாத் 15:27, எண் 33:9)

7. சீன் வனாந்தரத்திலிருந்து தேவன் இஸ்ரவேலரை எதனால் போஷித்தார்?
   மன்னா

8. வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பம் யார்?
   இயேசு கிறிஸ்து (யோவான் 6:32,33)

9. “தொப்கா” என்பதன் பொருள் என்ன?
   ‘‘தொப்கா’’ என்றால் தட்டுதல் என்று பொருள்.

10. “ஆலூஸ் ” என்பதன் பொருள் என்ன?
    ஆலூஸ் என்றால் தண்ணீர் அருகில் என்பது பொருள்.

11. தேவனுடைய வசனத்திலிருந்து புதிய வெளிப்படுத்தல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நாம் எவற்றை பேணி வளர்த்துக் கொள்ள வேண்டும்?
    ஜெப ஜீவியம், தியான ஜீவியம் ஆகியவற்றை பேணி வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**III** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*** (2 Marks)

1. ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்கு இவ்வுலகம் அளிக்கக்கூடிய கவர்ச்சிக்குரியவைகள் யாவை?
   ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்கு இவ்வுலகமானது பணம், ஐசுவரியம், வீடுகள், சுகபோகம், பதவி, அதிகாரம் கீர்த்தி, களியாட்டு, நாகரீகம் போன்ற கவர்ச்சிகளையும், வசீகரிக்கக்கூடியவற்றையும் அளிக்கிறது.

2. ஆவிக்குரிய மனிதனுக்கு இவ்வுலகத்திற்குரிய காரியங்கள் எவ்வாறு காணப்படுகிறது?
   ஆவிக்குரிய மனிதனுக்கு இவ்வுலகத்திற்குரிய காரியங்களெல்லாம் மாயையாகவும் வறண்டதும் விடாய்த்ததுமான வனாந்தரமாகவும் காணப்படுகிறது.

3. மாராவின் தண்ணீர் எவ்வாறு மதுரமாயிற்று?
   மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்தது. கர்த்தர் மோசேக்கு ஒரு குறிப்பிட்ட மரத்தைக் காண்பித்தார். அவன் அதை அந்த தண்ணீரில் போட்ட போது அந்த தண்ணீர் மதுரமாயிற்று (யாத் 15:25)

4. தேவன் எப்பொழுது நமக்கு பரிகாரியாகிறார்?
   நாம் கர்த்தரின் சத்தத்தைக் கவனமாயக் கேட்டு அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொள்ளும்போது தேவன் நமக்குப் பரிகாரியாகிறார். (யாத் 15:26)

5. தேவன் இஸ்ரவேலருக்கு மாராவில் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன?
   நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக் கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன், நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்ற வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார்.(யாத் 15:26)

6. மாரா நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் எதை உணர்த்துகிறது?
   தெய்வீக சுகம் என்பது தேவ ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட தேவனுடைய கட்டளை அல்லது நியமம் என்பதை உணர்த்துகிறது.

7. தெய்வீக சுகம் யாருடைய ஜீவியத்தில் அனுபவிக்கக் கூடியது?
   தெய்வீக சுகம் என்பது தேவனுடைய வசனத்தின்படி ஒழுங்குக்குள் கொண்டு வரப்பட்டவர்களுடைய ஜீவியத்தில் மட்டுமே அனுபவிக்கக் கூடியது.

8. இயேசு நம்முடைய மாராக்களை எவ்விதம் மதுரமாக்குகிறார்?
   மாராவில் வெட்டப்பட்டு கசப்பான தண்ணீரில் போடப்பட்ட அந்த மரத்தைப் போல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாம் கல்வாரியில் நமக்காக பட்ட பாடுகளினாலும் ஏற்றுக்கொண்ட தழும்புகளினாலும் நம்முடைய மாராக்களை மதுரமாக்குகிறவராயிருக்கிறார்.

9. ஏலிம் - குறிப்பு வரைக:
   இது பன்னிரண்டு நீரூற்றுகளையும், எழுபது பேரீச்ச மரங்களையும் கொண்ட ஒரு பாலை வனச் சோலையாகும். இது அப்போஸ்தல உபதேசங்களில் உறுதியாய்த் தரித்திருக்கிற தேவ ஊழியரும் விசுவாசிகளும் சேர்ந்த பரிசுத்தவான்களின் ஐக்கியத்தைக் காண்பிக்கிறது.(யாத் 15:27)

10. தேவன் சீன் வனாந்தரத்தில் இஸ்ரவேலரை எவ்வாறு, ஏன் சோதித்தார்?
    சீன் வனாந்தரத்தில் தேவன் இஸ்ரவேலரைச் சிறுமைப்படுத்தி, பசியினால் வருத்தி, மன்னாவினால் அவர்களைப் போஷித்து, அதினால் அவர்கள் அவருடைய நியாயப்பிரமாணத்தின் படி நடப்பார்களோ, இல்லையோ என்று அறியும்படிக்கு அவர்களைச் சோதித்தார் (உபா 8: 2,3, யாத் 16:4)

11. “தொப்கா” என்பது ஆவிக்குரிய ஜீவியத்தில் எதைக் காண்பிக்கிறது?
    “தொப்கா”என்றால் “தட்டுதல்” என்று பொருள். இது கதவைத் திறக்கும் வரையிலும் விடாமல் ஒருவர் தொடர்ந்து தட்டிக்கொண்டே இருப்பது போல, பதில் கிடைக்கும் வரை நாம் சோர்ந்து போகாமல் ஜெபித்துக் கொண்டிருக்கும், ஜெப ஜீவியத்தைக் காண்பிக்கிறது. (எண் 33:12)

12. ஆலூஸ் என்பது நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் எதைக் காண்பிக்கிறது?

ஆலூஸ் என்றால் தண்ணீர் அருகில் என்பது பொருள். இது மனுக்ஷனுடைய இருதயத்திலுள்ள ஆழமான தண்ணீரைப்போல் இருக்கும் யோசனையைக் குறிக்கிறது (நீதி 20:5) நம் ஜீவியத்தில் தேவனுடைய வசனத்தைத் தியானிப்பதற்கு இது அடையாளமாயிருக்கிறது (எண் 33:13)

13. ஜெப ஜீவியம் தியான ஜீவியத்தை அலட்சியமாக விட்டு விடும்போது நமக்கு என்ன நேரிடும்?

ஜெப ஜீவியத்தையும் தியான ஜீவியத்தையும் அலட்சியமாக விட்டுவிடுவது, சோதனை நேரங்களில் இஸ்ரவேல் ஜனங்களைப்போல நாம் முறுமுறுப்பதற்கு வழி வகுத்து விடும்..

14. மனுஷன் எதினால் பிழைப்பான்? தேவனுடைய பிள்ளைகள் எதினால் பிழைப்பார்கள்?

மனுஷன் அப்பத்தினால் பிழைப்பான். தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பார்கள் (உபா 8:3)

15. சிவந்த சமுத்திரத்தைக் கடந்தபின் இஸ்ரவேலர் பாளயமிறங்கின முதல் ஆறு இடங்களின் பெயரை வரிசையாகக் குறிப்பிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. | சூர் வனாந்தரம் | - | யாத் 15:22 |
| 2. | மாரா | - | யாத் 15:23 |
| 3. | ஏலீம் | - | யாத் 15:27 |
| 4. | சீன்வனாந்தரம் | - | யாத் 16:1 |
| 5. | தொப்கா | - | எண் 33:12 |
| 6. | ஆலூஸ் | - | எண் 33:13 |

## IV *<u>சுருக்கமானவிடையளி:</u>* (4/6 Marks)

1. சூர் வனாந்தரத்தில் இஸ்ரவேலருக்கு என்ன நேரிட்டது? ஆவிக்குரிய ஜீவியத்தில் அது நமக்கு கற்றுக்கொடுக்கும் பாடம் என்ன?

சிவந்த சமுத்திரத்தைக் கடந்த பின் இஸ்ரவேலர் ஏத்தாம் வனாந்தரத்தின் ஒரு பகுதியான சூர் வனாந்தரத்துக்கு வழிநடத்தப்பட்டனர். இவ்வனாந்தரத்தில் அவர்கள் மூன்று நாட்கள் பிரயாணம் செய்தும் அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை.

அதுபோல நாம் இந்த உலகத்தில் ஜீவித்தாலும் இந்த உலகம் இருண்டதும் பாழுமான வனாந்தரமாக நமக்குள் காணப்படுவதால் ஆவிக்குரிய முறையில் இது வேறுபாட்டின் ஜீவியத்தைக் குறிக்கிறது. ஜென்மசுபாவமுள்ள, மனுஷனுக்கு இவ்வுலகமானது, பணம், ஐசுவரியம், வீடுகள், சுகபோகம், பதவி, அதிகாரம், கீர்த்தி, களியாட்டு, நாகரீகம் போன்ற கவர்ச்சிகளையும் வசீகரிக்கக்கூடியவற்றையும் அளிக்கிறது. ஆனால் ஆவிக்குரிய மனிதனுக்கோ, உலகத்திற்குரிய இந்தக் காரியங்களெல்லாம், மாயையாகவும், வறண்டதும், விடாய்த்ததுமான வனாந்தரமாகவும் காணப்படுகிறது. (யாத் 15:22,எண் 33:8)

2. சீன் வனாந்தரத்தில் இஸ்ரவேலர் சந்தித்த சோதனைகளையும் அதன் ஆவிக்குரிய கருத்தையும் எழுதுக.

சீன் வனாந்தரத்தில் தேவன் அவர்களை சிறுமைப்படுத்தி, அவர்களை பசியினால் வருத்தி, மன்னா வினால் அவர்களைப் போக்ஷித்தார்.(யாத் 16:4) அதினால், அவர்கள் அவருடைய நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ, இல்லையோ என்ற அவர்களைச் சோதித்தார்.(உபா 8:2,3, யாத் 16:4). அது போல நம்முடைய ஜீவியத்திற்கு கர்த்தராகிய இயேசுவே மன்னாவாயிருக்கிறார். இயேசு, ''நானே ஜீவ அப்பம் என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான'' என்றார்.(யோவா6:32,35) கர்த்தராகிய இயேசுவினிடத்தில் நித்திய ஜீவ வசனங்கள் உண்டு. நாம் தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அனுதின ஜீவியத்தில் ஒவ்வொரு நாளும் ஜீவிப்பதற்குத் தேவையான புதிய வெளிப்படுத்தல்களைத் தேவனுடைய வசனத்திலிருந்து நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**V** ***விரிவான விடையளி*** : (10 Marks)

**1.** இஸ்ரவேல் ஜனங்களுக்கு மாராவில் சம்பவித்தது என்ன?அங்கே தேவன் அவர்களுக்கு கட்டளையிட்ட நியமங்களும் நியாயங்களும் யாவை? தெய்வீக சுகத்தை யார் அனுபவிக்கக்கூடும் என்பதை விளக்குக.

(i) இஸ்வேலர் மாராவுக்கு வந்த போது, அவர்களுக்குத் தண்ணீர் கிடைத்தது. ஆனால் அது, அவர்கள் குடிக்கக் கூடாதபடி கசப்பாயிருந்தது. தேவன் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார். அவன் அதை அந்தத் தண்ணீரில் போட்டபோது, அத்தண்ணீர் மதுரமாயிற்று. அங்கே தேவன் அவர்களுக்கு ஒரு நியமத்தையும் நியாயத்தையும் கட்டளையிட்டு அவர்களை சோதித்து நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாயக் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன். நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்.(யாத் 15:26)

(ii) அது போலவே தெய்வீக சுகம் என்பதும் தேவனுடைய வசனத்தின்படி ஒழுங்குக்குக் கொண்டு வரப்பட்ட ஜீவியத்தில் மட்டுமே அனுபவிக்கக்கூடியதாகும். இந்த ஒழுங்கு ஒரு வேளை கசப்பாய்த் தோன்றலாம். இதுவும் ஒரு மாராதான். ஆனால் வெட்டப்பட்டு தண்ணீரில் போடப்பட்ட அந்த மரத்தைப்போல தாம் பட்ட பாடுகளினால் கீழ்படிதலைக் கற்றுக்கொண்டு இப்போது நமக்கு ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையைத் தந்து, நம்முடைய மாராக்களை நமக்கு மதுரமாக்குகிற இயேசு கிறிஸ்து நமக்கு இருக்கிறார்.

************

# இஸ்ரவேலரின் பிரயாணம்

## (பகுதி IV)

(ரெவிதீம் முதல் சீனாய் வரை)

**I.** ***மனப்பாட வசனம்*:** (2 Marks)

யாக்கோபு 1: 2, 3

என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்கும் என்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.

**II.** ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி*:**

1. இஸ்ரவேல் ஜனங்கள் ஆலூஸ்க்குப் பிறகு பாளயமிறங்கின இரண்டு இடங்களைக் குறிப்பிடுக?
   i. ரெவிதீம் (யாத்17:1) ii. சீனாய்வனாந்தரம் (யாத் 19:2)

2. ரெவிதீமிற்கு இடப்பட்ட வேறு இருபெயர் யாது?
   ரெவிதீமிற்கு மாசா என்றும், மேரிபா என்றும் வேறு இருபெயர்கள் கொடுக்கப்பட்டது. (யாத் 17:7)

3. கன்மலை யாரைக் குறிக்கிறது?
   கன்மலை என்பது நமக்காக அடிக்கப்பட்ட கிறிஸ்துவைக் குறிக்கிறது. (1 கொரி 10:4)

4. கோல் என்பது எதைக் குறிக்கிறது?
   கோல் என்பது தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. (யாத் 7:20)

5. கன்மலையைக் கோலால் அடிப்பது என்பது எதைக் குறிக்கிறது?
   கன்மலையைக் கோலால் அடிப்பது என்பது நாம் ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படி, கிறிஸ்து (கன்மலை) நம் மேல் வரவிருந்த நியாயத்தீர்ப்பைத் (கோல்) தம்மேல் ஏற்றுக்கொண்டதைக் குறிக்கிறது.

6. இஸ்ரவேலரைத் தாக்கி, பின்வருகிற பாளயத்திலுள்ளபலவீனரையும் இளைத்து விடாய்த்தவர்களையும் வெட்டிப்போட்டவர்கள் யார்?
   அமலேக்கியர். (உபா 25:17,18)

7. ரெவிதீமில் அமலேக்கியருடன் யுத்தம் நடந்தபொழுது மலையின் உச்சியில் ஏறெடுக்கப்பட்டிருந்த மோசேயின் கைகளை தாங்கிப்பிடித்தவர்கள் யார்?
   மோசேயின் கைகளை ஆரோனும், ஊரும் தாங்கிப்பிடித்தார்கள். (யாத் 17:12)

8. ரெவிதீமில் அமலேக்கியருக்கு விரோதமான யுத்தத்தில் மோசே எந்த மலையின் உச்சியில் இருந்து தன் கைகளை ஏறெடுத்தான்?
   மோசே ஓரேப் என்னும் மலையின் உச்சியி- ருந்து தன் கைகளை ஏறெடுத்தான். (யாத் 17:6,11)

9. ரெவிதீமில் மோசே கட்டிய ப- பீடத்தின் பெயர் என்ன? அதன் பொருள் யாது?
   ரெவிதீமில் மோசே கட்டிய ப- பீடத்தின் பெயர் யேகோவா நிசி. அதன் பொருள் கர்த்தர் என் ஜெயக்கொடி. (யாத் 17:15)

10. நாம் எப்பொழுது தேவனுடைய வாசஸ்தலமாகிறோம்?
    பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறும் பொழுது நாம் தேவனுடைய வாசஸ்தலமாகிறோம். (ஆலயமாகிறோம்) (1 கொரி 3:16)

11. பரிசுத்த ஆவியினால் நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருப்பது எது?
    பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. (ரோமர் 5:5)

## III. *ஓரிரு வாக்கியங்களில் விடையளி*: (2 Marks)

1. மோசேயின் கைகளை மலையில் தாங்கிய ஆரோனும், ஊரும் புதிய ஏற்பாட்டில் யாருக்கு அடையாளமாயிருக்கிறார்கள்?

நடத்திப்புக்காரர்களோடு ஐக்கியப்பட்டு, அவர்களை ஜெபத்தில் தாங்குகிற சபையிலுள்ள ஒரு கூட்டம் பரிசுத்தவான்களுக்கு அடையாளமாக இருக்கிறார்கள்.

2. அமலேக்கியரின் ஆவி எப்பொழுது நம்மைத் தாக்கும்?

சோதனை வேளைகளில் நாம் இஸ்ரவேல் புத்திரர் செய்தது போல முறுமுறுப்போமாயின், நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் பெலவீனப்பட்டு இளைத்து விடாய்த்து பின் தங்கினவர்களாகக் காணப்படுவோம். அப்பொழுது அமலேக்கியரின் ஆவி நம்மைத் தாக்கும். (உபா 25:18)

3. இயேசு பத்துக் கற்பனைகளை எத்தனைப் பிரிவுகளாக பிரித்தார்? அவைகள் யாவை?

இயேசு பத்துக் கற்பனைகளை

i. தேவன்பால் வைக்கும் அன்பு

ii. பிறன்பாலுள்ள அன்பு என்ற இரண்டு பிரிவுகளாகப் பிரித்தார்.(மத். 22:35-40)

4. சீனாய் வனாந்தரத்தில் தேவன் மோசேயை மலையுச்சிக்கு அழைத்து அவனுக்கு கொடுத்தவைகள் யாவை?

தேவன் மோசேயை மலையுச்சிக்கு அழைத்து, கீழ்க்கண்டவற்றை கொடுத்தார்,

i. பத்துக் கற்பனைகள்

ii. ஆசரிப்புக் கூடாரத்தை உண்டு பண்ணவேண்டிய மாதிரி

iii. ஆசாரியத்துவத்தைப் பற்றிய விவரங்கள்

5. கர்த்தர் சீனாய் மலையில் அக்கினியில் வந்திறங்கி இஸ்ரவேல் புத்திரரோடு நேரடியாக சம்பாஷித்தது எதற்கு நிழலாட்டமாயிருக்கிறது?

கர்த்தர் சீனாய் மலையில் அக்கினியில் வந்திறங்கி, அவர்களுடன் சம்பாஷத்தது பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும், ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கு நிழலாட்டமாயிருக்கிறது. (மத். 3:11)

6. நாம் எப்பொழுது பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகிறோம்? ஏன்?

நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற ப- களைச் செலுத்தும்படிக்கு, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகிறோம். (1 பேதுரு 2:5 ; வெளி 1:6)

## IV. *சுருக்கமான விடையளி*: (4/6 Marks)

1. ரெவிதீமிற்கு இடப்பட்ட வேறு இருபெயர்கள் யாது? ஏன் அவ்வாறு அழைக்கப்பட்டது? இங்கு தேவனுடைய வல்லமை எப்போது வெளிப்பட்டது?

i. ரெவிதீமிற்கு மாசா என்றும், மேரிபா என்றும் வேறு இருபெயர்கள் கொடுக்கப்பட்டது.

ii. ரெவிதீமில் இஸ்ரவேல் புத்திரருக்கு குடிக்கத்தண்ணீர் இல்லாதிருந்த போது அவர்கள் மோசேயிடம்வாதாடினதின் நிமித்தமும், கர்த்தரைப் பரீட்சைப் பார்த்ததின் நிமித்தமும், இந்த இடத்திற்கு மாசா என்றும், மேரிபா என்றும் பேரிடப்பட்டது. (யாத் 17:7)

iii. இங்கு மோசே கர்த்தருடைய வார்த்தையின்படி தன் கோ- னால் கன்மலையை அடித்தான். கன்மலையி- ருந்து தண்ணீர் பாய்ந்தது.. தேவனுடைய வல்லமை வெளிப்படுத்தப்பட்டது.

2. 'கன்மலை', 'கோல்', 'கன்மலையை கோலால் அடிப்பது' இவைகள் ஆவிக்குரிய பிரகாரம் எவைகளைக் குறிக்கிறது?

i. 'கன்மலை' என்பது நமக்காக அடிக்கப்பட்ட கிறிஸ்துவைக் குறிக்கிறது. (1 கொரி 10:4)

ii. 'கோல்' தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. நதியின் தண்ணீரை இரத்தமாக மாற்றி எகிப்தியரின் மேல் தேவ நியாயத்தீர்ப்பை வருவிக்கும்படி மோசே நதியை அடிப்பதற்கு உபயோகித்த கோல் இதுவே (யாத் 7 : 20)

iii. 'கன்மலையை கோலால் அடிப்பது' என்பது நாம் ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி கிறிஸ்து நம்மேல் வரவிருந்த நியாயத்தீர்ப்பைத் தம்மேல் ஏற்றுக் கொண்டதைக் குறிக்கிறது.

3. ரெவிதீமில் இஸ்ரவேலரைத் தாக்கி பின் வருகிற பாளயத்திலுள்ள இளைத்து விடாய்த்தவர்களை வெட்டிப் போட்டது யார்? அவர்களைக் குறித்த தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்ன?

i. அமலேக்கியர் இஸ்ரவேல் புத்திரரைத் தாக்கி, பின்வருகிற பாளயத்திலுள்ள பலவீனர்களையும் இளைத்து விடாய்த்தவர்களையும் வெட்டிப்போட்டார்கள். (உபா 25:17, 18)

ii. அமலேக்கியரைக் குறித்து தலைமுறை தலைமுறைதோறும் அவர்களுக்கு விரோதமாகக் கர்த்தருடைய யுத்தம் நடக்கும் என்று கர்த்தர் கூறினார். (யாத் 17:16)

4. அமலேக்கியரை மேற்கொள்ளும்படியாய் மோசேயும் இஸ்ரவேலரும் எந்த மூன்று காரியங்களைச் செய்ய வேண்டியதாயிருந்தது? அவற்றை சபையின் அனுபவத்தோடு விவரி?

முதலாவது மோசே தன் கைகளை ஏறெடுத்தவனாக மலையுச்சியில் இருக்க வேண்டியதாயிருந்தது. (யாத்.17:9-11). இது சபையின் அக்கிரமத்தைச் சுமந்து கொண்டு தேவசமூகத்தில் தங்கியிருக்கிற நடத்திப்புக்காரர்கள் சபையில் இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

இரண்டாவதாக ஆரோனும் ஊரும் மோசேயின் கைகளைத் தாங்க வேண்டியதாய் இருந்தது. (யாத்.17:12) இது நடத்திப்புக்காரரின் பட்சத்தில் நின்று அவர்களை ஜெபத்தில் தாங்க கூடிய சபையிலுள்ள பரிசுத்தவான்கள் சபையில் இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

மூன்றாவதாக யோசுவா பட்டயத்தினால் சத்துருவோடு யுத்தம் பண்ண வேண்டியதாயிருந்தது. (யாத்.17:13) இது நடத்திப்புக்காரரோடு சேர்ந்து நின்று பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட சத்தியத்துக்காகப் போராடக்கூடிய தேவனுடைய பிள்ளைகளைக் காட்டுகிறது.

## V. ***<u>விரிவான விடையளி</u>***: (10 Marks)

1. சீனாய் மலையில் சம்பவித்தவைகளையும் அதன் ஆவிக்குரிய கருத்துக்களையும் விவரி?

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்துக்கு வந்து, மலைக்கு எதிராகப் பாளயமிறங்கினார்கள். அவர்கள் தங்களைச் சுத்திகரித்துக் கொண்டு, மூன்றாம் நாளுக்கென்று ஆயத்தமாயிருக்க வேண்டியிருந்தது. மூன்றாம் நாளில் கர்த்தர் சீனாய்மலையில் அக்கினியில் வந்திறங்கி அவர்களோடுநேரடியாகச் சம்பாஷித்தார் (யாத்.19:18-20). இது பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கு நிழலாட்டமாயிருக்கிறது (மத். 3:11)

பின்பு தேவன் மோசேயை மலையுச்சிக்கு அழைத்து,

a. பத்துக் கற்பனைகளை கொடுத்தார். புதிய ஏற்பாட்டில், கர்த்தராகிய இயேசு இந்தப் பத்துக் கற்பனைகளையும் தேவன்பால் வைக்கும் அன்பு, பிறன்பாலுள்ள அன்பு என்று இரு பிரிவுகளாகப் பிரித்தார். (மத்.22:35-40). இந்த அன்பு நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. (ரோ. 5:5)

b. தேவன் தம்முடைய ஜனத்தின் மத்தியில் வாசம் பண்ணும்படியாக ஆசாரிப்புக் கூடாரத்தை உண்டு பண்ணும் படியாக மோசேயிடம் சொன்னார். அதினுடைய மாதிரியையும் அவனிடம் கொடுத்தார். ,இது புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலமாக நாமே தேவனுடைய ஆலயமாக அல்லது தேவனுடைய வாசஸ்தலமாக மாறுகிறோம். (1 கொரி. 3:16 ; 11 கொரி 6:16) தேவன் நமக்குள் வாசம் பண்ணுகிறார்.

c. தேவன் மோசேயிடம் ஆசாரியத்துவத்தைப் பற்றிய விவரங்களை கொடுத்தார். புதிய ஏற்பாட்டில் நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற ப- களைச் செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகிறோம் .(1 பேது2:5; வெளி1:6)

## VI. <u>போதனை</u>: (2 Marks)

நாம் பரீட்சைகளின் மத்தியில் முறுமுறுக்காது, பலவிதமான சோதனைகளைச் சந்திக்கும்போது அவைகள் யாவையும் மிகுந்த சந்தோஷமாக எண்ணவேண்டும். நாம் பின்தங்கிக் காணப்படுவோமானால், பிசாசு நம் ஆவிக்குரிய ஜீவியத்தை அழித்துப் போடுவான். எனவே பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாக நாம் முன்னேறிச் செல்ல வேண்டும்.

***********

# இஸ்ரவேலரின் பிரயாணம்

## (பகுதி V)

(கிப்ரோத் அத்தாவா முதல் காதேஸ் வரை)

**I. *மனப்பாட வசனம்*:** (2 Marks)

எபிரெயர் 5 : 4

மேலும், ஆரோனைப்போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை.

1 கொரி 10:11, 12

இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.

இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.

**II. *ஓரிரு வார்த்தைகளில் விடையளி*:**

1. சீனாய் வனாந்தரத்தி- ருந்து கானானை அடையும் படியாக இஸ்ரவேல் ஜனங்கள் எத்தனை வருடங்கள் பிரயாணம் பண்ணினார்கள்?
   39 வருடங்கள் (பாடத்திட்டம்)
2. சீனாய் வனாந்தரத்தி- ருந்து புறப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள் முதலாவதாக எங்கு பாளயமிறங்கினார்கள்?
   கிப்ரோத் அத்தாவா (எண் 33:16)
3. 'கிப்ரோத் அத்தாவா' என்பதின் பொருள் என்ன?
   "இச்சையின் கல்லறைகள்" (பாடத்திட்டம்)
4. 'கிப்ரோத் அத்தாவின்' மறுப்பெயர் என்ன?
   'எரிதல்' என்று பொருள்படும் 'தபேரா' (எண். 11:1-3)
5. நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக காணப்படாவிட்டால் என்ன நடக்கும்?
   நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக காணப்படாவிட்டால் நாம் பலவிதமான இச்சைகளில் விழுந்து விடுவோம். (ரோமர் 1:21,24,26)
6. கிப்ரோத் அத்தாவாவில்,இச்சித்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் கொடுத்த ஆகாரம் என்ன?
   காடைகள் (எண். 11:31)
7. ஆஸ்ரோத்தில் தேவன் யாரை குஷ்டரோகத்தால் வாதித்தார்?
   மிரியாம் (எண். 12:10)
8. மிரியாம் எத்தனை நாட்கள் பாளயத்திற்கு புறம்பே விலக்கப்பட வேண்டியதாயிருந்தது?
   ஏழு நாட்கள் (எண். 12:14)
9. கானான் தேசத்தை வேவு பார்க்க எத்தனை பேர் அனுப்பப்பட்டார்கள்?
   பன்னிரண்டு பேர்கள் (எண். 13:2)
10. கானான் தேசத்தை வேவு பார்த்து வந்தவர்களில், நற்செய்தி கொண்டு வந்தவர்கள் யார்?
    யோசுவாவும், காலேபும் (எண். 14:6-8)
11. கானான் தேசத்தை வேவு பார்த்து வந்தவர்களில் துர்ச் செய்தியை அறிவித்தவர்களுக்கு நேரிட்டது என்ன?

துர்ச்செய்தி கொண்டு வந்தவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்தார்கள். (எண். 14:37)

12. துளிர்த்த ஆரோனின் கோல் எங்கு வைக்கப்பட்டது?
உடன்படிக்கைப் பெட்டியில் வைக்கப்பட்டது. (எண். 17:10)

13. மிரியாம் எங்கு மரித்தாள்?
காதேஸில் மரித்தாள். (எண். 20:1)

## III. *ஓரிரு வாக்கியங்களில் விடையளி*: (2 Marks)

1. கிப்ரோத் அத்தாவா "தபேரா" என்று அழைக்கப்பட காரணம் என்ன?
கிப்ரோத் அத்தாவாவில் ஜனங்கள் முறையிட்டார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள் மேல் மூண்டது. கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிந்து பாளயத்தின் கடைசியில் இருந்த சிலரைப் பட்சித்தது. எனவே அந்த ஸ்தலம் எரிதல் என்று பொருள்படும் "தபேரா" என்று அழைக்கப்படுகிறது. முறுமுறுத்தலும் முறையிடுதலும் தேவனுக்கு அருவருப்பானவைகளாகும். (எண் 11:1-3) நாம் கர்த்தரை நம்பி, அவரை எக்காலத்திலும் ஸ்தோத்தரிக்க வேண்டும்.

2. இஸ்ரவேலரின் பிரயாணத்தில் ஆஸ்ரோத்தில் சம்பவித்தவைகளைச் சுருக்கமாக எழுதுக, அச்சம்வங்களினால் நாம் அறிந்து கொள்ளும் சத்தியம் என்ன?
ஆஸ்ரோத்தில் மிரியாமும், ஆரோனும் மோசேக்கு விரோதமாய்ப் பேசினார்கள். தேவனுக்குக் கோபமுண்டது. மிரியாம் குஷ்டரோகியானாள். மோசே அவளுக்காகப் பரிந்து பேசினாலும் கர்த்தருடைய வார்த்தையின்படி அவள் ஏழு நாள் பாளயத்துக்குப் புறம்பே இருக்க வேண்டியதாயிருந்தது. (எண் 12: 1-15)
இச்சம்வங்களி- ருந்து நம்மை நடத்தும்படி தேவனால் ஏற்படுத்தப்பட்ட நடத்திப்புக்காரரைக் குற்றப்படுத்துவது தேவனுடைய பார்வையில் கடுமையான குற்றமாகும் என்பதை அறிந்து கொள்ளுகிறோம்.

3. நம்முடைய ஆத்துமாக்களில் எது இளைப்பைக் கொண்டு வரும்?
நாம் தேவசித்தத்திற்கு விரோதமாக எதையாகிலும் பிடிவாதமாக வாஞ்சிப்போமானால்; தேவன் ஒருவேளை அதை நமக்குத் தருவார். ஆனால் அது நம்முடைய ஆத்துமாக்களில் இளைப்பைக் கொண்டுவரும். (சங் 106:14,15)

4. பாரான் வனாந்தரத்தில் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக எழும்பினவர்கள் யார்?
கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்கள் சபைக்குத் தலைவர்களும் பிரபலமானவர்களுமாகிய இருநூற்றைம்பது பேரைச் சேர்த்துக்கொண்டு, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக எழும்பினார்கள்.(எண்16:1)

5. கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டு திரைக்குள் பிரவேசிப்பவர்கள் யார்?
பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற தேவ ஜனங்கள் எல்லாருடைய மத்தியிலுமிருந்து தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு கூட்டத்தார் மட்டுமே, கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டு திரைக்குள் பிரவேசிப்பார்கள். (பாடத்திட்டம்)

6. காதேஸில் நடந்த சம்பவங்களை கூறு,
மிரியாம் காதேஸில் மரித்தாள். மோசேயிடம் கன்மலையைப் பார்த்துப் பேசும்படி கூறப்பட்டபோது அவன் கன்மலையை அடித்தான். அவன், கர்த்தரை விசுவாசிக்கத்தவறி, அவரை ஜனங்களுக்கு முன்பாகப் பரிசுத்தப்படுத்தாமற் போனான்.. (எண் 20:2, 7-12). இந்தக் கீழ்படியாமை அவனுக்கு அதிக நஷ்டத்தை உண்டாக்கியது. அவனால் கானானுக்குள் பிரவேசிக்கக் கூடாமற் போயிற்று.

## IV. *சுருக்கமான விடையளி*: (4/6 Marks)

1. கிப்ரோத் அத்தாவில் இஸ்ரவேலர் எதை இச்சித்தார்கள்? இதினிமித்தம் அவர்களுக்கு சம்பவித்தது என்ன? இச்சம்பவங்களினால் நாம் அடையும் எச்சரிப்பு யாது?
   i. கிப்ரோத் அத்தாவில் இஸ்ரவேலா் இறைச்சியை இச்சித்தார்கள். தேவன் தங்களுக்கு கொடுத்து வந்த மன்னாவை அவர்கள் அற்பமாக நினைத்து, எகிப்திலே தங்களுக்குக் கிடைத்து வந்த ஆகாரத்தின் மேல் ஏக்கம் கொண்டு அதை இச்சித்தனர். இஸ்ரவேலர் இச்சித்து கேட்டது போல இறைச்சி (காடைகள்) அவர்களுக்குக்

கொடுக்கப்பட்டன. ஆனால் அவர்கள் அந்த இறைச்சியைப்புசித்துக் கொண்டிருந்த போதே, பெரிய வாதையினால் அழிக்கப்பட்டார்கள். எனவே அந்த ஸ்தலம், "இச்சையின் கல்லறைகள்" என்று பொருள்படும், 'கிப்ரோத் அத்தாவா' என்று அழைக்கப்பட்டது. . (எண் 11:4-6)

இச்சம்பவங்களினால் நாம் அடையும் எச்சரிப்புகள்:

i. நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாகக் காணப்படாவிட்டால் நாம் பலவிதமான இச்சைகளில் விழுந்து விடுவோம். (ரோமர் 1:21,24,26) தேவன் நமக்கு தந்தவைகளைக் குறித்து திருப்தியுள்ளவர்களாய் நன்றியுள்ள இருதயத்தோடு ஸ்தோத்தரிப்பது,அதிருப்தி, முறுமுறுப்பு போன்றவற்றிற்கு இரையாகாதவாறும், பலவிதமான இச்சைகளினால் இழுப்புண்டு போகாதவாறும் நம்மைத் தடுத்துப் பாதுகாக்கிறது.

ii. நாம் தேவ சித்தத்திற்கு விரோதமாய் எதையாகிலும் பிடிவாதமாய் வாஞ்சிப்போமானால், தேவன் ஒருவேளை நமக்கு அதைத் தருவார். ஆனால் அது நம்முடைய ஆத்துமாக்களில் இளைப்பைக் கொண்டுவரும். (சங் 106:14,15)

2. பாரானின் வனாந்தரத்தில் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக எழும்பினவர்கள் யார்? அவர்களுக்கு சம்பவித்தது என்ன? கர்த்தரின் சமூகத்தில் வைக்கப்பட்ட 12 கோல்களில் ஆரோனின் கோல். துளிர்த்ததி- ருந்து நாம் அறிந்து கொள்ளும் இரண்டு ஆவிக்குரிய கருத்துக்கள் யாவை?

கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்கள் சபைக்குத் தலைவர்களும், பிரபலமானவர்களுமாகிய இருநூற்றைம்பது பேரை சேர்த்துக்கொண்டு, மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக எழும்பினார்கள். அது அவர்களுடைய சொந்த அழிவுக்கு வழிவகுத்தது. (எண். அதி 16)

ஆரோனுடைய கோலை துளிர்க்கச் செய்து, தேவன், லேவி கோத்திரத்தின் ஊழியத்தையும் ஆரோனுடைய ஊழியத்தையும் உறுதிப்படுத்தினார். அந்தக்கோல் கலகக்காரருக்கு விரோதமான அடையாளமாக உடன்படிக்கைப் பெட்டியில் வைக்கப்பட்டது.(எண். அதி 17)

i. இதி- ருந்து நாம் அறிந்து கொள்ளும் ஆவிக்குரிய கருத்து என்னவென்றால் தேவனுடைய ஊழியக்காரரும் நடத்திப்புக்காரரும், தேவனால் நியமிக்கப்பட்டவர்கள் என்றும், ஒருவரும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுவதில்லை. ஆகவே நாம் எப்பொழுதும் அவர்களுக்குக் கீழ்படிந்து அடங்கவேண்டும் என்றும் விளங்கிக் கொள்கிறோம். (எபி. 5:4 ; 13:17)

ii. இந்த சம்பவத்திற்கு மற்றொரு ஆவிக்குரிய கருத்தும் உண்டு. இஸ்ரவே- ன் ஒவ்வொரு கோத்திரத்தையும் குறிக்கும்படி ஒவ்வொரு கோலாக, எல்லாக்கோல்களும் தேவ சமூகத்தில் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் லேவி கோத்திரத்தைச் சேர்ந்த ஆரோனின் கோல் மட்டும் துளிர்த்து, மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டது. அதுபோலவே பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற தேவஜனங்கள் எல்லாருடைய மத்தியிலும், தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு கூட்டத்தார் மட்டுமே கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டு, திரைக்குள் பிரவேசிப்பார்கள்.

## V. *__விரிவான விடையளி__*: (10 Marks)

1. பாரானின் வனாந்தரத்தி- ருந்து கானானை வேவு பார்க்க அனுப்பப்பட்டவர்கள் எத்தனை பேர்? அவர்கள் கொண்டு வந்த செய்தி என்ன? பின் நடந்தது என்ன? இச்சம்பவங்களினால் நாம் கற்றுக்கொள்ளும் காரியங்கள் யாவை?

i. பாரான் வனாந்தரத்தி- ருந்து கானான் தேசத்தை வேவு பார்க்கும்படியாக பன்னிரண்டு வேவுகாரர் அனுப்பப் பட்டார்கள். அவர்கள் வந்து, கானான் தேசம் நல்ல தேசம். பாலும் தேனும் ஓடுகிற தேசம். ஆனாலும் அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள். நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்ககூடாது. அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் என்ற துர்செய்தியை பரம்பச்செய்தார்கள். (எண். 13:28-31) அப்பொழுது சபையாரெல்லாரும் இராமுழுவதும் கூக்குர- ட்டுப் அழுது, மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். அதுபோலவே, தேவன் நமக்கு ஆயத்தம் பண்ணி வைத்திருக்கிற சுதந்தரத்திற்கு சமீபத்தில் நாம் வந்த பின்பும், இனிவரும் உலகத்தின் பெலன்களை ருசிபார்த்த பின்பும், நம்மை அதைரியப்படுத்தி, நம்மை பின்னிட்டு பார்க்கச் செய்யக்கூடிய சில சந்தர்ப்பங்கள் எழும்பக்கூடும்.

ii. தேசத்தை வேவுபார்க்கும்படி போன 12 பேரில் யோசுவாவும், காலேபும், கர்த்தர் நம்மோடே இருக்கிறார். அவர்களுக்குப் பயப்படவேண்டியதில்லை என்று கூறி ஜனங்களைத் தைரியப்படுத்த முயற்சித்தார்கள். அவர்களுடைய வார்த்தைகளை விசுவாசியாத சபையாரெல்லாரும் அவர்கள் மேல் கல்லெறிய வேண்டும் என்று சொன்னார்கள். அப்போது தேவனுடைய மகிமை ஆசரிப்புக் கூடாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லாருக்கும் முன்பாகக் காணப்பட்டது. (எண். 14:6-10) நாம் கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, புதிய தீர்மானங்களையும், பிரதிஷ்டைகளையும் செய்யும் போது, நமக்கு எதிர்ப்புகள் உண்டாகலாம். நமக்கு விரோதமாக கடினமான வார்த்தைகள் உபயோகப்படுத்தலாம். ஆனால் தேவன் வந்து நமக்கு உதவிச் செய்வார். (உ.ம்): சாத்ராக்; மேஷாக்; ஆபேத் நேகோ.

iii. தேவன் மேல் விசுவாசம் வைக்காமல் அவரை கோபப்படுத்தின ஜனங்களுக்காக மோசே பரிந்து பேசிய போது தேவன் அவர்களை மன்னித்தார் (எண். 14:19,20) அதுபோலவே தேவனுடைய சமூகத்தில் நின்று, அக்கிரமத்தைச் சுமந்து, நமக்காகப் பரிந்து பேசுகிற நடத்திப்புக்காரர் நிமித்தமாகவே நாமும், தேவனுடைய நியாயத்தீர்ப்பி- ருந்து தப்புவிக்கப்படுகிறோம்.

iv. தேசத்தில் வேவுபார்த்த வேவுகாரரில் துர்செய்தியை பரம்பச் செய்த 10 பேரும் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்தார்கள். (எண்.14:36,37) இதி- ருந்து நாம் மற்றவர்களை அதைரியப்படுத்தக் கூடிய வார்த்தைகளைப் பேசாதபடி கவனமாயிருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்கிறோம்.

**VI.** ***<u>போதனை</u>***: ( 2 Marks )

நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் இஸ்ரவேல் ஜனங்களைப் போலவே நாம் பலவிதமான அனுபவங்களின் வழியாகக்கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. நாம் எல்லாக் காரியங்களையும் வழக்கம் போலவே செய்து கொண்டு போகாமல், ஒவ்வொரு முறையும் தேவனுடைய பூரணமான சித்தம் இன்னதென்று அறிந்து நிச்சயித்துக் கொள்ளும்படி நம் மனம் புதிதாகிக் கொண்டே இருக்க எப்போதும் கவனமாக இருக்க வேண்டும்.

*********

# இஸ்ரவேலரின் பிரயாணம்

## (பகுதி VI)

(ஓர் என்னும் மலை முதல் மோவாப் வரை)

**I.** ***மனப்பாடவசனம்:*** (2 Marks)

எபிரெயர் 6:11,12

நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து,

உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்.

**II.** ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி:***

1. காதேஸுக்கு பிறகு இஸ்ரவேல் ஜனங்கள் எங்கு பாளயமிறங்கினார்கள்?
   ஓர் என்னும் மலையில் (எண் 20:22)

2. மோசேயின் சகோதரனாகிய ஆரோன் எங்கு மரித்தான்?
   ஓர் என்னும் மலையில் (எண் 20:27,28)

3. ஆரோன் மரிக்கும் முன்பு அவனுடைய வஸ்திரங்கள் யாருக்கு உடுத்துவிக்கப்பட்டது?
   ஆரோனின் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்துவிக்கப்பட்டது. (எண் 20:28)
4. ஆரோனுக்காக இஸ்ரவேல் ஜனங்கள் எத்தனை நாட்கள் துக்கங் கொண்டாடினார்கள்?
   30 நாட்கள் (எண் 20:29)
5. மோசே எந்த மலையின் மேல் ஏறி கானானைப் பார்த்தான்?
   மோசே அபாரீம் மலைகளி- ருந்த நேபோ பர்வதத்தின் மேல் ஏறி கானானைப் பார்த்தான். (உபா32:49)
6. இஸ்ரவேல் ஜனங்கள் மோவாபின் சமனான வெளியில் வருவதற்கு முன்பாக எந்தெந்த இராஜாக்களை ஜெயித்தார்கள்?
   இஸ்ரவேலர் பாசானின் இராஜாவாகிய ஓகையும், எமோரியரின் இராஜாவாகிய சீகோனையும் ஜெயித்தார்கள். (எண் 21:33,34)
7. இஸ்ரவேல் ஜனங்கள் ஓர் என்னும் மலையி- ருந்து பிரயாணப்பட்டபோது தன் தேசத்தின் வழியாக கடந்து செல்ல அனுமதிக்காத ராஜா யார்?
   ஏதோமின் இராஜா (எண் 20:18)

8. இஸ்ரவேல் ஜனங்களை சபிக்கும்படியாக பாலாக் இராஜாவினால் கூ- பேசி அழைக்கப்பட்டவன் யார்?
   பிலேயாம் (எண் 22:5,6)

**III.** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி:*** (2 Marks)

1. தேவன் இஸ்ரவேல் ஜனங்களின் மத்தியில் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஏன் அனுப்பினார்?
   ஏதோம் தேசத்தை சுற்றிச் செல்ல வேண்டியதிருந்தது. வழியினிமித்தம் ஜனங்கள் மனமடிவடைந்து முறுமுறுத்தார்கள், எனவே தேவன் அவர்களின் மத்தியில் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை அனுப்பினார். (எண் 21:4-6)

2. ஓர் என்னும் மலை எதற்கு அடையாளமாயிருக்கிறது? ஏன்?
   ஓர் என்னும் மலை ஜெப ஜீவியத்திற்கு அடையாளமாயிருக்கிறது. ஏனெனில் மோசே இம்மலையில் தேவ சமூகத்தில் இருந்தான்.
3. வெண்கலச் சர்ப்பம் புதிய ஏற்பாட்டில் யாரைக் குறிக்கிறது?

வெண்கலச் சர்ப்பம் புதிய ஏற்பாட்டில் சிலுவையில் உயர்த்தப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. (யோவான் 3:14,15)

4. இஸ்ரவேல் ஜனங்கள் எப்படிப்பட்ட ஜனமாக காணப்பட்டது வரை தேவன் அவர்களோடிருந்தார்?
இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் வேறுபிரிந்த ஜீவியத்தைப் பாதுகாத்து ஜாதிகளோடே கலவாமல் தனித்து வாசம் பண்ணும் ஜனமாகக் காணப்பட்ட வரை தேவன் அவர்களோடிருந்தார். (எண் 23:9)

5. பாலாக் பிலேயாமின் ஆலோசனையின்படி இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக எவ்விதமான இடறலைப் போட்டான்?
விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும், வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக போட்டான். (எண் 25:1,2)

6. தேவனுடைய ஆலயமாகிய நாம் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப் படுகிறோம்?
தேவன் நம்முடைய தேவனாகவும், நாம் அவருடைய ஜனங்களாகவும் காணப்படும்படியாக, நாம் வேறுபிரிந்து, அசுத்தமானதைத் தொடாமல் இருக்க வேண்டுமென்று தேவனுடைய ஆலயமாகிய நாம் அறிவுறுத்தப்படுகிறோம். ( II கொரி 6:16,17)

7. கானான் தேசத்தை மோசே எங்கிருந்து பார்த்தான்? அதற்கு பிரவேசிக்க அவனுக்கு ஏன் அனுமதி மறுக்கப்பட்டது?
மோசே அபாரீம் மலைகளி- ருந்த நேபோ பர்வதத்தின் மேல் ஏறி கானானைப் பார்த்தான். அவன் மேரிபாவின் தண்ணீர்களண்டையில் கர்த்தருடைய கட்டளைகளை மீறினதினிமித்தம் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு அவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டது (உபா 32:49,50.52)

8. நித்தியமான ராஜ்யத்தில் பிரவேசிக்க நாம் என்ன செய்ய வேண்டும்?
தேவனுடைய நித்திய இராஜ்யத்தில் பிரவேசிக்க நாம் நம்முடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ( II பேதுரு 1:10,11)

## IV. *<u>சுருக்கமான விடையளி</u>*:

1. தேவன் இஸ்ரவேல் ஜனங்களிடையே கொள்ளிவாய் சர்ப்பங்களை ஏன் அனுப்பினார்? கொள்ளிவாய் சர்ப்பங்களினால் கடிக்கப்பட்டவர்கள் எவ்வாறு சுகமாக்கப் பட்டார்கள்? இதி- ருந்து நாம் அறியும் ஆவிக்குரிய கருத்து என்ன?
இஸ்ரவேல் ஜனங்கள் ஓர் என்னும் மலையி- ருந்து பிரயாணப்பட்டபோது, ஏதோமின் இராஜா தன் தேசத்தின் வழியாக அவர்கள் கடந்து செல்ல அனுமதி தராததால் தேசத்தைச் சுற்றிச் செல்ல வேண்டியிருந்தது. வழியினிமித்தம் ஜனங்கள் மனமடிவடைந்து முறுமுறுத்தார்கள். ஆகவே தேவன் அவர்கள் மத்தியில் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை அனுப்பினார். அவைகள் அநேகரைக் கடித்ததினால் அவர்கள் மாண்டுபோனார்கள்.
ஜனங்கள் தங்களின் குற்றத்தை உணர்ந்து மனஸ்தாபப்பட்ட போது மோசே அவர்களுக்காக விண்ணப்பம் பண்ணினான். கர்த்தருடைய ஆலோசனையின்படியே மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உயர்த்தினான். அதை ஜனங்கள் நோக்கிப் பார்த்த போது சுகமடைந்தனர். (எண் 21:4-9) அதுபோலவே, சிலுவையில் உயர்த்தப்பட்ட கர்த்தராகிய இயேசுவை நோக்கிப் பார்த்து, அவரை விசுவாசிக்கிற எவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைந்து கொள்ளுவான் என்பதை இதி- ருந்து அறிந்து கொள்கிறோம்.(யோ 3:14,15)

2. இஸ்ரவேல் ஜனங்களை பிலேயாம் ஏன் சபிக்க முடியவில்லை? அதற்கு காரணம் என்ன? இஸ்ரவேல் ஜனங்கள் வேறுபாட்டின் ஜீவியத்தைப் பாதுகாத்து தனித்து வாசம் பண்ணும் ஜனமாக இருந்தவரை அவர்களுக்கிருந்த மேன்மை என்ன?
பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரை சபிக்கும்படியாக மோவாபின் ராஜாவாகிய பாலாக்கினால் கூ- பேசி அழைத்துக் கொண்டு வரப்பட்டிருந்த போதிலும், அவனால் அவ்விதம் செய்யக் கூடாமற்போனது. ஏனெனில்,
   i. இஸ்ரவேல் புத்திரர் வேறுபிரிதலின் ஜீவியத்தைப் பாதுகாத்துக்கொண்டு, ஜாதிகளோடே கலவாமல் தனித்து வாசம் பண்ணும் ஜனமாகக் காணப்பட்டார்கள். (எண் 23:9)

ii. மேலும் அவர்கள் அக்கிரமமோ குற்றமோ இல்லாத ஜனமாக இருந்தனர்.(எண் 23:21)

இஸ்ரவேல் ஜனங்கள் வேறுபாட்டின் ஜீவியத்தை பாதுகாத்து கொண்டபடியால்,

i. அவர்களுக்குள்ளே ராஜாவின் ஜெய கெம்பீரம் இருந்தது. (எண் 23:21)
ii. அவர்களுக்குக் காண்டாமிருகத்துக்கொத்த பெலன் இருந்தது. (எண் 23:22)
iii. அவர்களுக்கு விரோதமாக எந்தவிதமான மந்திரவாதமும், குறிசொல்லுதலும் இருக்க முடியவில்லை. (எண்23:23)
iv. அவர்கள் தேவனுடைய அழகான வாசஸ்தலங்களாகக் காணப்பட்டார்கள். (எண் 24:5)

## V. *விரிவான விடையளி*: (10 Marks)

1. மோவாபின் சமனான வெளியில் இஸ்ரவேல் ஜனங்களின் பிரயாணத்தின் போது நடந்த சம்பவங்களையும் அதி- ருந்து நாம் அறிந்து கொள்ளும் ஆவிக்குரிய கருத்துகளையும் விரிவாக எழுது?

a. i. இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் சமனான வெளிக்கு வந்த போது தங்கள் வேறுபிரிதலின் ஜீவியத்தைப் பாதுகாத்துக்கொண்டு ஜாதிகளோடே கலவாமல் தனித்து வாசம் பண்ணும் ஜனமாகக் காணப்பட்டார்கள்.தேவன் அவர்களோடிருந்தார். (எண் 23:9)

ii. மேலும் அவர்கள் அக்கிரமமோ குற்றமோ இல்லாத ஜனமாக இருந்தனர்.(எண்23:21)

iii. அவர்களுக்குள்ளே ராஜாவின் ஜெய கெம்பீரம் இருந்தது. (எண் 23:21)

iv. அவர்களுக்குக் காண்டாமிருகத்துக்கொத்த பெலன் இருந்தது. (எண்23:22)

v. அவர்களுக்கு விரோதமாக எந்த விதமான மந்திரவாதமும்,குறிசொல்லுதலும் இருக்க முடியவில்லை. (எண்23:23)

இவ்விதமாக அவர்கள் தேவனுடைய அழகான வாசஸ்தலங்களாகக் காணப்பட்டார்கள். (எண்24:5,6)

b. இஸ்ரவேல் புத்திரரை சபிக்கும்படியாக மோவாபின் இராஜாவாகிய பாலாக் பிலேயாமை கூ- பேசி அழைத்துக் கொண்டு வந்தான். ஆனாலும் அவனால் அவ்விதம் செய்யக்கூடாமற்போயிற்று. ஏனெனில் அவர்கள் ஜாதிகளோடு கலவாமல் வேறுபாட்டின் ஜீவியத்தைப் பாதுகாத்துக் கொண்டு அக்கிரமும் குற்றமும் இல்லாத ஜனங்களாக காணப்பட்டார்கள். எனவே பிலேயாம் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும், வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகப் போடும்படியாக பாலாக்கிற்குக் கற்றுக் கொடுத்தான். (எண் 25:1,2 ; வெளி 2:14) அவர்கள் இவ்விஷயத்தில் தங்களைக் காத்துக் கொள்ளாததினால் தேவனுடைய சாபத்தைத் தங்கள் மேல் வருவித்துக் கொண்டார்கள். இதி- ருந்து தேவன் நம்முடைய தேவனாகவும், நாம் அவருடைய ஜனங்களாகவும் காணப்படும்படியாக, நாம் வேறுபிரிந்து அசுத்தமானதைத் தொடாமல் இருக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறோம். (11 கொரி 6:16,17)

c. மோசே அபாரீம் மலையி- ருந்த நேபோ பர்வதம் மட்டும் போனான். இருப்பினும், அவன் மேரிபாவின் தண்ணீர்களண்டையில் கர்த்தருடைய கட்டளைகளை மீறினதினிமித்தம் கானான் தேசத்துக்குள் பிரவேசிப்பதற்கு அவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டு அங்கிருந்து, தேசத்தைப் பார்க்கும்படியாக மட்டுமே அவன் அனுமதிக்கப்பட்டான். (உபா 32:49,50,52.) ஆகவே தேவனுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசத்தைப் பரிபூரணமாய் பெற்றுக்கொள்ளும்படியாக, நாம் நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்ள ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். (11பேதுரு 1:10,11)

## VI *போதனை*: ( 2 Marks )

விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக் கொள்பவர்களை நாம் பின்பற்றுகிறவர்களாயிருந்து, பயத்தோடும், நடுக்கத்தோடும் நம் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட்டு, முடிவு பரியந்தமும் அதே ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டும்.

********

# இஸ்ரவேலரின் பிரயாணம்

## (பகுதி VII)

(யோர்தானைக் கடந்தது)

**I.** *மனப்பாட வசனம்*: (2 Marks)

எரேமியா 12:5

நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப்பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்ன செய்வாய்?

**II.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி*:

1. யோர்தானைக் கடப்பது எதற்கு நிழலாட்டமாக இருக்கிறது?
யோர்தானைக் கடப்பது என்பது கிறிஸ்துவின் மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, அவருடைய பாடுகளின் ஐக்கியத்தை அறிவதற்கு நிழலாட்டமாக இருக்கிறது. (பி- 3:10)

2. உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்கள் யாருக்கு நிழலாட்டமாயிருக்கிறார்கள்?
பிரதிஷ்டையுள்ள ஊழியருக்கு நிழலாட்டமாயிருக்கிறார்கள். (பாடத்திட்டம்)

3. யோர்தானில் நாட்டப்பட்ட கற்கள் எத்தனை?
பன்னிரெண்டு கற்கள் (யோசுவா 4:9)

4. கில்கா- ல் நாட்டப்பட்ட கற்கள் எத்தனை?
பன்னிரெண்டு கற்கள் (யோசுவா 4:20)

5. கில்கா- ல் நாட்டப்பட்ட கற்கள் எங்கிருந்து எடுக்கப்பட்டது?
யோர்தானில் ஆசாரியரின் கால்கள் உறுதியாக நின்ற இடத்தி- ருந்து எடுக்கப்பட்டது. (யோசுவா 4:20)

**III.** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி*: (2 Marks)

1. செங்கடல் தண்ணீர் பிரிந்ததிற்கும் யோர்தானின் தண்ணீர் பிரிந்ததிற்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?
செங்கடலை இரண்டாகப்பிரித்தது, யோர்தானைப் பிரித்ததினின்று வித்தியாசமானது. செங்கட- ன் தண்ணீர் அவர்களுடைய வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் அவர்களுக்கு மதிலாக நின்றது. (யாத் 14:22). ஆனால், யோர்தானைக் கடக்கும் விஷயத்தில் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்கள் தண்ணீரில் கால் வைத்தவுடனே, மேலேயிருந்து வருகிற தண்ணீர் ஒரு குவியலாகக் குவிந்தது. மறுபக்கத்தில் உப்புக்கடலுக்கு ஓடி வருகிற தண்ணீர் பிரிந்து ஓடிற்று. (யோசுவா 3:15,16)

2. யோர்தானின் மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் ஒரு குவியலாக குவிந்து நின்றது எதை வெளிப்படுத்துகிறது?
நம்முடைய ஜீவிய பிரயாணத்தின் இறுதியில் வரக்கூடிய சோதனைகள் குவியலாக நின்ற யோர்தானின் தண்ணீரைப் போல கடினமானவையாயும், பெரிதானவையாயும் காணப்படும் என்பதை வெளிப்படுத்துகிறது. (பாடத்திட்டம்)

3. யோர்தானில் நாட்டப்பட்ட கற்கள் எதனை குறிக்கின்றன?
யோர்தானில் நாட்டப்பட்ட கற்கள் நமக்கு வரக்கூடிய சோதனைகள், அல்லது உபத்திரவங்கள் என்னவாயிருப்பினும் அப்போஸ்தல பிரதிஷ்டையுள்ள ஊழியர்க்காரரின் உதவியினால் சத்தியத்திற்காக உறுதியாக நிற்கும்படியான நம்முடைய தீர்மானத்தைக் குறிக்கின்றன. (யோசுவா 4:9)

4. கில்கா- ல் நாட்டப்பட்ட கற்கள் எதனை வெளிப்படுத்துகிறது?
இந்தக் கற்கள், நம் ஜீவனையும் அருமையாக எண்ணாமல், நாம் சோதனைகளைச் சகித்து, ஜெயவீரராக விளங்குவதை வெளிப்படுத்துகிறது. (யோசுவா 4:20)

5. பிரதிஷ்டை பண்ணப்பட்ட தேவ ஊழியரின் ஊழியம் ஏன் தேவையாயிருக்கிறது?
கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்குள்ளதாயிருக்கும்படி அழைக்கப்பட்ட சபை உபத்திரவங்கள், அக்கினி போன்ற சோதனைகள் ஆகியவற்றினூடாகப் போகும் பொழுது அது அழிந்து போகாதபடி, சத்தியத்தைத் தாங்கி நிற்கிற பிரதிஷ்டை பண்ணப்பட்ட தேவ ஊழியரின் ஊழியம் தேவையாயிருக்கிறது. (பாடத்திட்டம்)

## IV. *சுருக்கமான விடையளி*: (4/6 Marks)

1. உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கிற ஆசாரியர்கள் யாரைக் குறிக்கிறார்கள்? புதிய ஏற்பாட்டு சபையில் அவர்களுடைய ஊழியம் என்ன?
உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர், தங்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட சத்தியத்துக்காக போராடுகிற பிரதிஷ்டையுள்ள தேவ ஊழியரைக் குறிக்கிறார்கள். நம்முடைய ஜீவிய பிரயாணத்தின் இறுதியில் நமக்கு வரக்கூடிய சோதனைகள் குவியலாக நின்ற தண்ணீரைப் போல கடினமானவையாயும், பெரிதானவையாயும் காணப்படும். ஆனாலும் கிறிஸ்துவின் பாடுகளுக்கு பங்குள்ளதாயிருக்கும்படி அழைக்கப்பட்ட சபை, உபத்திரவங்கள், அக்கினி போன்ற சோதனைகள் ஆகியவற்றினூடாகப் போகும்போது அது அழிந்து போகாதபடி, சத்தியத்தை தாங்கி நிற்கிற பிரதிஷ்டை பண்ணப்பட்ட தேவ ஊழியர்களாக, புதிய ஏற்பாட்டு சபையில் அவர்கள் ஊழியம் செய்கிறார்கள். (பாடத்திட்டம்)

## V. *விரிவான விடையளி*: (10 Marks)

1. யோர்தானிலே நாட்டப்பட்ட 12 கற்களும் யோர்தானி- ருந்து எடுக்கப்பட்டு கில்கா- ல் நாட்டப்பட்ட 12 கற்களும் வெளிப்படுத்தும் ஆவிக்குரிய சத்தியம் என்ன?
யோர்தானின் நடுவில் ஆசாரியர்கள் நின்ற இடத்தில் யோசுவா பன்னிரண்டு கற்களை நாட்டினான். (யோசுவா4:9) ஆசாரியர்கள் நதியிலிருந்து கரையேறினவுடனேயே, யோர்தானின் தண்ணீர்கள் தங்களிடத்துக்குத் திரும்பி அந்தக் கற்களின் மீதும் புரண்டு போக ஆரம்பித்தது. அந்தக் கற்கள் அங்கு இந்நாள் வரைக்கும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தக் கற்கள் சோதனைகள், அல்லது உபத்திரவங்கள் என்னவாயிருப்பினும் அப்போஸ்தலப் பிரதிஷ்டையுள்ள தேவஊழியரின் உதவியினால் சத்தியத்திற்காக உறுதியாக நிற்கும்படியான நம்முடைய தீர்மானத்தைக் குறிக்கின்றன. இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்து தீர்ந்த பின்பு யோர்தானில் ஆசாரியரின் கால்கள் உறுதியாய் நின்ற இடத்தி- ருந்து பன்னிரண்டு கற்களை எடுத்து அவற்றை அக்கரைக்குக் கொண்டு போய், கில்கா- லே நாட்டும்படிக்கு யோசுவா கட்டளையிட்டான். (யோசுவா 4:20) கில்கா- ல் நாட்டப்பட்ட இந்த 12 கற்கள் நம் ஜீவனையும் அருமையாக எண்ணாமல், நாம் சோதனைகளைச் சகித்து, ஜெயவீரராக விளங்குவதைக் குறிக்கிறது.
இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரருக்குக் கர்த்தர் யோர்தானின் தண்ணீர்களண்டையில் செய்ததற்கு நினைப் பூட்டுதலாயிருந்தது. நாம் நம்முடைய சுதந்தரத்தை அடைந்து கொள்ளும்பொருட்டாக எல்லாவற்றையும் ஜெயிக்கும் படியாகக் கடந்து போகும்போது, சோதனைகளின் மத்தியில் எவ்விதம் விசுவாசத்தைக் கொண்டு தேவபெலத்தினாலே காக்கப்பட்டு வருகிறோம் என்பதை நினைவு கூரவேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது (1 பேதுரு1:5)

## VI. *போதனை*: ( 2 Marks )

நாம் எப்போதும், சத்தியத்திற்காகப் போராடுகிற தேவ ஊழியரோடு சேர்ந்து நின்று, நம்முடைய பாதையில் வரும் சோதனைகளுக்கும் முகங்காட்ட ஆயத்தமாயிருந்து அவற்றை ஜெயிக்க வேண்டும்.

**********

# அப். பவுலின் மூன்றாம் சுவிசேஷப் பிரயாணம்

(அப் 18 : 22 - 21 : 17)

**I** *மனப்பாடவசனம் :* (2 Marks)

அப்போஸ்தலர் 20 : 24

ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன், என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::*

1. பரி. பவுல் எங்கிருந்து எப்பொழுது தனது மூன்றாவது சுவிசேஷப் பிரயாணத்தை தொடங்கினார்?
   கிபி. 54 ம் ஆண்டு அந்தியோகியாவிலிருந்து தொடங்கினார். (அப் 18 : 22)

2. பரி. பவுல் தனது மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தின் போது யாரைத் தம்முன் கூட்டிக் கொண்டு போனார்?
   தீமோத்தேயுவையும் தீத்துவையும் கூட்டிக் கொண்டு போனார். (பாடத்திட்டம்)

3. சாதுரியவானும், வேதாகமங்களில் வல்லவனுமாயிருந்தவன் யார்? அவன் எந்தப் பட்டணத்தில் பிறந்தவன்?
   அப்பொல்லோ. இவன் அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்த யூதன். (அப்18 : 24)

4. ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய் போதகம் பண்ணியது யார்?
   அப்பொல்லோ என்னும் யூதன். (அப் 18 : 24,25)

5. அப்பொல்லோவைச் சேர்த்துக் கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அவனுக்கு அதிகத்திட்டமாய் விவரித்துக் காண்பித்தவர்கள் யார்?
   ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் (அப் 18 : 26)

6. அகாயா நாட்டிலே கிருபையினாலே விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாக இருந்தவன் யார்?
   அப்பொல்லோ (அப் 18 : 27, 28)

7. பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்று சொன்னவர்கள் யார்?
   எபேசுவில் இருந்த சீஷர்கள் (அப் 19 : 2)

8. பரி. பவுலின் மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தின் போது எபேசு பட்டணத்தில் எத்தனை பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள்?
   பன்னிரண்டு பேர் (அப் 19 : 5, 7)

9. பரி. பவுல் கைகளை வைத்த போது பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் யார்?
   எபேசுவிலுள்ள சீஷர்கள் (அப் 19 : 6)

10. பரி. பவுல் தனது மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தின் போது எங்கிருந்து எத்தனை வருஷம் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்?
    எபேசுவில் திறன் என்பவனுடைய வித்தியாசாலையில் இரண்டு வருஷம் போதித்தார்.(அப் 19 : 9)

11. பொல்லாத ஆவி பிடித்திருந்தவர்கள் மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்தவர்கள் யார்?
    தேசாந்திரிகளாய் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர். (அப். 19 : 13)

12. பொல்லாத ஆவியின் மேல் இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து காயப்பட்டவர்களும் நிர்வாணிகளுமாய் ஓடிப் போனவர்கள் யார்?
பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஒரு யூதனுடைய குமாரர் ஏழு பேர்.(அப். 19 : 13 - 16)

13. எபேசுவிலே பரி. பவுலுக்கும் சீஷர்களுக்கும் விரோதமாக எழும்பி கலகம் உண்டாக்கினவன் யார்?
தெமேத்திரியு என்ற தட்டான்.(அப் 19 : 23,24)

14. பரி. பவுலுக்கு வழித்துணையாய் வந்த மக்கதோனியர் யார்?
காயுவும், அரிஸ்தர்க்குவும் (அப் 19 : 29)

15. பவுலும் லூக்காவும் எங்கு தங்கி புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஆசரித்தனர்?
பிலிப்பி பட்டணத்தில் (பாடத்திட்டம்)

16. எந்த பட்டணத்திலிருக்கையில் பவுல் நடு ராத்திரி மட்டும் பிரசங்கித்தார்?
துரோவா (அப் 20 : 6, 7)

17. நித்திரை மயக்கத்தினால் மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து மரித்தது யார்? அவனை உயிரோடு எழுப்பியது யார்?
ஐத்திகு, அவனை உயிரோடு எழுப்பியது பவுல் (அப். 20 : 9,10)

18. பரி. பவுலை எருசலேமுக்குப் போக வேண்டாம் என்று ஆவியின் ஏவுதலினாலே சொன்னவர்கள் யார்?
தீரு பட்டணத்திலுள்ள சீஷர்கள் (அப் 21 : 3, 4)

19. எந்தப் பட்டணத்தில் பவுல் சீஷர்களுடைய மனைவிகள், பிள்ளைகளோடும் கடற்கரையிலே முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணினார்?
தீரு பட்டணத்துறையில் ( அப் 21 : 5)

20. செசரியா பட்டணத்தில் பவுலைச் சேர்ந்தவர்கள் யாருடைய வீட்டில் தங்கினார்கள்?
பிலிப்பு என்னும் சுவிசேஷகனுடைய வீட்டில் (அப் 21 : 8)

21. தீர்க்கதரிசன சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய நான்கு குமாரத்திகள் யாருக்கு இருந்தனர்?
பிலிப்பு என்னும் சுவிசேஷகனுக்கு (அப் 21 :8,9)

22. எருசலேமில் பவுல் அனுபவிக்கப் போகும் உபத்திரவங்களைக் குறித்து செசரியாவில் தீர்க்கதரிசனம் கூறியது யார்?
அகபு என்னும் தீர்க்கதரிசி (அப் 21 : 10, 11)

23. சீப்புரு தீவிலுள்ள பழைய சீஷன் யார்?
மினாசோன் (அப் 21 : 16)

## III <u>*ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*</u> (2 Marks)

1. கலாத்தியா, பிரிகியா ஆகிய நாடுகளில் பவுல் அப்போஸ்தலன் செய்த ஊழியம் என்ன?
பரி,பவுல் சீஷர்களைத் திடப்படுத்தினார். (அப் 18:23) (1கொரி 16 : 1 - 3) ஆகிய வசனங்களிலிருந்து அவர் ஒவ்வொரு வாரமும் ஏழை விசுவாசிகளுக்கென்று தர்மப் பணம் சேர்க்கத் திட்டமிட்டார் என்று அறிகிறோம். (பாடத்திட்டம்)

2. அப். பவுல் எபேசுவிலுள்ள சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி என்ன செய்தார்?
அப்பொல்லோ மூலம் மனந்திரும்புதலுக்கென்று கொடுக்கப்பட்ட யோவானுடைய ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்த சீஷருக்கு பவுல் மறுபடியும் ஞானஸ்நானம் கொடுத்தார். ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்கள் பர்சுத்த ஆவியைப் பெற்றார்கள். (அப் 19 :1-6)

3. எபேசுவில் பவுலின் மூலமாக தேவன் செய்தருளிய விசேஷித்த அற்புதங்கள் யாவை?

பவுலின் சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து வியாதிக்காரர் மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப் போயின. பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டு புறப்பட்டன. (அப் 19 : 11, 12)

**4.** தங்கள் தொழில் அற்றுப்போகும்படியான அபாயம் நேரிட்டதால் தெமேத்திரியு என்னும் தட்டான் பவுலின் மேல் சாட்டிய குற்றம் என்ன?

பவுல் என்பவன் கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்லவென்று, எபேசுவில் மாத்திரமல்ல, கொஞ்சங் குறைய ஆசியா எங்கும் அநேக ஜனங்களுக்குப் போதித்து, அவர்களை வசப்படுத்திக் கொண்டான் என்று தெமேத்திரியு என்னும் தட்டான் பவுலின் மீது குற்றஞ் சாட்டினான்.(அப் 19 : 26)

**5.** பவுல் கிரேக்கு தேசத்தில் எவ்வளவு காலம் சஞ்சரித்தார்? அவர் ஏன் சீரியா தேசத்திற்கு போக மனதாயிருந்தும் போகவில்லை?

பவுல் கிரேக்க தேசத்தில் மூன்று மாதம் சஞ்சரித்து ஊழியம் செய்தார்.

யூதர்கள் அவருக்குத் தீமை செய்யும்படி இரகசியமான யோசனை கொண்டிருந்தார்கள். ஆகையால் அவர் சீரியா தேசத்திற்குப் போகவில்லை. (அப் 20 : 2, 3, 6)

**6.** பரி. பவுலின் மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தில் கிரேக்கு தேசத்திலிருந்து ஆசியா நாடு வரைக்கும் அவருக்கு வழித் துணையாய் வந்தவர்கள் யார்?

சோபத்தர், அரிஸ்தர்க்கு, செக்குந்து, காயு, தீமோத்தேயு, தீகிக்கு, துரோப்பீமு ஆகியோர் ஆசியா நாடு வரைக்கும் வழித் துணையாய் வந்தார்கள். (அப் 20 : 4)

**7.** தேவன் துரோவா பட்டணத்தில் செய்த அற்புதம் என்ன?

வாரத்தின் முதலாம் நாளிலே சீஷர்கள் அப்பம் பிட்குதலுக்கென்று கூடி வந்திருக்கையில் பவுல் நடு ராத்திரி மட்டும் பிரசங்கித்தார். அப்பொழுது ஐத்திகு என்னும் வாலிபன் நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து மரித்தான். பவுல் ஜெபித்தார். தேவன் அவனை உயிரோடு எழுப்பினார். (அப் 20 : 7 - 12)

**8.** பரி பவுல் தனது மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தின் போது எருசலேமில் இருக்க ஏன் தீவிரப்பட்டார்?

பவுல் பெந்தேகொஸ்தே பண்டிகை நாளிலே எருசலேமில் இருக்க வேண்டுமென்று விரும்பியதால் தீவிரப்பட்டார் (அப் 20 : 16)

**9.** செசரியா பட்டணத்திலிருந்த தீர்க்கதரிசி யார்? அவர் கூறிய தீர்க்கதரிசனம் என்ன?

செசரியா பட்டணத்திலிருந்த தீர்க்கதரிசி அகபு.

அவர் தன் கைகளையும் கால்களையும் பவுலின் கச்சையால் கட்டிக்கொண்டு எருசலேமில் உள்ள யூதரின் கைகளில் பவுல் அனுபவிக்கப்போகும் உபத்திரவத்தைக்குறித்து தீர்க்கதரிசனம் கூறினார். (அப் 21 : 10,11)

**10.** பவுல் அப்போஸ்தலனை எருசலேமுக்குப் போக வேண்டாம் என்று கூறியது யார்? அவர்களுக்கு பவுல் கொடுத்த மறுமொழி என்ன?

i) லூக்காவும் மற்ற சீஷர்களும்.

ii)பவுல் அவர்களிடம், "நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்து போகப் பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல மரிப்பதற்கும் ஆயத்தமாய் இருக்கிறேன்," என்று கூறினார். (அப் 21 : 12,13)

## IV <u>*சுருக்கமானவிடையளி:*</u> (4/6 Marks)

**1.** அப்பொல்லோ என்னும் சீஷனைப் பற்றி குறிப்பு வரைக?

அப்பொல்லோ என்ற யூதன் அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும், சாதுரியவனும், வேதாகமங்களில் வல்லவனுமாயிருந்தான். அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய் போதகம் பண்ணிக் கொண்டு வந்தான். அவன் எபேசுவுக்கு வந்து ஜெப ஆலயத்தில் தைரியமாய் பேசத்தொடங்கின போது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக் கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள். அவன் அகாயாவுக்கு போகு

முன்பு சீஷர்கள் அவனை ஏற்றுக் கொள்ளும்படி சகோதரர் அவர்களுக்கு எழுதினார்கள். அவன் அங்கே வந்த பின்பு வெளியரங்கமாய் யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம் பண்ணி இயேசுவே கிறிஸ்து என்று வேத வாக்கியங்களைக் கொண்டு திருஷ்டாந்தப்படுத்தினபடியால், கிருபையினால் விசுவாசிகளானவர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தான். (அப் 18 : 24 - 28)

2. எபேசுவில் கர்த்தராகிய இயேசுவின் நாமம், பவுல் அங்கே ஊழியம் செய்த நாட்களில் எவ்வாறு மகிமைப்பட்டது?

எபேசு பட்டணத்தில் பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவன் சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் வியாதிக்காரர் மேல் போட வியாதிகள் நீங்கின. பொல்லாத ஆவிகளும் புறப்பட்டுப் போயின. இதைக் கண்ட தேசாந்திரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரும் பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவாவின் குமாரருமான ஏழுபேர் பொல்லாத ஆவி பிடித்திருந்தவர்கள் மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றனர். பொல்லாத ஆவி அவர்களை நோக்கி, "இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன் நீங்கள் யார்?" என்று சொல்லி பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள் மேல் பாய்ந்து பலாத்காரம் பண்ணி அவர்களை மேற்கொள்ள அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள் .

இது எபேசுவிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரிய வந்த போது அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள். கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது. (அப் 19 : 11 - 17)

3. அப். பவுலும் அவரோடிருந்தவர்களும் மூன்றாம் சுவிசேஷப்பிரயாணத்தின் போது தங்கிய இடங்களை வரிசையாக எழுது?

1.அந்தியோகியா 2.கலாத்தியா, பிரிகியா 3.எபேசு 4.மக்கெதொனியா 5.கிரேக்கு தேசம் 6. பிலிப்பி 7. துரோவா 8. ஆசேர் 9. மித்திலேனே 10.துரோகில்லியோன் ஊர்த்துறை 11. மிலேத்து 12. பத்தாரா 13. தீரு 14. பித்தொலோமாய் 15. செசரியா 16. எருசலேம். (அப் 18: 22; 21:17)

## V <u>*விரிவான விடையளி*</u> : (10 Marks)

1. பரி. பவுல் தனது மூன்றாவது சுவிசேஷப் பிரயாணத்தில் எந்த சூழ்நிலையையும் உபத்திரவங்களையும் சந்தோஷமாய் சகித்து தேவசித்தம் செய்ய தான் ஆயத்தமாயிருந்ததைக் குறித்து எபேசுவின் மூப்பர்களிடம் கூறியது என்ன?

பரி. பவுல்எபேசுவின் மூப்பர்களை நோக்கி, "நான் ஆசியா நாட்டில் வந்த முதல் நாள் தொடங்கி எல்லாக் காலங்களிலும் உங்களுடனே இன்ன விதமாய இருந்தேன் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும் யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரைச் சேவித்தேன்,

பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல் வெளியரங்கமாக வீடுகள் தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து உபதேசம் பண்ணி தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும் , நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும் நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன். இப்பொழுதும் நான் ஆவியில் கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன். அங்கே எனக்கு நேரிடுங் காரியங்களை நான் அறியேன்.

கட்டுகளும், உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணங்கள் தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன்.

ஆகிலும், அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன். என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன். என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும் தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன் என்றார். ( அப் 20 : 18 - 24)

2. பரி. பவுல் எபேசுவின் மூப்பர்களை வரவழைத்துக் கூறிய புத்திமதிகளும் எச்சரிப்பும் என்ன?

பரி, பவுல் சபையின் மூப்பர்களை நோக்கி, "உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்.

நான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்.

ஆனபடியினால், நான் மூன்று வருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்கு புத்தி சொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்.

இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்தி விருத்தியடையவும் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக் கொடுக்கிறேன்.

ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை. எனக்கும் என்னுடனே கூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலை செய்தது.

இப்படிப் பிரயாசப்பட்டு பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன்'' என்று கூறினார்.(அப் 20: 28 - 35)

**3.** எபேசு பட்டணத்தில் பரி.பவுல் செய்த ஊழியத்தைச் பற்றி எழுது. (அல்லது) எபேசுவில் கர்த்தருடைய வசனம் எவ்வாறு பலமாய் விருத்தியடைந்து மேற் கொண்டது?

எபேசு பட்டணத்தில் அப்பொல்லோ மூலம் மனந்திரும்புதலுக்கென்று கொடுக்கப்பட்ட யோவானுடைய ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்த சில சீஷருக்கு பவுல் மறுபடியும் ஞானஸ்நானம் கொடுத்தார். ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். பவுல் ஜெபஆலயத்தில் பிரவேசித்து மூன்று மாதம் தைரியமாய்ப் பிரசங்கித்து பின்பு இரண்டு வருஷம் திறன்னு என்பவனின் வித்யாசாலையில் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார். (அப் 19 : 1 -10)

மேலும் பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதகங்ளைச் செய்தருளினார். அவன் சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் வியாதியஸ்தர்கள்மேல் போட வியாதிகள் நீங்கின. பொல்லாத ஆவிகளும் புறப்பட்டுப் போயின. இதைக் கண்ட எபேசுவில் மந்திரவாதிகளாகத் திரிந்த பிரதான ஆசாரியனான ஸ்கேவாவின் குமாரரான ஏழுபேர் பொல்லாத ஆவி பிடித்திருந்தவர்கள் மேல கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் துணிந்து சொன்னார்கள். அப்பொழுது பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள் மேல பாய்ந்து அவர்களை மேற்கொண்டது. அவர்கள் நிர்வாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப் போனார்கள். இதை அங்குள்ள யூதர், கிரேக்கர் அறிந்தபோது பயமடைந்தனர். கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது. விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டனர். மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டு வந்து, எல்லாருக்கும் முன்பாகச் சுட்டெரித்தார்கள். அவைகளின் கிரயத்தைத் தொகை பார்த்து ஐம்பதினாயிரம் வெள்ளிக் காசாகக் கண்டார்கள். இவ்வளவு பலமாய் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது.

. கடைசியாக தியானாள் கோவிலைப் போல வெள்ளியினால் சிறு கோவில்களைச் செய்து வந்த தெமேத்திரியு என்ற தட்டான் அவர்களுக்கு விரோதமாய் எழும்பி கலகம் உண்டாக்கினான். பட்டணத்துச் சம்பிரதி குறுக்கிட்டு சமாதானத்தை உண்டு பண்ணினான். (அப் 19 : 23 - 41)

**VI** *<u>போதனை :</u>* (2 Marks)

கர்த்தருக்கு ஊழியஞ்செய்யும்படி புறப்படுகிற ஒருவன், கர்த்தருக்காக எந்தச் சூழ்நிலையையும் சந்திக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். சில சமயங்களில் ஆவியானவரால் நடத்தப்பட்டு செல்லும் இடங்களிலுங்கூட உபத்திரவம் உண்டாகலாம். எனினும் அவன் சந்தோஷமாகப் பாடுபட ஆயத்தமாயிருந்து, எல்லா சந்தர்ப்பங்களிலும் தேவசித்தம் செய்யவேண்டும்.

****************

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை
## (பகுதி I)

**I** *<u>மனப்பாடவசனம் :</u>* (2 Marks)

<u>1 தெசலோனிக்கேயர் 5 : 23, 24</u>

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்ததமாக்குவாராக, உங்கள் ஆவி, ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.

உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.

**II** *<u>ஓரிரு வார்த்தைகளில் விடையளி::</u>*

**1.** கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்தபின்பு எத்தனை நாளளவும் தமது சீஷர்களுக்குக் காணப்பட்டார்?

நாற்பது நாளளவும் காணப்பட்டார் (அப். 1 : 3)

**2.** இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையின் போது உயிரோடிருக்கும் நாம் யாருக்கு முந்திக் கொள்வதில்லை?

கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை.(1தெச 4 : 15)

**4.** பரலோகத்தில் யார் அதிக மகிமை வாய்ந்த கூட்டத்தாராய் காணப்படுவார்கள்?

இயேசு கிறிஸ்துவினுடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுபவர்கள் பரலோகத்தில் அதிக மகிமை வாய்ந்த கூட்டத்தாராய்க் காணப்படுவார்கள். (பாடத்திட்டம்)

**5.** தேவனிடத்திற்கும் சிங்காசனத்திற்கும் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்பிள்ளை எப்படிப்பட்டதாயிருந்தது?

சகல ஜனங்களையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும் ஆண் பிள்ளையாயிருந்தது. (வெளி 12 : 5)

**III** *<u>ஓரிரு வாக்கிய□களில் விடையளி :</u>* (2 Marks)

**1.** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எத்தனை பகுதிகளைக் கொண்டது? அவை யாவை?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மூன்று பகுதிகளைக் கொண்டது. அவையாவன:

1. இரகசிய வருகை 2. அறுவடை 3, பகிரங்க வருகை (பாடத்திட்டம்)

**2.** கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின் போது யாருக்காக வருவார்?

1. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமக்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிற புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களைச் சேர்த்துக் கொள்ளும்படியாக வருவார். (1 கொரி 15 : 51, 52 ; 1 தெச 4 : 14 - 18)

**3.** கிறிஸ்து எப்படிப்பட்ட சபைக்கு தலையாயிருக்கிறார்?

எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு தலையாயிருக்கிறார். (எபேசி 1 : 23)

**4.** கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது கண்ணிமைப் பொழுதிலே நடைபெறும் இரு சம்பங்கள் யாவை?

கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையின் போது, கிறிஸ்துவுக்குள் மரித்த பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் முதலாவதாக உயிரோடு எழுந்திருப்பார்கள், பின்பு உயிரோடிருக்கும் பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் மறுரூபமாக்கப்பட்டு இரு கூட்டத்தாரும் ஆகாயத்தில் ஒன்றாகக் கூடுவார்கள். இவ்விரண்டு சமபவங்களும் ஒரு கண்ணிமைப் பொழுதிலே நடைபெறும். (1 கொரி 15 : 51, 52)

**IV** ***சுருக்கமான விடையளி:*** (4/6 Marks)

**1.** இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுபவர்களுக்கு கொடுக்கப்பட்ட பல்வேறு பெயர்கள் யாவை? வசன ஆதாரத்துடன் எழுது.

1. கிறிஸ்துவின் மணவாட்டி (வெளி 21:2)
2. மகிமையுள்ள சபை (எபேசி 5 : 27)
3. சிங்காசனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் ஆண்பிள்ளை . (வெளி 12 : 5)
4. ஜெயங்கொண்ட பரிசுத்தவான்கள். (வெளி 2 : 26, 27)
5. கற்புள்ள கன்னிகை. (2 கொரி 11 : 2)
6. எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபை. (எபே1 : 23)
7. புதிய எருசலேம் ( எபி 12 : 22 ; வெளி 21 : 2)
8. சீயோன் (எபி 12 : 22 ; வெளி 14 : 1 - 5)

**V** ***விரிவான விடையளி*** : (10 Marks)

**1.** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையைப் பற்றி வசன ஆதாரத்துடன் எழுது.

1 கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, மணவாட்டி அல்லது பூரணமாக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களைச் சேர்த்துக் கொள்ளும்படியாக வருவார். (1 தெச 4:14 - 18) இந்த பரிசுத்தவான்கள் பூமியில் ஜீவிக்கிற நாட்களில் அவருடைய வருகைக்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறவர்கள் ஆவர். (எபி 9 : 28)

2. அவருடைய வருகை விழித்திராதவர்களுக்கு ஒரு திருடன் வருவதைப் போன்று திடீரென எதிர்பாராத வேளையில் இருக்கும். (வெளி 3:3)

3. கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையின்போது கிறிஸ்துவுக்குள் மரித்த பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் முதலாவதாக உயிரோடு எழுந்திருப்பார்கள்.

4.பின்பு, உயிரோடிருக்கும் பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் மறுரூபமாக்கப்பட்டு இரு கூட்டத்தாரும் ஆகாயத்தில ஒன்றாகக் கூடுவார்கள்.

5.இவ்விரண்டு சம்பவங்களும் ஒரு கண்ணிமைப் பொழுதிலே நடைபெறும். (1 கொரி 15 : 51, 52)

6.வேத வசனத்தில் இவ்விரு கூட்டத்தாருக்கும் பல்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கிறிஸ்துவின் மணவாட்டி (வெளி 21: 2),மகிமையுள்ள சபை(எபே5:27) சிங்காசனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் ஆண்பிள்ளை(வெளி 12 : 5), ஜெயங்கொண்ட பரிசுத்தவான்கள் (வெளி 2:26, 27),கற்புள்ள கன்னிகை (2 கொரி 11 : 2) எல்லாவற்றையும். எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபை (எபே 1 : 23), புதிய எருசலேம், சீயோன் (எபி 12 : 22 ; வெளி 21 : 2 ; 14 : 1 - 5) இவர்களே அதிக மகிமை வாய்ந்த கூட்டத்தாராவர்.

7.இயேசுவின் இந்த இரசகிசய வருகை மத்தேயு 24:36-51இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

*******************************

வகுப்பு : 9

பாடம்-10

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை
## (பகுதி II)

**I** *மனப் பாடவசனம் :* (2 Marks)

**II** (2 Marks)

சகரியா 12 : 10

நான் தாவீது குடும்பத்தாரின் மேலும், எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காகப் புலம்பி ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.

மத்தேயு 24 : 42 - 44

உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்.

திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டை கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள்.

நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.

**III** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::* (2 Marks)

**1.** வானத்திலே யுத்தம் எப்பொழுது உண்டாகும் ?

இயேசுவின் இரகசிய வருகைக்குப்பின் அதாவது ஆண்பிள்ளை சிங்காசனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு வானத்திலே ஒரு யுத்தமுண்டாகும். (வெளி 12 : 5, 7)

**2.** மிகாவேலும், அவனுடைய தூதர்களும் யாருடன் யுத்தம் செய்து அவர்களைத் தோற்கடிப்பார்கள்?

மிகாவேலும், அவனுடைய தூதர்களும் வலுசர்ப்பத்தோடும் (சாத்தான்) அவனுடைய தூதர்களோடும் யுத்தம்செய்து அவர்களைத் தோற்கடிப்பார்கள். (வெளி 12 : 7 -10)

**3.** பூமியிலே தள்ளப்பட்ட வலுசர்ப்பம் தன்னுடைய சிங்காசனத்தையும் பலத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் யாருக்கு கொடுக்கும்?

பூமியில் தள்ளப்பட்ட வலுசர்ப்பம் தன்னுடைய சிங்காசனத்தையும் பலத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் மிருகத்திற்கு அதாவது அந்தி கிறிஸ்துவுக்கு கொடுக்கும். (வெளி 13 : 1 - 4)

**4.** அந்தி கிறிஸ்துவின் அரசாட்சி எத்தனை வருடங்கள் பூமியில் நடைபெறும்?

அந்தி கிறிஸ்துவின் அரசாட்சி ஏழு வருடங்கள் நடைபெறும். (பாடத்திட்டம்)

**5.** அந்தி கிறிஸ்துவின் அரசாட்சியின் முதல் மூன்றரை வருடங்களில் யாருக்கு உபத்திரவம் நேரிடும்?

முதல் மூன்றரை வருடங்களில் ஸ்திரீக்கு அதாவது கைவிடப்பட்ட சபைக்கு உபத்திரவம் நேரிடும். (வெளி 12 : 13 - 17).

**6.** அந்திகிறிஸ்துவின் இரண்டாம் மூன்றரை வருட ஆட்சிக்காலத்தில் யாருக்கு மகா உபத்திரவம் உண்டாகும்?

அந்தி கிறிஸ்துவின் இரண்டாம் மூன்றரை வருட ஆட்சிக்காலத்தில் யூதர்களுக்கு மகா உபத்திரவம் நேரிடும்.

**7.** பகிரங்க வருகையின் போது இயேசு எந்த மலையின் மேல இறங்கி வருவார்?

பகிரங்க வருகையின் போது இயேசு ஒலிவ மலையின் மேல் எல்லாரும் காணும் படியாக இறங்கி வருவார். (அப். 1 : 9 - 12 : சகரியா 12:10-14; 14 : 4)

8. அந்தி கிறிஸ்து கர்த்தரோடும், அவருடைய பரிசுத்தவான்களோடும் யுத்தம் பண்ணும்படியாக தன்னுடைய சேனைகளை எங்கே கூட்டிச் சேர்ப்பான்?
அந்தி கிறிஸ்து அர்மகெதோன் என்னுமிடத்தில் கூட்டிச் சேர்ப்பான். (வெளி16: 16)

9. அர்மகெதோன் யுத்தத்திற்கு பின் சாத்தானுக்கு என்ன சம்பவிக்கும்?
சாத்தான் ஆயிர வருடமளவும் அகாதமான பாதாளத்திலே கட்டிவைக்கப்பட்டிருப்பான். (வெளி 20 : 2)

10. அர்மகெதோன் யுத்தத்திற்கு பின் அந்திக் கிறிஸ்துவுக்கும் கள்ளத் தீர்க்கதரிசிக்கும் என்ன சம்பவிக்கும்?
அந்திக்கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிக்கப்பட்டு அக்கினிக் கடலிலே தள்ளப்படுவார்கள். (வெளி 19 : 20)

11. கிறிஸ்து தமது ஆயிர வருட அரசாட்சியை எங்கு, யாரோடு கூட ஆரம்பிப்பார்?
கிறிஸ்து தமது பரிசுத்தவான்களோடு கூட ஆயிர வருட அரசாட்சியை பூமியிலே ஆரம்பிப்பார்.

## IV *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

1. அறுவடை என்றால் என்ன?
உபத்திரவ கால இரத்த சாட்சிகளைச் சேர்க்கும்படியாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மேகத்தில் தோன்றுவார். (மத். 24 : 30,31;வெளி 7 : 9 - 17;14 : 14 - 16) இது அறுவடை என்று அழைக்கப்படுகிறது.

2. அந்தி கிறிஸ்து கைவிடப்பட்ட சபையை ஏன் உபத்திரவப்படுத்துவான்? அவர்கள் எவ்வாறு மரிப்பார்கள்?
கைவிடப்பட்ட சபையில் அநேகர் கர்த்தராகிய இயேசுவை மறுதலிப்பதற்கும், மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுவதற்கும் மறுப்பார்கள். அதனால் அவன் அவர்களை உபத்திரவப்படுத்துவான். அவர்கள் இரத்தசாட்சிகளாக மரிப்பார்கள். (வெளி 13 : 7 - 17)

3. அந்தி கிறிஸ்துவின் அரசாட்சியின் முதல் மூன்றரை வருடங்களின் முடிவில் இயேசு எவ்வாறு மேகத்தின் மேல் தோன்றுவார்?
முதல் மூன்றரை வருட உபத்திரவ காலத்தில் இரத்த சாட்சிகளாக மரித்தவர்களை சேர்க்கும்படியாக தமது தூதர்களை அனுப்புவார். (வெளி 14 : 14 - 16;மத்தேயு.24:30, 31)
இயேசு தம் சிரசின் மேல் பொற்கிரீடத்தைத் தரித்தவராயும், கையில் கருக்குள்ள அரிவாளைப் பிடித்தவராயும் மேகத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறவராகத் தோன்றுவார். (வெளி 14 : 14 - 16)

4. யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம் என்பது என்ன?
அந்திக் கிறிஸ்துவின் ஆட்சியின் இரண்டாம் மூன்றரை வருட ஆட்சிக் காலத்தில் யூதர்களுக்கு மகா உபத்திரவம் உண்டாகும். எரேமியா 30 : 7 ல் இதைக் குறித்து ‘யாக்கோபுக்கு இக்கட்டுக் காலம்’ என்று சொல்லப்பட்டுள்ளது.

## V *சுருக்கமானவிடையளி:* (4/6 Marks)

1. இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகையைப் பற்றி குறிப்பு வரைக.
<u>பகிரங்க வருகை</u> : அந்திக் கிறிஸ்துவின் ஆட்சியின் இரண்டாம் மூன்றரை வருட ஆட்சிக் காலத்தில் யூதர்களுக்கு மகா உபத்திரவம் உண்டாகும். இதைக் குறித்து எரேமியா 30:7ல் யாக்கோபுக்கு இக்கட்டுக் காலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்திக்கிறிஸ்துவின் உபத்திரவத்தின் நிமித்தமாக யூதர்கள் தங்களுடைய மேசியாவின் (மீட்பரின்) வருகைக்காக புலம்பலோடும் கண்ணீரோடும் ஆவலோடும் காத்திருப்பார்கள். இரண்டாம் மூன்றரை வருட உபத்திரவ காலத்தின் முடிவில் துன்மார்க்கருக்குத் தக்க

தண்டனை அளித்து, இந்தப் பூமியில் ஆயிரவருடங்கள் அரசாட்சி செய்யும்படியாக கர்த்தராகிய இயேசு தம்முடைய பரிசுத்தவான்களோடுகூட, எல்லாரும் காணும்படியாக தாம் வானத்துக்கு எழுந்தருளிப்போன அதே ஒலிவ மலையின் மேல் இறங்கி வருவார். (அப். 1 : 9 - 12 ;சக. 12 : 10 - 14;14 : 3 – 5;2 தெச 1:7 – 10; வெளி. 19 : 17 - 21)

**2.** அர்மகெதோன் யுத்தம் பற்றி குறிப்பு வரைக.

இஸ்ரவேல் தேசத்திலுள்ள அர்மகெதோன் என்னுமிடத்தில் அந்திக்கிறிஸ்து, கர்த்தருக்கும் அவருடைய பரிசுத்தவான்களுக்கும் விரோதமாக யுத்தம் பண்ணும்படியாக தன்னுடைய சேனைகளைக் கூட்டிச் சேர்ப்பான். அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினால் நாசமாக்குவார். (வெளி. 16 : 12 - 16, 2 தெச. 2 : 8 ; சக. 14 : 1 - 4 ; வெளி. 19 : 14 - 21)பின்பு அந்திக்கிறிஸ்துவும் (மிருகமும்) கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிக்கப்பட்டு அக்கினிக் கடலிலே தள்ளப்படுவார்கள். (வெளி 19 : 20) சாத்தான் ஆயிர வருடமளவும் அகாதமான பாதாளத்திலே கட்டிவைக்கப்பட்டிருப்பான். கிறிஸ்து தமது பரிசுத்தவான்களோடுகூட ஆயிர வருட அரசாட்சியை பூமியிலே ஆரம்பிப்பார். (வெளி 20:1- 4)

**VI** <u>*விரிவான விடையளி*</u> : (10 Marks)

**1.** இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் ஒரு பகுதியாகிய அறுவடையைப் பற்றி எழுது.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மூன்று பகுதிகளைக் கொண்டது. அவையாவன : 1. இரகசிய வருகை 2. அறுவடை 3. பகிரங்க வருகை

<u>அறுவடை:</u>

உபத்திரவகால இரத்த சாட்சிகளைச் சேர்க்கும்படியாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மேகத்தில் தோன்றுவார். (மத். 24 : 30, 31 ; வெளி. 7 : 9 - 17 ; 14 : 14 - 16). இது அறுவடை என்று அழைக்கப்படுகிறது.

இயேசுவின் இரகசிய வருகைக்குப்பின் அதாவது ஆண்பிள்ளை சிங்காசனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு வானத்திலே ஒரு யுத்தமுண்டாகும். மிகாவேலும், அவனுடைய தூதர்களும் வலுசர்ப்பத்தோடும் (சாத்தான்) அவனுடைய தூதர்களோடும் யுத்தம்செய்து அவர்களைத் தோற்கடிப்பார்கள். (வெளி 12 : 7 -10) பூமியில் தள்ளப்பட்ட வலுசர்ப்பம் தன்னுடைய சிங்காசனத்தையும் பலத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் மிருகத்திற்கு அதாவது அந்தி கிறிஸ்துவுக்கு கொடுக்கும்.(வெளி13:1 - 4) அந்தி கிறிஸ்து ஏழு வருடங்கள் இப்பூமியில் அரசாட்சி செய்வான். முதல் மூன்றரை வருடங்கள் ஸ்திரீக்கு அதாவது கைவிடப்பட்ட சபைக்கு உபத்திரவம் நேரிடும். (வெளி 12 : 13 - 17). அநேகர் கர்த்தராகிய இயேசுவை மறுதலிப்பதற்கும், மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுவதற்கும் மறுப்பார்கள். அதனால் அவன் அவர்களை உபத்திரவப்படுத்துவான். அவர்கள் இரத்தசாட்சிகளாக மரிப்பார்கள் (வெளி. 13 : 7 - 17)

முதல் மூன்றரை வருடங்களின் முடிவில், கர்த்தராகிய இயேசு தம் சிரசின் மேல் பொற்கிரீடத்தைத் தரித்தவராயும் கையில் கருக்குள்ள அரிவாளைப் பிடித்தவராயும் மேகத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறவராகத் தோன்றுவார். அப்போது அவர் தம்முடைய தூதர்களை அனுப்பி அக்காலத்தில் இரத்தசாட்சிகளாக மரிக்கும் அனைவரையும் கூட்டிச் சேர்ப்பார். (வெளி. 14 - 16 ; மத். 24 : 30, 31).

இவ்வாறாக முதல் மூன்றரை வருட முடிவில் அறுவடை நடைபெறும்.

**VII** <u>*போதனை*</u>: (2 Marks)

நாம் கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கென்று அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய கர்த்தர் தம் மணவாட்டியைச் சேர்த்துக்கொள்ளும்படி எந்த நாழிகையில் வருவாரென்று நமக்குத் தெரியாது. ஆகையால் நாம் விழித்திருந்து, அவரைச் சந்திக்க ஆயத்தமாகக் காணப்பட வேண்டும்.

****************

வகுப்பு : 9

பாடம்-11

# வெளிப்படுத்தின விசேஷத்திற்கு ஒரு முன்னுரை

**I.** *மனப்பாடவசனம் :* (2 Marks)

வெளிப்படுத்தின விசேஷம் 1:3

இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது.

**II.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::* (2 Marks)

**1.** வெளிப்படுத்தின விசேஷத்தின் முதலாம் அதிகாரம் யாரை பற்றிய தரிசனமாகும்?
யோவான் கண்ட மகிமையடைந்த கிறிஸ்துவை பற்றிய தரிசனமாகும். (பாடத்திட்டம்)

**2.** ஏழு சபைகளுக்கும் கொடுக்கப்பட்ட எல்லா தூதுகளும் எந்த எச்சரிப்பின் வாாத்தைகளுடன் முடிவடைகின்றன?
ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்னும் எச்சரிப்பின் வார்த்தைகளுடன் முடிவடைகின்றன. (பாடத்திட்டம்)

**3.** வெளிப்படுத்தின விசேஷமானது ஒரே தரிசனத்தை எந்த இரு நோக்குகளிலிருந்து விவரித்துக் காண்பிக்கிறது?
யூதரின் நோக்கிலிருந்தும், புறஜாதியாரின் நோக்கிலிருந்தும் (சபையின் நோக்கு) விவரித்துக் காண்பிக்கிறது. (பாடத்திட்டம்)

**4.** வெளிப்படுத்தின விசேஷத்தின் 6 லிருந்து 11 வரையுள்ள அதிகாரங்கள் எவற்றை குறித்து விளக்குகின்றன?
ஏழு வருட உபத்திரவ காலத்தை யூதரின் நோக்கிலிருந்து விளக்குகின்றன.(பாடத்திட்டம்)

**5.** இஸ்ரவேல் புத்திரரின் சகல கோத்திரத்தாரிலுமிருந்து முத்திரையிடப்பட்டவர்கள் எத்தனை பேர்?
இஸ்ரவேல் புத்திரரின் சகல கோத்திரத்தாரிலுமிருந்து முத்திரையிடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்.(வெளி 7 : 4 - 8)

**6.** சபையின் நோக்கிலிருந்து உபத்திரவ காலத்தின் முதல் பாதியும், இரண்டாம் பாதியும் வெளிப்படுத்தின விசேஷத்தின் எந்த அதிகாரங்களில் விவரிக்கப்பட்டுள்ளது?
சபையின் நோக்கிலிருந்து உபத்திரவகாலத்தின் முதல் பாதி 12முதல் 14வரை உள்ள அதிகாரங்களிலும், இரண்டாம் பாதி 15,16 அதிகாரங்களிலும் விவரிக்கப்பட்டுள்ளது (பாடத்திட்டம்).

**7.** சூரியனை அணிந்த ஸ்திரீ எதை வெளிப்படுத்துகிறது?
பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற சபையை வெளிப்படுத்துகிறது. (பாடத்திட்டம்)

**8.** சீயோன் மலையில் ஆட்டுக்குட்டியானவருடன் நிற்பவர்கள் எத்தனை பேர்?
சீயோன் மலையில் ஆட்டுக்குட்டியானவருடன் 1,44,000 பேர் நிற்பார்கள்.(வெளி 14 : 1)

**9.** ஏழு வருட உபத்திரவ காலத்திற்குப் பின் நடக்கும் சம்பவங்களை எந்த அதிகாரங்கள் விவரிக்கின்றன?
வெளிப்படுத்தின விசேஷத்தின் 17முதல் - 19வரை அதிகாரங்கள் விவரிக்கின்றன

**10.** வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் யார்? ஆவிக்குரிய கண்ணோட்டத்தின் பாபிலோன் எதைக் குறிக்கிறது?

மகா பாபிலோன். விழுந்து போன சபையைக் குறிக்கிறது. (பாடத்திட்டம்)

**11.** வெளிப்படுத்தின விசேஷத்தை ஆக்கியோன் யார்? அதைக்குறித்து எங்கு கூறப்பட்டுள்ளது?

இந்த புத்தகத்தை ஆக்கியோன் தேவன் தாமே ஆவார். இதைக்குறித்து வெளி 1 : 1 - யில் கூறப்பட்டுள்ளது. (பாடத்திட்டம்)

**12.** யோவான் எந்த தீவிற்கு நாடு கடத்தப்பட்டிருந்தார்? அங்கிருந்து விடுதலையாக்கப்பட்டு எங்கு செல்லும்படி அனுமதிக்கப்பட்டார்?

பத்மு தீவிற்கு நாடு கடத்தப்பட்டிருந்தார். எபேசுவுக்கு திரும்ப செல்லும்படி அனுமதிக்கப்பட்டார் (பாடத்திட்டம்)

**13.** வெளிப்படுத்தின விசேஷத்தின் முதல் அதிகாரத்திலும், கடைசி அதிகாரத்திலும் யார் பாக்கியவான்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது?

இந்தத் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக் கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. (வெளி 1 : 3, 22 : 7)

**14.** வெளிப்படுத்தின விசேஷத்தின் முதல் அதிகாரத்திலும், கடைசி அதிகாரத்திலும் கொடுக்கபட்டுள்ள எச்சரிப்பின் வார்த்தை என்ன?

காலம் சமீபமாயிருக்கிறது. (வெளி. 1 : 3 ; 22 : 10)

**III.** ஓரிரு வாக்கிய□களில் விடையளி : (2 Marks)

**1.** வெளிப்படுத்தின விசேஷமானது எவைகளைப் பற்றியதான காரியங்களைக் கொண்டது?

வெளிப்படுத்தின விசேஷமானது, அப்.யோவான் ‘கண்டவை’களும் ’இருக்கிறவை’களும், ‘இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவை’களுமாகிய காரியங்களைக் கொண்டது.(வெளி 1 : 19)

**2.** நித்திய பரலோக வாசஸ்தலங்கள் யாவை?

புதிய வானம், புதிய பூமி, சீயோன் உட்பட புதிய எருசலேம் ஆகியவை நித்திய பரலோக வாசஸ்தலங்களாகும். (பாடத்திட்டம்)

**3.** வெளிப்படுத்தின விசேஷத்தின் 20 முதல் 22 வரையுள்ள அதிகாரங்கள் எவற்றை விவரிக்கின்றன?

ஆயிர வருட அரசாட்சி, கோகு மாகோகு யுத்தம், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்பபு, நித்திய இராஜ்யம் ஆகியவற்றைக் விவரிக்கின்றன.

**4.** நித்திய மகிமையான சுதந்திரத்துக்கு, நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்காக நாம் என்ன செய்ய வேண்டும்?

நாம் இந்த புத்தகத்தை படித்து, நித்தியத்தில் நமக்காக ஆயத்தம் பண்ணப்பட்டுள்ளவற்றைப் பற்றி, அதிகத் தெளிவானதும் பிரகாசமுமான தரிசனம் பெற்றுக் கொள்ள வேண்டும். (போதனை)

**5.** வெளி 4:1-ல் **‘இங்கே ஏறி வா’** என்று யாருக்கு, எதற்காக சொல்லப்பட்டுள்ளது?

இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை’ யோவானுக்கு காண்பிக்கும்படியாக ‘இங்கே ஏறி வா’ என்று அவருக்கு சொல்லப்பட்டுள்ளது. (வெளி 4 : 1)

**6.** வெளிப்படுத்தின விசேஷத்தின் 4, 5 - ம் அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளவைகள் யாவை?

கிறிஸ்துவின் மணவாட்டியாக அமையும் பரிசுத்தவான்களைத் தவிர, பரலோகத்தில் மற்ற பரிசுத்தவான்களின் பல்வேறு நிலவரங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. (பாடத்திட்டம்)

**7.** வெளிப்படுத்தின விசேஷத்தின் அதிகாரம் 15, 16 யில் கூறப்பட்டுள்ளவைகள் எவை?

ஏழு வாதைகளுடைய அல்லது தேவனுடைய கோபாக்கினையின் ஏழு கலசங்களையுடைய ஏழு தூதர்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. (பாடத்திட்டம்)

**8.** வெளிப்படுத்தின விசேஷத்தின் 19 ஆம் அதிகாரம் எந்த தரிசனத்தை விவரிக்கிறது?

முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறும் பல்வேறு கூட்டத்தினரும் அவர்களுடைய அறிக்கைகளும், ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணம், கல்யாண விருந்து, அர்மகெதோன் யுத்தம் ஆகியவற்றைப் பற்றிய தரிசனத்தை விவரிக்கிறது. (பாடத்திட்டம்)

**9.** தேவன் வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள தரிசனங்களை யார் மூலமாய், யாரால் யாருக்கு கொடுத்தார்?

தேவன் இந்தத் தரிசனங்களை கிறிஸ்து மூலமாய், தூதனால் யோவானுக்குக் கொடுத்தார். (வெளி 1 : 1)

**10.** யோவான் இந்த தரிசனத்தை எப்பொழுது பெற்றுக் கொண்டார்? எப்போது வெளிப்படுத்தின புத்தகத்தை எழுதினார்?

பத்மு தீவில் நாடு கடத்தப்பட்டவராக இருந்தபோது இந்த தரிசனத்தைப் பெற்றுக் கொண்டார். விடுதலையாக்கப்பட்ட பின்னரே இந்த புத்தகத்தை எழுதினார்.(பாடத்திட்டம்)

**11.** வெளிப்படுத்தின விசேஷத்தில் தேவனை துதிக்கும் பகுதிகளாகக் கூறப்பட்டுள்ள வசனங்கள் யாவை?

வெளி (4 : 11) (5 : 12, 13) (7 : 10 , 12) (15 : 3, 4) (19 : 1 – 7) போன்றவை தேவனை துதிக்கும் வசனங்களாக கூறப்பட்டுள்ளது.(பாடத்திட்டம்)

*__சுருக்கமான விடையளி:__* (4/6 Marks )

**1.** யோவான் கண்ட தரிசனத்தில் 'இவைகளுக்கு பின்பு சம்பவிப்பவைகள்' என்பதில் உட்படும் எதிர்கால சம்பவங்கள் யாவை?

1. பூரணமாக்கப்பட்ட சபை எடுத்துக் கொள்ளப்படுதல்.
2. அந்திக்கிறிஸ்துவின் ஆளுகை
3. கீழ்படியாத இராஜ்யங்களின் மேல் செலுத்தப்படும் ஏழத்தனையான நியாயத்தீர்ப்பு.
4. ஏழு வருட உபத்திரவம்.
5. கிறிஸ்துவுக்கு அவருடைய பரிசுத்தவான்களுக்குமுரிய ஆயிர வருட அரசாட்சி
6. நித்திய பரலோக வாசஸ்தலங்கள் ஆகிய அனைத்தும் 'இவைகளுக்கு பின்பு சம்பவிப்பகைவள்' என்பதில் உட்படும் எதிர்கால சம்பவங்களாகும்.(பாடத்திட்டம்)

**2.** வெளிப்படுத்தின விசேஷத்தின் 2, 3 ஆம் அதிகாரங்களில் 'இருக்கிறவைகள் ' என்பதில் கூறப்பட்டுள்ள காரியங்கள் யாவை ?

அதிகாரங்கள் 2 , 3ல் 'இருக்கிறவைகள் ' அதாவது அந்த நாட்களில் இருந்த சபைகளின் நிலவரத்தையும் அவைகளுக்குக் கொடுக்கப்பட்ட தூதுகளையும் பற்றி கூறுகின்றன. ஒவ்வொரு சபையும் தனக்குக் கொடுக்கபட்ட வெளிப்படுத்தல்களின் வெளிச்சத்தில் தங்களுடைய குறைகளைக் கண்டு, அவற்றிற்காக மனஸ்தாபப்பட்டு, தங்களைத் திருத்திக் கொள்வதற்காக முதலாவதாக ஒவ்வொரு சபைக்கும் கர்த்தர் தம்மைப் பற்றிய வெளிப்படுத்தல்களைக் கொடுக்கிறார். பின்பு அவர் சபைகளின் நிலவரத்தையும், ஜெயங்கொண்டவர்களுக்குரிய பிரதிபலனையும் குறித்துப் பேசுகிறார். எல்லா தூதுகளும் 'ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் ' என்னும் எச்சரிப்பின் வார்த்தைகளுடன் முடிவடைகின்றன. (பாடத்திட்டம்)

**3.** வெளிப்படுத்தின விசேஷத்தின் 6 ஆம் அதிகாரத்திலிருந்து 11 ம் அதிகாரம் வரை விவரிக்கப்பட்டுள்ள தரிசனங்கள் யாவை?

வெளிப்படுத்தின விசேஷத்தின் 6முதல் 11வரையுள்ள அதிகாரங்கள், ஏழுவருட உபத்திரவ காலமானது யூதரின் நோக்கிலிருந்து விளக்குகின்றன. இது இஸ்ரவேல் புத்திரரின் சகல கோத்திரத்தாரிலுமிருந்து முத்திரையிடப்படும். இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் (வெளி. 7 : 4 – 8), பொற்பீடம் , தூபங்காட்டும் பொற்கலசம், தூபம் (வெளி. 8 :3), எக்காளங்கள் (வெளி. 8 : 2) தேவாலயம் (வெளி. 11 : 1), இரண்டு ஒலிவ மரங்கள் (வெளி. 11 : 4), இரண்டு விளக்குத் தண்டுகள் (வெளி. 11 : 4) உடன்படிக்கையின் பெட்டி (வெளி. 11 : 9) ஆகியவற்றுடன் தெளிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. முதல் பாதி 6 – ஆம் அதிகாரத்திலும் (ஏழு முத்திரைகள் உடைக்கப்படுதலுடன்), இரண்டாம் பாதி 8 – 11 அதிகாரங்களிலும் (ஏழு எக்காளங்கள் ஊதப்படும் தரிசனம்) விவரிக்கப்பட்டுள்ளது.

**IV.** *__விரிவான விடையளி__* : (10 Marks)

**1.** வெளிப்படுத்தின விசேஷமானது 'இனி சம்பவிப்பவை'களைப் பற்றிய காரியங்களை கொண்ட ஒரு புத்தகம் என்பதை எவ்வாறு நிருபிக்கலாம்?

1. வெளிப்படுத்தின விசேஷத்தின் நான்காம் அதிகாரம் முதல் 'இனி சம்பவிப்பவை'களைப்பற்றி கூறப்பட்டுள்ளது. இவைகளுக்குப் பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை அப்.யோவானுக்குக் காண்பிக்கும்படியாக 'ஏறிவா'என்று அவருக்குச் சொல்லப்பட்டது. (வெளி. 4 : 1)

2. 4,5ஆம் அதிகாரங்களில் கிறிஸ்துவின் மணவாட்டியாக அமையும் பரிசுத்தவான்களைத் தவிர பரலோகத்தில் மற்ற பரிசுத்தவான்களின் பல்வேறு நிலவரங்கள் குறிக்கப்பட்டுள்ளது.

3. அதி. 6 - 11 : இவற்றில் ஏழுவருட உபத்திரவ காலத்தை யூதரின் நோக்கிலிருந்து விளக்குகின்றன. இது இஸ்ரவேல் புத்திரரின் சகல கோத்திரத்தாரிலுமிருந்து முத்திரையிடப்படும் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் (வெளி. 7 : 4 - 8), பொற்பீடம் , தூபங்காட்டும் பொற்கலசம், தூபவர்க்கம்(வெளி. 8 :3), எக்காளங்கள் (வெளி. 8 : 2) தேவாலயம் (வெளி. 11 : 1), இரண்டு ஒலிவ மரங்கள் (வெளி. 11 : 4), இரண்டு விளக்குத் தண்டுகள் (வெளி. 11 : 4) உடன்படிக்கையின் பெட்டி (வெளி. 11 : 9) ஆகியவற்றுடன் தெளிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

4. உபத்திரவ காலத்தின் முதல் பாதி 6 - ஆம் அதிகாரத்திலும் (ஏழு முத்திரைகள் உடைக்கப்படுதலுடன்), இரண்டாம் பாதி 8 - 11 அதிகாரங்களிலும் (ஏழு எக்காளங்களைக் குறித்த தரிசனம்) விவரிக்கப்பட்டுள்ளது.

5. யூதரின் நோக்கிலிருந்து தரிசனத்தைக் கண்ட பின்பு சகல தேசத்தாராகிய புறஜாதிகளுக்கு மறுபடியும் தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டும் என்று யோவானுக்குச் சொல்லப்பட்டது(வெளி. 10 : 8 - 11). எனவே அதே தரிசனம் மீண்டும் புறஜாதியாரின் நோக்கிலிருந்து அல்லது சபையின் நோக்கிலிருந்து விவரிக்கப்பட்டுள்ளது. உபத்திரவ காலத்தின் முதல் பாதி அதி. 12 - 14 - லிலும், இரண்டாம் பாதி அதி.15,16 - ரிலும் விவரிக்கப்பட்டுள்ளது.

6. அதி. 12 - 14 : இவற்றில் வானத்திலே காணப்பட்ட சூரியனை அணிந்த ஸ்திரீ (பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற சபை), சிங்காசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்பிள்ளை, (புறஜாதியாரின் அல்லது சபையின் நோக்கிலிருந்து) உபத்திரவ காலத்தின் முதல் பாதி ஆட்டுக்குட்டியானவருடன் சீயோன் மலையில் நிற்கும் 1, 44, 000 பேர் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

7. அதி. 15 , 16 : இவற்றில் ஏழு வாதைகளையுடைய அல்லது தேவனுடைய கோபாக்கினையின் ஏழு கலசங்களையுடைய ஏழு தூதர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது . இது(முன்பு கூறப்பட்டபடி, சபையின் நோக்கிலிருந்து) உபத்திரவ காலத்தின் இரண்டாம் பாதியைப் பற்றிய தரிசனமாகும்.

8. அதி. 17 - 19 : இவ்வதிகாரங்கள் ஏழு வருட உபத்திரவ காலத்திற்குப் பின் நடக்கும் சம்பவங்களை விவரிக்கின்றன. 17, 18 அதிகாரங்களில், 'மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் ' என்னும் மகா வேசியின் மீது வந்த நியாயத்தீர்ப்பைக் குறித்து நாம் வாசிக்கிறோம். இது விழுந்து போன சபையாகிய மத சம்பந்தமான பாபிலோன் ஆகும். அதி. 19 - இல், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறும் பல்வேறு கூட்டத்தினரும் அவர்களுடைய அறிக்கைகளும், ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணம், கல்யாண விருந்து, அர்மகெதோன் யுத்தம் ஆகியவற்றைப் பற்றிய தரிசனத்தை நாம் காண்கிறோம்.

9. அதி. 20 - 22 : இவை, ஆயிர வருட அரசாட்சி, கோகு மாகோகு யுத்தம், வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு, நித்திய இராஜ்யம் ஆகியவற்றைக் குறித்து விவரிக்கின்றன.

மேற்சொல்லப்பட்ட சம்பவங்களிலிருந்து வெளிப்படுத்தின விசேஷமானது இனி சம்பவிப்பவைகளைப் பற்றிய காரியங்களை கொண்ட ஒரு புத்தகம் என்று நிருபிக்கலாம்.

**V.** _போதனை_: (2 Marks)

நமக்கென்று நித்தியத்தில் ஆயத்தம் பண்ணப்பட்டுள்ளதைப் பற்றிய இன்னும் அதிக தெளிவானதும் பிரகாசமானதுமான தரிசனத்தைப் பெற்றுக் கொண்டு, அந்த மகிமையான நித்திய சுதந்தரத்துக்காக நம்மை நாம் ஆயத்தப்படுத்திக் கொள்ள இந்தப் புத்தகத்தை நாம் படிக்க வெண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

******************************

வகுப்பு : 9

பாடம்-12

# உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள்

(பகுதி I)

1 கொரி. 15 - ஆம் அதிகாரம்

**I.** *மனப்பாடவசனம் :* (2 Marks)

1 பேதுரு 1 : 3 - 5

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாக்கும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.

கடைசிக் காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

1 தெசலேனிக்கேயர் 4 : 16, 17

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்: அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.

**II.** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::*

**1.** இயேசு எவைகளை ஜெயித்து, என்றென்றைக்குமாய் ஜீவனோடிருக்கிறார்?
இயேசு பிசாசு, மரணம், பாதாளம் ஆகியவற்றை ஜெயித்து என்றென்றைக்குமாய் ஜீவனோடிருக்கிறார். (வெளி. 1 : 18)

**2.** உயிர்த்தெழுதலில் மொத்தம் எத்தனை வரிசைகள் காணப்படுகின்றன?
உயிர்த்தெழுதலில் மொத்தம் ஏழு வரிசைகள் காணப்படுகின்றன. (பாடத்திட்டம்)

**3.** உயிர்த்தெழுதலின் முதல் ஐந்து வரிசைகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
முதலாம் உயிர்த்தெழுதல் அல்லது மேன்மையான உயிர்த்தெழுதல் என்று அழைக்கப்படுகின்றன. (வெளி. 20 : 5, 6 ; எபி. 11 : 35)

**4.** உயிர்த்தெழுதலின் முதல் வரிசையில் உயிரோடு எழுப்பப்பட்டவர் யார்?
கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.( 1 கொரி 15 : 20 )

**5.** உயிர்த்தெழுதலின் முதல் ஐந்து வரிசைகள் எப்போது நடைபெறும்?
முதல் வரிசை ஏற்கெனவே நடந்தாயிற்று. மீதியானவைகள் ஆயிர வருட அரசாட்சிக்கு முன் நடைபெறும். (பாடத்திட்டம்)

**6.** உயிர்த்தெழுதலின் கடைசி இரண்டு வரிசைகளும் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
இரண்டாம் உயிர்த்தெழுதல் அல்லது பொதுவான உயிர்த்தெழுதல் என்று அழைக்கப்படுகின்றன. (வெளி. 20 : 12, 13)

**7.** உயிர்த்தெழுதலின் கடைசி இரண்டு வரிசைகளும் எப்போது நடைபெறும்?
ஆயிர வருட அரசாட்சிக்கு பின்பு நடைபெறும் (வெளி. 20 : 12, 13)

## III. *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

1. இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்ததினாலே உண்மையான கிறிஸ்தவர்களிடம் காணப்படும் ஜீவனுள்ள நம்பிக்கை என்ன?
   இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்ததினாலே உண்மையான கிறிஸ்தவர்கள் ஒரு மகிமையான உயிர்த்தெழுதலைப் பற்றியும், பரலோகத்திலே ஆயத்தம் பண்ணப்பட்டுள்ள நித்திய சுதந்தரத்தைக் குறித்தும் ஒரு ஜீவனுள்ள நம்பிக்கை உடையவர்களாய் இருக்கின்றனர். (1 பேதுரு 1 : 4, 5)

2. நாம் எப்போது எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்?
   இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்.(1 கொரி. 15 : 19)

3. இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததினால் பரிகரிக்கப்பட்டது எது? வெளியரங்கமாக்கப்பட்டது எது?
   இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததினால் மரணத்தை பரிகரித்து, ஜீவனையும், அழியாமையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார். (2 தீமோ. 1 : 10)

## IV. *சுருக்கமானவிடையளி:* (4/6 Marks)

1. கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்து, நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையை நோக்கி முன்னேறிச் செல்ல காரணம் என்ன?

   1. இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததினால், மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார். (2 தீமோ. 1 : 10).
   2. இயேசு, பிசாசு, மரணம், பாதாளம் ஆகியவற்றை ஜெயித்து என்றென்றைக்குமாய் ஜீவனோடிருக்கிறார். (வெளி. 1 : 18)
   3. அவர் பரலோகத்திலும் பூலோகத்திலும் சகல அதிகாரமும் உடையவராய், பிதாவின் சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டவருமாயிருக்கிறார். (மத்தேயு 28 : 18,)
   4. அவர் நமக்காக ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கிறார். (யோவான் 14 : 3)
   5. நமக்காகப் பரிந்து பேசும்படி, அவர் என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறார். (எபிரெயர் 7 : 25)

   ஆகவே தான் , நாம் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்து, நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையை நோக்கி முன்னேறிச் செல்கிறோம்.

## V. *போதனை :* (2 Marks)

கிறிஸ்துவின் இரகசிய வருகையின போது மறுரூபமாகுதல் அல்லது அப்போது நடைபெறும். உயிர்த்தெழுதலில் பங்கு பெறுதலே நம்முடைய குறிக்கோளாக இருக்க வேண்டும்.

**************

# உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள்

(பகுதி II)

**I** *மனப்பாடவசனம் :* (2 Marks)

வெளிப்படுத்தல் 20 : 4 - 6

அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின் மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும், தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்.

மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல் .

முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான். இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராய் இருந்து, அவரோடே கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::*

1. முதலாம் உயிர்த்தெழுதலின் முதல் வரிசையில் உயிரோடு எழுப்பப்பட்டவர் யார்?
   கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (1 கொரி. 15 : 20)

2. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையின் போது முதலாவதாக உயிரோடெழுந்திருப்பவர்கள் யார்?
   ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதிலும் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள். (1 தெச 4 : 16, 17 ; 5:23)

3. முதலாம் உயிர்த்தெழுதலின் மூன்றாம் வரிசையில் உயிரோடு எழுப்பப்படுபவர்கள் யார்?
   உபத்திரவ காலத்து இரத்தசாட்சிகள் (வெளி. 7 : 9 - 14 ; 14 : 14 - 16)

4. உபத்திரவ காலத்து இரத்த சாட்சிகள் மத்தேயு 25 ஆம் அதிகாரத்தில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்?
   இயேசு தம்முடைய மணவாட்டியுடன் வரும் போது அவரை எதிர்கொண்டு செல்லும் 'புத்தியுள்ள கன்னிகைகள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.(மத்.25: 1 - 10)

5. உபத்திரவ காலத்து இரத்த சாட்சிகள் எப்போது உயிர்த்தெழுவார்கள்?
   முதல் மூன்றரை வருட உபத்திரவ காலத்தின் முடிவில் உயிர்த்தெழுவார்கள்,(பாடத்திட்டம்)

6. உபத்திரவ காலத்து இரத்த சாட்சிகளைச் சேர்க்கும்படி இயேசு எங்கு வெளிப்படுவார்?
   இயேசு மேகத்தில் வெளிப்படுவார். (வெளி. 14 : 14)

7. மரணத்தை ருசிபாராமல் எடுத்துக் கொள்ளப்பட்ட இரண்டு சாட்சிகள் யார்? யார்?
   ஏனோக்கும், எலியாவும் (பாடத்திட்டம்)

8. ஏனோக்கு, எலியாவின் உயிர்த்தெழுதல் எப்போது சம்பவிக்கும்?
   இரண்டாம் மூன்றரை வருட உபத்திரவ காலத்தின் போது சம்பவிக்கும் (வெளி 11:3-12)

**9.** பழைய ஏற்பாட்டின் முதற்பலன்கள் யார்?
ஏனோக்கும், எலியாவும் (பாடத்திட்டம்)

**10.** முதலாம் உயிர்த்தெழுதலின் ஐந்தாம் வரிசையில் யார் உயிரோடெழுப்படுவார்கள்?
பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் அனைவரும், பொதுவான இரத்த சாட்சிகளும் .(வெளி. 11 : 18, 19 ; 6 : 9 – 11).

**III** <u>*ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*</u> (2 Marks)

**1.** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையின் போது உயிரொடெழுந்திருப்பவர்கள் யார்? எடுத்துக் கொள்ளப்படுவர்கள் யார்?
கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது உயிரோடெழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் மறுரூபமாக்கப்பட்டு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். (1 தெச 4 : 16, 17)

**2.** கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படாமல், கைவிடப்பட்டவர்களுக்கு என்ன சம்பவிக்கும்?
இவர்கள் அந்திகிறிஸ்துவினால் உபத்திரவப்படுத்தப்பட்டு, இரத்தசாட்சிகளாக மரிப்பார்கள் (பாடத்திட்டம்)

**3.** மரணத்தை ருசிபாராமல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஏனோக்கும், எலியாவும் எப்போது ஏன் பூமிக்கு திரும்பி வருவார்கள்?
இரண்டாம் உபத்திரவ காலத்தின் நாட்களில், பிரசங்கிக்கும் படியாக பூமிக்கு திரும்பி வருவார்கள்..(வெளி. 11 : 3 – 6)

**4.** பூமிக்கு திரும்ப வந்த ஏனோக்கும், எலியாவும் எவ்வாறு கொலை செய்யப்பட்டு, எத்தனை நாட்களுக்கு பின்பு உயிரோடு எழுப்பப்படுவார்கள்?
ஏனோக்கும், எலியாவும் அந்திகிறிஸ்துவினால் கொலை செய்யப்பட்டு, மூன்றரை நாட்களுக்கு பின்பு, எழுப்பப்படுவார்கள்.(வெளி 11 : 7, 11)

**5.** பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் அனைவரும், பொதுவான இரத்தசாட்சிகளும் எப்போது உயிர்த்தெழுவார்கள்?
ஏழு வருட உபத்திரவ காலத்தின் முடிவில் இயேசு தமது பரிசுத்தவான்களோடு பூமியில் ஆயிர வருடம் ஆளுகை செய்யும்படியாக இறங்கி வருவார். அப்போது இவர்கள் உயிர்த்தெழுவார்கள். (வெளி. 11 : 18, 19)

**IV** <u>*சுருக்கமான விடையளி*</u>: (4/6 Marks)

**1.** முதலாம் உயிர்த்தெழுதலின் முதல் வரிசையில் உயிரோடு எழுப்பப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் காணப்பட்ட தன்மைகள் யாவை?.

1. இயேசு கிறிஸ்து பாவம் அறியாதவர் (2 கொரி 5 : 21).
2. அவர் பாவஞ் செய்ய வில்லை. (1 பேதுரு 2 : 22)
3. அவரிடத்தில் பாவம் இல்லை. (1 யோவான். 3 : 5)
4. அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாயிருந்தார். (எபி. 7 : 26).
5. அவர் பரீட்சிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு உத்தமராய் விளங்கினார்.(எபி. 4 : 15)

**2.** முதலாம் உயிர்த்தெழுதலின் இரண்டாம் வரிசையில் உயிரோடு எடுத்துக் கொள்ளப்படும் சபையின் பலவித பெயர்கள் யாவை?

1. மகிமையுள்ள சபை (எபே. 5 : 27)
2. பூரணராக்கப்பட்ட பரிசுத்தவான்கள் (எபே. 4 : 11, 12)
3. ஜெயங்கொண்ட ஆண்பிள்ளை (வெளி. 12 : 5)
4. கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவர்கள் (கொலோ 1 : 28)
5. ஆவி, ஆத்மா, சரீரம் முழுவதிலும் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் (1 தெச 5 : 23).

**V** ***விரிவான விடையளி*** : (10 Marks)

**1.** முதலாம் உயிர்த்தெழுதல் அல்லது மேன்மையான உயிர்த்தெழுதலில் காணப்படுகின்ற ஐந்து வரிசைகளை பற்றி விவரி.

1. முதல் வரிசை : கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. (1கொரி. 15 : 20) அவர் பாவம் அறியாதவர் (2 கொரி 5 : 21). அவர் பாவஞ் செய்யவில்லை. (1 பேதுரு 2 : 22) அவரிடத்தில் பாவம் இல்லை. (1 யோவான். 3 : 5) அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாயிருந்தார். (எபி. 7 : 26). அவர் பரீட்சிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு உத்தமராய் விளங்கினார் (எபி 4: 15)

2. இரண்டாம் வரிசை : மகிமையுள்ள சபை (1 கொரி 15: 23; எபே. 5 : 27) இவர்கன் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவர்கள் (கொலோ. 1 : 28), அவர்கள் தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதிலும் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள். (1 தெச. 5 : 23). நம்முடைய கர்த்தரின் இரகசிய வருகையின்போது, இவர்களில் மரித்தவர்கள் முதலாவதாக உயிரோடெழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருப்பவர்கள் மறுரூபமாக்கப்பட்டு, ஆகாயத்தில் கர்த்தரைச் சந்திக்கும்படியாக எடுத்துக்கொள்ளப்படுவார்கள். (1 தெச 4 : 16, 17)

3. மூன்றாம் வரிசை : உபத்திரவ காலத்து இரத்த சாட்சிகள் (வெளி. 7 : 9 - 14 ; 14:14-16)
இவர்கள் கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படாமல், கைவிடப்பட்டவர்கள். இவர்கள் அந்திக்கிறிஸ்துவினால் உபத்திரவப்படுத்தப்பட்டு, இரத்தசாட்சிகளாக மரிக்கிறார்கள். இவர்கள் கர்த்தராகிய இயேசு தம்முடைய மணவாட்டியுடன் வரும்போது அவரை எதிர்கொண்டு செல்லும் 'புத்தியுள்ள கன்னிகைகள்' என்று குறிப்பிடப்படுகின்றனர். (மத். 25 : 1 - 10) . இவர்கள் முதல் மூன்றரை வருட உபத்திரவ காலத்தின் முடிவில் உயிர்த்தெழுவார்கள். இந்த இரத்த சாட்சிகளைச் சேர்க்கும்படியாக கர்த்தராகிய இயேசு மேகத்தில் வெளிப்படுவார்.

4. நான்காம் வரிசை: இரண்டு சாட்சிகள் (ஏனோக்கு, எலியா) (வெளி.11:3- 12). இவர்களது உயிர்த்தெழுதல் இரண்டாம் மூன்றரை வருட உபத்திரவ காலத்தின் போது சம்பவிக்கும். மரணத்தை ருசிபாராமல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஏனோக்கும் எலியாவும் இந்த காலத்தில் பிரசங்கிக்கும்படியாக பூமிக்குத் திரும்பி வந்து, அந்திக்கிறிஸ்துவினால் கொல்லப்பட்டு, மூன்றரை நாட்களுக்குப் பின்பு எழுப்பப்படுவார்கள். இவர்களே பழைய ஏற்பாட்டின் முதற்பலன்களாவர்.

5. ஐந்தாம் வரிசை: பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் அனைவரும், பொதுவான இரத்த சாட்சிகளும் (வெளி.11 : 18,19 ; 6 : 9 - 11)
ஏழு வருட உபத்திரவ காலத்தின் முடிவில் கர்த்தராகிய இயேசு தமது பரிசுத்தவான்களோடு, இப்பூமியில் ஆயிர வருடம் ஆளுகை செய்யும்படியாக வரும்போது இவர்கள் உயிர்த்தெழுவார்கள். கண்கள் யாவும் அவரைக் காணும்.

**VI** ***போதனை*** **:** (2 Marks)

முதலாம் உயிர்த்தெழுதலின் இரண்டாம் வரிசையில் நாம் பங்குள்ளவர்களாகும்படி நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் முழுவதுமாக பரிசுத்தமாக்கப்பட்டு, குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதற்காக, நாம் நம்மைச் சமாதானத்தின் தேவனுக்கு முற்றிலுமாக ஒப்புக்கொடுக்க வேண்டும்,

******************

# உயிர்த்தெழுதலின் ஏழு வரிசைகள்

(பகுதி III)

(மத். 25 : 31 - 46 ; வெளிப்படுத்தின விசேஷம் 20 : 11 - 15)

## இரண்டாம் உயிர்த்தெழுதல் அல்லது பொதுவான உயிர்த்தெழுதல்

**I** *மனப்பாடவசனம் :* (2 Marks)

பிலிப்பியர் 1: 9-11

மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும்,

தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி,

நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::*

**1.** இரண்டாம் உயிர்த்தெழுதல் அல்லது பொதுவான உயிர்த்தெழுதல் எப்போது நடைபெறும்?

ஆயிர வருட அரசாட்சிக்குப் பின்னர் வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பின் போது நடைபெறும் (பாடத்திட்டம்)

**2.** வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பின் போது தேவனுடைய சமுகத்திலிருந்து எவைகள் அகன்று போகும்?

பூமியும் , வானமும் அகன்று போகும். (வெளி 20 : 11)

**3.** வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பின் போது தேவனுக்கு முன்பாக நிற்பவர்கள் யார்?

மரித்தோராகிய சிறியோர் பெரியோர் யாவரும் அவருக்கு முன்பாக நிற்பார்கள். (வெளி.20: 12)

**4.** உயிர்த்தெழுதலின் ஆறாம் வரிசையில் உயிரோடெழுப்பப்பட்டவர்கள் எந்த வாசஸ்தலத்தை சுதந்தரித்துக் கொள்கிறார்கள்?

புதிய பூமியை சுதந்தரித்துக் கொள்கிறார்கள். (மத். 25 : 34)

**5.** உயிர்த்தெழுதலின் ஏழாம் வரிசையில் உயிரோடெழுப்பப்படுபவர்கள் யார்?

ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத துன்மார்க்கர் உயிரோடெழுப்பப்படுவார்கள். (வெளி. 20 : 15)

**6.** ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத துன்மார்க்கர் எங்கு தள்ளப்படுவார்கள்?

அக்கினிக் கடலிலே தள்ளப்படுவார்கள். (வெளி. 20 : 15)

**III** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

**1.** இரண்டாம் உயிர்த்தெழுதல் அல்லது பொதுவான உயிர்த்தெழுதல் என்று அழைக்கப்படுவது எது?

உயிர்த்தெழுதலின் வரிசையில், ஆறாம், ஏழாம் வரிசைகள் இரண்டாம் உயிர்த்தெழுதல் அல்லது பொதுவான உயிர்த்தெழுதல் என்று அழைக்கப்படுகின்றன. (பாடத்திட்டம்)

**2.** உயிர்த்தெழுதலின் ஆறாம் வரிசையில் யார் உயிரோடு எழுப்பப்படுவார்கள்?

இரட்சிக்கப்பட்டு, ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள், ஆறாம் வரிசையில் உயிரோடெழுப்பப்படுவார்கள். இவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறாதவர்கள் .(வெளி 20:13-15;மத் 25: 31-40)

**IV** ***<u>சுருக்கமான விடையளி:</u>*** (4/6 Marks)

**1.** வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு குறிப்பு வரைக.

ஒரு பெரிய வெள்ளைச் சிங்காசனம் பரலோகத்தில் வைக்கப்பட்டு, கர்த்தராகிய இயேசு அதின்மேல் வீற்றிருக்கிறார். அவருடைய சமுகத்திலிருந்து வானமும், பூமியும், அகன்று போகின்றன. மரித்தோராகிய சிறியோர் பெரியோர் யாவரும் அவருக்கு முன்பாக நிற்கின்றனர். புஸ்தகங்கள் திறக்கப்படுகின்றன. ஜீவ புஸ்தகமுங்கூட திறக்கப்படுகிறது. அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைகின்றனர்.(வெளி 20 : 11, 12;மத். 25 : 31 - 46)

**2.** உயிர்த்தெழுதலின் ஆறாம், ஏழாம் வரிசைகளை பற்றி எழுது. (அல்லது) உயிர்த்தெழுதலின் ஆறாம், ஏழாம் வரிசைகளில் யார் உயிரோடெழுப்பப்படுவார்கள்? அவர்கள் எவற்றை சுதந்தரித்துக் கொள்வார்கள்?

ஆறாம் வரிசை : இரட்சிக்கப்பட்டு, ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறாதவர்களான இவர்கள் இரண்டாம் உயிர்தெழுதலில், ஆறாம் வரிசையில் உயிரோடெழுப்பப்பட்டு, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்கிறார்கள் (புதிய பூமி) (வெளி. 20 : 13 – 15;மத்.25:31- 40)

ஏழாம் வரிசை : இதில் ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத துன்மார்க்கர் உயிரோடெழுப்பட்டு, நித்திய ஆக்கினையை அடையும்படி போவார்கள். (அக்கினிக்கடல்) (வெளி. 20 : 13 - 15 ; மத். 25 : 41 - 46)

**V** ***<u>போதனை :</u>*** (2 Marks)

தேவன் நம்மை இரட்சித்து, பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்து, பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் வைத்திருப்பதின் நோக்கம், நாம் பொதுவான உயிர்த்தெழுதலில் பங்கு பெறும்படியாக அல்ல: கிறிஸ்துவின் மணவாட்டிக்குரிய உயிர்த்தெழுதலின் வரிசையில் காணப்படுவதற்கே ஆகும்.

**************************

# இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல்

**I** *மனப்பாடவசனம் :* (2 Marks)

எபி. 13 : 12 - 14

அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ் செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்.

ஆகையால், நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக் கடவோம்.

நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை, வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம்.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::*

**1.** 'பரிசுத்தமாகுதல்' என்பதின் அர்த்தம் யாது?
'தேவனுக்கென்று வேறு பிரிதல்' என்று அர்த்தம் (பாடத்திட்டம்)

**2.** இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல் என்றால் என்ன?
பாவங்களிலிருந்தும், பாவிகளிலிருந்தும் வேறு பிரிவதாகும். (பாடத்திட்டம்)

**3.** நாம் எதற்காக பாளயத்திற்கு புறம்பே இயேசுவினிடத்திற்கு போக வேண்டும்?
நாம் பரிசுத்தமாக்கப்படும்படியாக பாளயத்திற்கு புறம்பே இயேசுவினிடத்திற்கு புறப்பட்டு போக வேண்டும். (எபி. 13 : 12, 13)

**4.** பாளயம் என்பது யாரைக் குறிக்கிறது?
பாளயம் என்பது இரட்சிக்கப்பட்ட ஜனங்களைக் குறிக்கிறது. (பாடத்திட்டம்)

**5.** பாளயத்திற்கு புறம்பே இயேசுவோடு கூட இருக்கும் நாம் என்ன செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும்?
நிந்தையைச் சுமக்கவும், கர்த்தரோடு பாடுபடவும் ஆயத்தமாக கர்த்தருக்கென்று வேறு பிரிக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும். (பாடத்திட்டம்)

**6.** சிவப்பான கிடாரி எதற்கு நிழலாட்டமாக காணப்படுகிறது?
இரத்தத்தினால் உண்டாகும் பரிசுத்தமாகுதலுக்கு நிழலாட்டமாக இருக்கிறது. (பாடத்திட்டம்)

**7.** கிடாரியின் தன்மைகளில் பழுதற்றது என்பது எதைக் குறிக்கிறது?
குற்றமில்லாத தன்மையைக் குறிக்கிறது. (பாடத்திட்டம்)

**8.** நம்மில் ஊனம் எப்போது உண்டாகிறது?
நாம் அறிந்த சத்தியத்திற்கு ஏற்றபடி ஜீவிக்காவிட்டால், நம்மில் ஊனம் உண்டாகிறது. (பாடத்திட்டம்)

**9.** தீட்டுக்கழிக்கும் ஜலம் தெளிக்கப்படுதல் என்பது எதைக் காட்டுகிறது?
அறிக்கையிடுதலைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

**III** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

**1.** பிரதிஷ்டை பண்ணப்பட்டவர்களாய் ஜீவிக்கும் பரிசுத்தவான்கள் எதிலிருந்து வேறுபிரிந்து ஜீவிக்க வேண்டும்?
பாவங்களிலிருந்தும், பாவிகளிலிருந்தும், உலகத்திலிருந்தும் உலகப்பொருட்களிலிருந்தும், சுயத்திலிருந்தும் வேறு பிரிந்து ஜீவிக்க வேண்டும். (பாடத்திட்டம்)

**2.** நாம் பரிசுத்தமாக்கப்படும் மூன்று விதங்கள் யாவை?
*1.* கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் (எபி. 13 : 12, 13)
*2.* தேவனுடைய வசனத்தினால் (யோ. 17 : 17)
*3.* பரிசுத்த ஆவியினால் (ரோமர் 15 : 15) பரிசுத்தமாக்கப்படுகிறோம்.

**3.** நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டவர் யார்? எதற்காக?
தம்முடைய சொந்த இரத்தத்தால் ஜனத்தைப் பரிசுத்தஞ் செய்யும்படியாக கர்த்தராகிய இயேசு நகர வாசலுக்கு புறம்பே பாடுபட்டார். (எபி. 13 : 12, 13)

**4.** நாம் யார் யாரை விட்டு வேறு பிரிந்து ஜீவிக்க வேண்டும்?
1) மாறுபாடுள்ள சந்ததியார்(அப் 2 : 40)
2) உபதேசத்திற்கு விரோதமாகப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குபவர்கள். (ரோமர். 16 : 17)
3) அப்போஸ்தலர் வழிகாட்டுகிறபடி நடவாமல் வேறு விதமாய் நடப்பவர்கள் (பிலி. 3 : 16 - 18)
4) வசனத்திற்கு கீழ்படியாதவர்கள் (2 தெச. 3 : 14) இவர்களை விட்டு வேறு பிரிந்து ஜீவிக்க வேண்டும்.

**5.** 'பாளயம்' என்பது எதைக் காட்டுகிறது? பாளயத்திற்கு புறம்பே செல்ல வேண்டும் என்பது எதைக் குறிக்கிறது?
'பாளயம்' என்பது இரட்சிக்கப்பட்ட ஜனங்களைக் காட்டுகிறது. இவர்கள் மத்தியில் காணப்படும் பின்மாற்றக்காரர், கள்ள போதகர் ஆகியோரிடத்திலிருந்து நம்மை நாம் வேறு பிரித்துக் கொள்வதை பாளயத்திற்கு புறம்பே செல்லுதல் குறிக்கிறது. (பாடத்திட்டம்)

**6.** முழு இஸ்ரவேல் சபையின் பாவநிவர்த்திக்காக ஆசாரியனிடத்தில் ஒப்படைக்கப்பட்டது எது? அது எப்படிப்பட்டதாயிருந்தது?
முழு இஸ்ரவேல் சபைக்காகவும் சிவப்பான கிடாரி ஆசாரியனிடத்தில் ஒப்படைக்கப்பட்டது. அது பழுதற்றதும், ஊனமற்றதும், நுகத்தடிக்குட்படாததுமாக இருந்தது. (எண். 19 : 2)

**7.** கிடாரியின் தன்மைகளில் 'ஊனமில்லாத தன்மை' என்பது எதைக் குறிக்கிறது?
ஊனமில்லாத தன்மை என்பது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஜீவியத்தைப் போல மனிதனுக்கு முன்பாகவுங்கூட ஒரு குற்றமில்லாததும், கண்டிக்கப்படாததுமான ஜீவியத்தைக் குறிக்கிறது. (கொலோ 1 : 21)

**8.** கிடாரியின் தன்மைகளில் நுகத்தடிக்குட்படாதது என்பது எதைக் காண்பிக்கிறது?
நாம் பாவம், மாம்சம், உலகம் ஆகியவற்றின் அடிமைத்தனத்தின் கீழ் வராத ஒரு ஜீவியத்தை காண்பிக்கிறது. (பாடத்திட்டம்)

**9.** கிடாரி கொல்லப்பட்டு, அதனுடைய இரத்தம் ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதிராக எத்தனை தரம் தெளிக்கப்பட வேண்டும்? இது எதைக் வெளிப்படுத்துகிறது?
ஏழுதரம் தெளிக்கப்படவேண்டும். இது சபை தன் வேறுபாட்டின் ஜீவியத்தை பாதுகாத்துக் கொள்வதைக் வெளிப்படுத்துகிறது. (பாடத்திட்டம்)

**10.** கீழ்கண்டவைகளின் ஆவிக்குரிய அர்த்தங்களை எழுது.
1) கேதுருக்கட்டை 2) சிவப்பு நூல் 3) ஈசோப்பு
*1.* கேதுருக்கட்டை சரீரத்தைக் காட்டுகிறது.
*2.* சிவப்பு நூல் ஆவியைக் காட்டுகிறது.
*3.* ஈசோப்பு ஆத்துமாவைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

**11.** சிவப்பான கிடாரி எவைகளோடு சேர்த்து எரிக்கப்பட வேண்டும்?
சிவப்பான கிடாரி கேதுருக்கட்டை, ஈசோப்பு, சிவப்பு நூல் ஆகியவற்றோடு சேர்த்து எரிக்கப்பட வேண்டும். (பாடத்திட்டம்)

**IV** *<u>சுருக்கமான விடையளி:</u>*

**1.** சிவப்பான கிடாரியில் சுட்டெரிக்கப்பட வேண்டிய பகுதிகள் யாவை? அதின் ஆவிக்குரிய கருத்து என்ன?

சிவப்பான கிடாரியில் சுட்டெரிக்கப்பட வேண்டிய பகுதிகள் (எண். 19 : 5)

கிடாரியின் தோல், மாம்சம், இரத்தம், சாணி போன்றவை சுட்டெரிக்கப்பட வேண்டும்.

அவற்றின் ஆவிக்குரிய அர்த்தங்கள் :

தோல் : ஜாதி, பாஷை போன்ற வித்தியாசங்கள் சுட்டெரிக்கப்பட வேண்டும்.

மாம்சம்: ஆவி, ஆத்துமா, சரீரத்தில் வெளிப்படும் மாம்ச சுபாவங்கள் சுட்டெரிக்கப்பட வேண்டும்.

இரத்தம்: ஜீவனை இரட்சிக்க விரும்புதல் என்ற சுபாவம் சுட்டெரிக்கப்பட வேண்டும்.

சாணி: அழிந்து போகிற போஜனத்திற்காக கிரியை நடப்பித்தல் சுட்டெரிக்கப்படவேண்டும்.

**2.** சிவப்பு கிடாரி எத்தன்மை உடையதாக இருக்க வேண்டும்? அதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?

கிடாரியின் தன்மைகள்: (எண். 19 : 2)

பழுதற்றது : குற்றமில்லாத தன்மை. கர்த்தராகிய இயேசு பாவமில்லாதவராயிருந்தார். (1 யோவான் 3 : 5). அவர் நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார் என்று எபி. 9 : 14 - இல் நாம் வாசிக்கிறோம். நாமும் நம் ஜீவியத்தைத் தேவனுக்கு முன்பாக மாசில்லாததாகக் காக்க வேண்டும்.

ஊனமில்லாதது: நாம் அறிந்த சத்தியத்திற்கு ஏற்றபடி ஜீவிக்காவிட்டால் நம்மில் ஊனம் உண்டாகிறது. எனவே ஊனமில்லாத தன்மை என்பது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஜீவியத்தைப் போல மனிதனுக்கு முன்பாகவுங்கூட ஒரு குற்றமில்லாததும் கண்டிக்கப்படாததுமான ஜீவியத்தைக் குறிக்கிறது. (கொலோ 1 : 21)

நுகத்தடிக்குட்படாதது: கர்த்தராகிய இயேசு ஒருபோதும் பாவநுகத்துக்குட்படவில்லை. நாம் பாவம், மாம்சம், உலகம் ஆகியவற்றின் அடிமைத்தனத்தின் கீழ் வராத ஒரு ஜீவியத்தை இது காண்பிக்கிறது. (கலா. 5 : 1)

**3.** தீட்டுக் கழிக்கும் ஜலம் எவ்வாறு உண்டாக்கப்படுகிறது? அது யாருக்காக காத்து வைக்கப்பட வேண்டும்? யார் மேல் தெளிக்கப்பட வேண்டும்? அதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?

தீட்டுக்கழிக்கும் ஜலம்:

சிவப்பான கிடாரியுடன் சேர்த்து கேதுருக்கட்டை, ஈசோப்பு, சிவப்பு நூல் ஆகியவை நெருப்பில் எரிக்கப்படுகிறதை. கேதுருக் கட்டை சரீரத்தையும், ஈசோப்பு ஆத்துமாவையும், சிவப்பு நூல் ஆவியையும் காட்டுகின்றன. பின்பு அதனுடைய சாம்பல் சுத்தமான ஒரு இடத்திலே கொட்டி வைக்கப்பட்டு அந்த சாம்பலில் கொஞ்சம் எடுத்து, ஒரு பாத்திரத்தில் போட்டு, அதன் மேல் ஊற்று ஜலம் வார்த்து தீட்டுக் கழிக்கும் ஜலம் உண்டாக்கப்படுகிறது. (எண். 19 : 1 - 9, 17, 18) தீட்டுக் கழிக்கும் ஜலம் இஸ்ரவேல் புத்திரரின் சபைக்காகக் காத்து வைக்கப்பட வேண்டும். அது பாவத்தை பரிகரிக்கும். (எண் 19 : 9)

இந்த தீட்டுக்கழிக்கும் ஜலம் இஸ்ரவேலரின் மத்தியில் தீட்டுப்பட்ட ஒருவனைச் சுத்திகரிப்பதற்கு அவன் மேல் தெளிக்கப்பட வேண்டும். அப்பொழுது அவன் சுத்தமாயிருப்பான்.

இது அறிக்கையிடுதலைக் காட்டுகிறது. இவ்விதம் அவன் தன்னைச் சுத்திகரித்துக் கொள்ளாதிருந்தால் சபையில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான். (எண். 19 : 20)

## V. *விரிவான விடையளி* : (10 Marks)

**1.** சிவப்பு கிடாரி எத்தன்மை உடையதாக இருக்க வேண்டும் அது ஏன் கொல்லப்பட வேண்டும்? சிவப்புக் கிடாரியில் சுட்டெரிக்கப்பட வேண்டிய பகுதிகள் யாவை? அதன் ஆவிக்குரிய கருத்து என்ன?

இரத்தத்தினால் உண்டாகும் பரிசுத்தமாகுதலுக்கான ஒரு மாதிரியை நாம் இங்கு காண்கிறோம். சிவப்புக் கிடாரியானது, நம்முடைய இரட்சிப்புக்காக மட்டுமல்லாமல், நம்முடைய பரிசுத்தமாகுதலுக்காகவும் ஒப்புக்கொடுக்கப்பட்ட கர்த்தராகிய இயேசுவுக்கு அடையாளமாயிருக்கிறது. முழு இஸ்ரவேல் சபைக்காகவும், பழுதற்றதும், ஊனமற்றதும் ஒரு போதும் நுகத்தடிக்குட்படாததுமான ஒரு சிவப்புக் கிடாரி கொண்டு வரப்பட்டு, ஆசாரியனிடத்தில் ஒப்படைக்கப்பட்டது. அவன்

அதைப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டு போய், அதைக் கொன்று அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, அதை ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதிராக ஏழுதரம் தெளித்தான். அதன் பின்பு, அந்த முழுக்கிடாரியும் எரிக்கப்பட்டது.

கிடாரியின் தன்மைகள் : (எண். 19 : 2)
பழுதற்றது: குற்றமில்லாத தன்மை. கர்த்தராகிய இயேசு பாவம் இல்லாதவராயிருந்தார். (1 யோவான் 3 : 5). அவர் நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார் என்று எபி. 9 : 14 - இல் நாம் வாசிக்கிறோம். நாமும் நம் ஜீவியத்தைத் தேவனுக்கு முன்பாக மாசில்லாததாகக் காக்க வேண்டும்.

ஊனமில்லாதது: நாம் அறிந்த சத்தியத்திற்கு ஏற்றபடி ஜீவிக்காவிட்டால் நம்மில் ஊனம் உண்டாகிறது. எனவே ஊனமில்லாத தன்மை என்பது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஜீவியத்தைப் போல மனிதனுக்கு முன்பாகவுங்கூட ஒரு குற்றமில்லாததும் கண்டிக்கப்படாததுமான ஜீவியத்தைக் குறிக்கிறது. (கொலோ 1 : 21)

நுகத்தடிக்குட்படாதது: கர்த்தராகிய இயேசு ஒருபோதும் பாவநுகத்துக்குட்படவில்லை. நாம் பாவம், மாம்சம், உலகம் ஆகியவற்றின் அடிமைத்தனத்தின்கீழ் வராத ஒரு ஜீவியத்தை இது காண்பிக்கிறது.. (கலா. 5 : 1)

அதன் இரத்தத்தைத் தெளித்தல்: (எண். 19 : 4)
கிடாரி கொல்லப்பட்டு, அதனுடைய இரத்தம் ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதிராக ஏழுதரம் தெளிக்கப்பட்டது. இது சபை தன் வேறுபாட்டின் ஜீவியத்தைப் பாதுகாத்துக் கொள்வதை வெளிப்படுத்துகிறது.

அதில் சுட்டெரிக்கப்பட வேண்டிய பகுதிகள் (எண் 19 : 5)
கிடாரியின் தோல், மாம்சம், இரத்தம், சாணி போன்றவை சுட்டெரிக்கப்பட வேண்டும். கர்த்தராகிய இயேசுவின் பலியின் மூலமாக விழுந்துபோன மனிதனில் காணப்படும் கீழ்க்காணும் சுபாவங்கள் பரிகரிக்கப்பட வேண்டும்.
அவற்றின் ஆவிக்குரிய அர்த்தங்கள் :
தோல் : ஜாதி, பாஷை போன்ற வித்தியாசங்கள்.
மாம்சம் : ஆவி, ஆத்துமா, சரீரத்தில் வெளிப்படும் மாம்ச சுபாவங்கள்
இரத்தம் : ஜீவனை இரட்சிக்க விரும்புதல்
சாணி : அழிந்து போகிற போஜனத்திற்காக கிரியை நடப்பித்தல். (யோவான் 6:27)

தீட்டுக்கழிக்கும் ஜலம் :
சிவப்பான கிடாரியுடன் சேர்த்து கேதுருக்கட்டை, ஈசோப்பு, சிவப்பு நூல் ஆகியவை நெருப்பில் எரிக்கப்படுகின்றன. கேதுருக் கட்டை சரீரத்தையும், ஈசோப்பு ஆத்துமாவையும், சிவப்பு நூல் ஆவியையும் காட்டுகின்றன. பின்பு அதனுடைய சாம்பல் சுத்தமான ஒரு இடத்திலே கொட்டி வைக்கப்பட்டது. சாம்பலில் கொஞ்சம் எடுத்து, ஒரு பாத்திரத்தில் போட்டு, அதன் மேல் ஊற்று ஜலம் வார்த்து தீட்டுக் கழிக்கும் ஜலம் உண்டாக்கப்படுகிறது. (எண். 19 : 1 - 9 , 17, 18)
தீட்டுக் கழிக்கும் ஜலம் இஸ்ரவேல் புத்திரரின் சபைக்காக் காத்து வைக்கப்பட வேண்டும். அது பாவத்தை பரிகரிக்கும். (எண் 19 : 9)
இந்த தீட்டுக்கழிக்கும் ஜலம் தீட்டுப்பட்ட ஒருவனைச் சுத்திகரிபதற்கு அவன் மேல் தெளிக்கப்பட்டது. அவன் மேல் இந்த ஜலம் தெளிக்கப்பட்டபோது அவன் சுத்தமானான். இது அறிக்கையிடுதலைக் காட்டுகிறது. இவ்விதம் அவன் தன்னைச் சுத்திகரித்துக் கொள்ளாதிருந்தால் சபையில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான். (எண். 19 : 20)

**VI. *போதனை :*** (2 Marks)

நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்பத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவங்களற கழுவப்படும் நாம், முற்றிலும் பரிசுத்தமாக்கப்படும் படியாக, பாவங்களிலிருந்தும் பாவிகளிலிருந்தும் நம்மை நாமே வேறுபிரித்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நாம் தீட்டுப்பட்டுப் போவோம். நம்மைப் பரிசுத்தமாக்க கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் நமக்காகச் சிந்தப்பட்டது. அவருடைய விலையேறப் பெற்ற இரத்தத்தினால் நாம் பூரண பரிசுத்தமாகுதலுக்குக் கடந்து போக வேண்டும்.

**************

வகுப்பு : 9

பாடம்-16

# திரித்துவ தேவன் (பகுதி - I)

**I** *மனப்பாடவசனம்:* (2 Marks)

I யோவான் 5 : 7

பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்;

யோவான் 17 : 21

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::*

1. திரித்துவ தேவனின் ஆள்தத்துவங்களை எழுது.
   பிதாவாகிய தேவன்
   குமாரனாகிய தேவன்
   பரிசுத்தாவியானவராகிய தேவன் (பாடத்திட்டம்).
2. சபையின் முதுகெலும்பு எது?
   திரித்துவ தேவன் பேரிலுள்ள விசுவாசம் (பாடத்திட்டம்).
3. எபிரெய மொழியில் தேவனைக் குறிப்பதற்காக உபயோகிக்கப்பட்டிருக்கும் பன்மைச் சொல் என்ன?
   எலோஹிம்
4. இயேசு ஞானஸ்நானம் பெற்றுக் கறையேறினவுடனே வானத்திலிருந்து உண்டான சத்தம் என்ன?
   ‘நீர் என்னுடைய நேச குமாரன்’ (லூக். 3 : 21, 22).
5. பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் யார்?
   பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி ( 1 யோவான் 5 : 7).

**III** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

1. திரித்துவ தேவனின் மூன்று ஆள்தத்துவங்களின் தன்மைகள் யாவை?
   அவர்கள் ஒருவருக்கொருவர் சமமானவர்கள். நித்தியமாய் நிலைத்திருப்பவர்கள் (பாடத்திட்டம்).
2. தேவன் திரித்துவர் என்பதை தெளிவாக வெளிப்படுத்தும் வார்த்தைகள் யாவை?
   ‘நமது சாயல் ’ (ஆதி. 1 : 26), ‘நம்மில் ஒருவரைப் போல் ஆனான் ’ (ஆதி. 3 : 22) ‘நாம் இறங்கிப்போய’ (ஆதி. 11 : 7)
3. வேதாகமம் மனுஷனை எத்தனை பாகங்களாகப் வெளிப்படுத்திக் காட்டுகிறது? அவற்றை எழுதுக.
   வேதாகமம் மனுஷனை 3 பாகங்களாக வெளிப்படுத்திக் காட்டுகிறது. அவையாவன:

   ஆவி, ஆத்துமா, சரீரம் ( I தெச. 5 : 23). இம்மூன்று பகுதிகளும் பிரிந்து தனித்தனியே கிரியை செய்யமுடியாது.
4. சிருஷ்டிப்பில் திரித்துவம் பற்றி எழுதுக.
   “ஆதியிலே வார்த்தை இருந்தது.... அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று” (யோவான் 1 : 1-3). ‘தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்’ (ஆதி. 1 : 2). இங்கு, பிதாவாகிய தேவன், வார்த்தையாகிய குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்ற மூன்று ஆள்தத்துவங்களையும் நாம் ஒருமிக்கக் காண்கிறோம்.
5. திரித்துவ தேவனுக்கும், திரித்துவ மனிதனுக்கும் உள்ள வித்தியாசத்தை எழுது.
   திரித்துவ தேவன் - பிதா, குமாரன், பரிசுத்தாவியானவர். தனித்தனியாகக் கிரியை செய்யக் கூடியவர்களாயிருக்கிறார்கள்.

திரித்துவ மனிதன் - ஆவி, ஆத்துமா, சரீரம். மூன்று பகுதிகளும் பிரிந்து தனித்தனியே கிரியை செய்யமுடியாது (பாடத்திட்டம்).

**6.** பழைய ஏற்பாட்டில் திரித்துவம் - குறிப்பு வரைக.

"நான் ஆதிமுதற்கொண்டு அந்தரங்கத்தில் பேசவில்லை; அது உண்டான காலந்துவக்கி அங்கே நான் இருந்தேன்; இப்பொழுதோ கர்த்தராகிய ஆண்டவரும், அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார்" (ஏசாயா 48 : 16). இவ்வசனத்தில் திரித்துவ தேவனின் மூன்று ஆள்தத்துவங்களையும் நாம் காண்கிறோம் (பாடத்திட்டம்).

<u>*சுருக்கமானவிடையளி:*</u> (4/6 Marks)

**1.** 'எலோஹிம' - குறிப்பு வரைக.

மூலபாஷையாகிய எபிரேய மொழியில் தேவனைக் குறிப்பதற்காக உபயோகிக்கப்பட்டிருக்கும், 'எலோஹிம்' (ELOHIM) என்னும் பெயர் பன்மைச் சொல்லாகும். அது, தேவன் திரித்துவர் என்பதை வெளிப்படுத்துகிறது - 'நமது சாயல் ', 'நம்மில் ஒருவரைப் போல் ஆனான்', 'நாம் இறங்கிப்போய்' போன்ற வார்த்தைகளிலிருந்து இது தெளிவாகிறது (ஆதி. 1 : 26, 3 : 22, 11 : 7).

**V** <u>*விரிவான விடையளி*</u> : (10 Marks)

**1.** புதிய ஏற்பாட்டில் திரித்துவம் பற்றி வசன ஆதாரங்களுடன் எழுது (**Any 5 points).**

(i) கர்த்தராகிய இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, 'பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல் அவர்மேல் இறங்கினார்'. 'நீர் என்னுடைய நேசகுமாரன்' என்ற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று (லூக்கா 3 : 21, 22).

(ii) பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானங் கொடுக்கும்படி கர்த்தராகிய இயேசு தம் சீஷர்களுக்குக் கட்டளையிட்டார் (மத். 28 : 19).

(iii) "நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே [பரிசுத்த ஆவி] . பிதாவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் [குமாரன் ] மூலமாய்ப் பெற்றிருக்கிறோம் " (எபே. 2 : 18 ).

(iv) 'பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே' ( 1 யோவான் 5 : 7)

(v) "இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்..... அவர் மேல் நீங்களும் ஆவியினாலே [பரிசுத்த ஆவி] தேவனுடைய [பிதா] வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்"( எபே. 2 : 20 - 22).

(vi) "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே..... சாட்சி கொடுக்கிறார். நாம்...... தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தருமாமே" (ரோமர் 8 : 16, 17).

(vii) கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக (IIகொரி. 13 : 14)

(viii) "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது"( I பேதுரு 1 : 2).

(ix) "நீங்களோ...... பரிசுத்தாவிக்குள் ஜெபம்பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு ..... கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்" (யூதா 20, 21).

**************

வகுப்பு : 9

பாடம்-17

# திரித்துவ தேவன் (பகுதி - II)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

2 கொரிந்தியர் 13 : 14

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி:*

1. எந்தப் பாவம் இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை என்று இயேசு கூறினார்?
   பரிசுத்த ஆவிக்கு விரோதமாக பேசுவது (மத். 12 : 32).
2. சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துபவர் யார்?
   சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் (யோவான் 16 : 13).
3. திரித்துவ தேவனில் தேற்றரவாளன் யார்?
   பரிசுத்த ஆவியானவர் (யோவான் 14 : 16, 17).
4. யாருடைய வாக்குத்தத்தின்படி பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டார்?
   பிதா அருளிய வாக்குத்தத்தின்படி (அப். 2 : 33).
5. மனிதன், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றவனாய்க் காக்கப்பட என்ன செய்ய வேண்டும்?
   மனிதன், தன் ஆவி ஆத்துமா சரீரத்தில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டிருக்க வேண்டும் (பாடத்திட்டம்).
6. எல்லா நம்மைகளுக்கும் ஊற்றாயிருப்பவர் யார்?
   பிதா (யாக். 1 : 17).
7. சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேரானவர் யார்?
   குமாரன் (கொலோ. 1 : 15).

**III** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

1. மனிதனைக் குறித்து, அன்பின் பூரணரான தேவனின் நோக்கம் என்ன?
   மனுஷன் அன்பில் பரிசுத்தமுள்ளவனும், குற்றமில்லாதவனுமாயிருக்க வேண்டுமென்பதே. (எபே. 1 : 4)

**IV** *சுருக்கமானவிடையளி:* (4/6 Marks)

1. பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் ஒரே ஆள்தத்துவம் அல்ல என்பதை நிரூபி.
   (i) 'நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்வதே' என்னுடைய போஜனமாயிருக்கிறது.(யோவான் 4 :34). இதில், 'நான்' என்பதும் 'என்னை அனுப்பினவர்' என்பதும் ஒரே ஆள்தத்துவமாயிருக்க முடியாது.
   (ii) கர்த்தராகிய இயேசுவே பிதாவாக இருந்தால் 'உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால்' (யோவான் 17:24) என்று கர்த்தராகிய இயேசு கூறியது அர்த்தமற்றதாகிவிடும்.
   (iii) குமாரனாகிய இயேசுவும் பிதாவும் இரு ஆள்தத்துவங்களாயிராவிட்டால், 'என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்'(மத்தேயு 27:46) என்று கர்த்தராகிய இயேசு சத்தமிட்டது அர்த்தமற்றதாகிவிடும்.
2. குமாரனும் பரிசுத்த ஆவியும் ஒரே ஆள்தத்துவம் அல்ல என்பதை நிரூபி.
   (i) "நான் [கர்த்தராகிய இயேசு] போகாதிருந்தால் தேற்றரவாளன் [பரிசுத்த ஆவியானவர்] உங்களிடத்தில் வரார்;" (யோவான் 16 : 7).
   (ii) ஆவியானவர் புறாவைப் போல் அவர் (இயேசு) மேல் இறங்கினார்(மத்3:16).
   (iii) "எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு

விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை'' (மத். 12 : 32).

(iv) 'சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்' என கர்த்தராகிய இயேசு கூறினார் (யோவான்16:13).

**3.** பிதாவும் பரிசுத்த ஆவியும் ஒரே ஆள்தத்துவம் அல்ல என்பதை நிரூபி.

(i) ''சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் பிதா உங்களுக்குத் தந்தருளுவார் '' (யோவான் 14 : 16, 17).

(ii) 'கர்த்தராகிய ஆண்டவரும் [பிதா], அவருடைய ஆவியும் ஏ்னனை அனுப்புகிறார்' (ஏசாயா 48 : 16).

(iii) 'பிதா அருளிய வாக்குத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று ...... இதைப் பொழிந்தருளினார்' (அப். 2 : 33).

**4.** தேவன் திரித்துவராயிருக்கக் காரணம் என்ன?

மனுஷன் அன்பில் பரிசுத்தமுள்ளவனும் குற்றமில்லாதவனுமாயிருக்க வேண்டுமென்பது அன்பின் பூரணரான தேவனின் நோக்கமாகும் (எபே. 1 : 4). இந்த நோக்கத்தை நிறைவேற்றும்படி தேவன் திரித்துவத்தின் மூலமாக – அன்பின பிதாவாக, அன்பின் குமாரனாக, அன்பின் பரிசுத்த ஆவியானவராக இ,ருந்து தம் அன்பை வெளிப்படுத்தினார்.

பிதா - மனுஷனைச் சிருஷ்டிக்கும் முன்னரே தேவன் அவனுக்குத் தேவையான சகலத்தையும் உண்டாக்கினார். அவர் எல்லா நன்மைகளுக்கும் ஊற்றாயிருக்கிறார்.(யாக்.1:17).

குமாரன் - பிதாவுக்குச் சமமாயிருந்தும் அவர் மனுஷன் நிமித்தமாய் தம் அன்பை வெளிப்படுத்தச் சித்தங்கொண்டு சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறானார் (கொலோ. 1 : 15). தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து கீழ்ப்படிந்தார்.

பரிசுத்தாவியானவர் - நம்மேலுள்ள தம்முடைய அன்பினால் அவர் ஒரு ஆசாரியனைப் போலிருந்து, தேவனுக்குப் பிரியமான பலியாக நம்மை மாற்றுகிறார் (ரோமர் 15 : 15).

**V** *<u>விரிவான விடையளி</u>* : (10 Marks)

**1.** பிதா, குமாரன், பரிசுத்தாவியானவர் - இவர்கள் ஒரே ஆள்தத்துவம் அல்ல என்பதை வசன ஆதாரங்களுடன் நிரூபி.

<u>பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் ஒரே ஆள்தத்துவம் அல்ல:</u>

(i) 'நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்வதே' என்னுடைய போஜனமாயிருக்கிறது.(யோவான் 4 :34). இதில், 'நான்' என்பதும் 'என்னை அனுப்பினவர்' என்பதும் ஒரே ஆள்தத்துவமாயிருக்க முடியாது.

(ii) கர்த்தராகிய இயேசுவே பிதாவாக இருந்தால் 'உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால்' (யோவான் 17:24) என்று கர்த்தராகிய இயேசு கூறியது அர்த்தமற்றதாகிவிடும்.

(iii) குமாரனாகிய இயேசுவும் பிதாவும் இரு ஆள்தத்துவங்களாயிராவிட்டால், 'என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்'(மத்தேயு 27:46) என்று கர்த்தராகிய இயேசு சத்தமிட்டது அர்த்தமற்றதாகிவிடும்.

<u>குமாரனும் பரிசுத்த ஆவியும் ஒரே ஆள்தத்துவம் அல்ல:</u>

(i) ''நான் [கர்த்தராகிய இயேசு] போகாதிருந்தால் தேற்றரவாளன் [பரிசுத்த ஆவியானவர்] உங்களிடத்தில் வரார்;'' (யோவான் 16 : 7).

(ii) ஆவியானவர் புறாவைப் போல் அவர் (இயேசு) மேல் இறங்கினார்(மத்3:16).

(iii) ''எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை'' (மத். 12 : 32).

(iv) 'சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்' என கர்த்தராகிய இயேசு கூறினார் (யோவான்16:13).

<u>பிதாவும் பரிசுத்த ஆவியும் ஒரே ஆள்தத்துவம் அல்ல:</u>

(i) "சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் பிதா உங்களுக்குத் தந்தருளுவார் " (யோவான் 14 : 16, 17).

(ii) 'கர்த்தராகிய ஆண்டவரும் [பிதா], அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார்' (ஏசாயா 48 : 16).

(iii) 'பிதா அருளிய வாக்குத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று ...... இதைப் பொழிந்தருளினார்' (அப். 2 : 33).

தேவன் திரித்துவர் என்பதை நிரூபிக்க இவ்வாறு இன்னும் பல வசனங்களை ஆதாரமாகக் கூறலாம்.

**VI** *<u>போதனை:</u>* (2 Marks)

மனுஷன் தமக்கு முன்பாக அன்பில் பரிசுத்தமுள்ளவனும் குற்றமில்லாதவனுமாயிருப்பதற்காக தேவன் உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்து இயேசுவுக்குள் அவனைத் தெரிந்துகொண்டார். எனவே மனிதன் தன் ஆவி ஆத்துமா சரீரத்தில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டு, கர்த்தராகிய இயேசு வரும்போது குற்றமற்றவனாய்க் காக்கப்பட்டிருக்க வேண்டும்.

*************

வகுப்பு : 9

பாடம்-18

# கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியம்

**I** *மனப்பாடவசனம்:* (2 Marks)
எபேசியர் 5 : 25 - 27

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூறுங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து,
தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்,
கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.ணி

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::*

1. இரகசியங்கள் என்றால் என்ன?
   தேவனுடைய மறைக்கப்பட்ட சத்தியங்களே இரகசியங்கள் ஆகும். (பாடத்திட்டம்)

2. வேதாகமத்தில் எத்தனை இரகசியங்கள் உள்ளன?
   வேதாகமத்தில் பதின்மூன்று இரகசியங்கள் உள்ளன (பாடத்திட்டம்),

3. தேவனுடைய இரகசியங்களை வெளிப்படுத்துகிறவர் யார்?
   பரிசுத்த ஆவியானவர் (எபேசி. 3 : 6)

4. பெரிய இரகசியம் எது?
   கிறிஸ்துவையும், சபையும் பற்றிய இரகசியம் (எபே. 5 : 31, 32).

5. எதன் மூலம் சபையானது மிகுந்த கனிகளைக் கொடுக்கக்கூடும்?
   கிறிஸ்துவில் நிலைத்திருக்கிற ஜீவியத்தின் மூலம் (யோவான் 15 : 5).

**III** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

1. கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்தின் அம்சங்கள் எத்தனை? அவை யாவை?
   கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்திற்கு மூன்று அமசங்கள் உள்ளன. அவையாவன:
   1. மனுஷன் தன் தகப்பனையும் தாயையும் விடுவது
   2. மனுஷன் தன் மனைவியுடன் இசைந்திருப்பது
   3. இருவரும் ஒரே மாம்சமாயிருப்பது (எபே. 5 : 31,32).

2. கிறிஸ்துவும் சபையும் ஒருவரோடொருவர் எவற்றின் மூலமாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள்?
   ஒரு புருஷனும் அவன் மனைவியும் அன்பு, கீழ்படிதல் இவற்றின் மூலமாக ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருக்கிறதுபோல, கிறிஸ்துவும் சபையும் ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருக்கிறார்கள் (பாடத்திட்டம்).

3. இயேசு சபையில் அன்புகூர்ந்து என்ன செய்தார்?
   பிதாவின் மடியையும் சிங்காசனத்தையும் பரலோகத்திலுள்ள சகல மகிமையையும் கனத்தையும் விட்டு, மனித சாயலில் பூமிக்கு வந்தார் (பாடத்திட்டம்).

4. இயேசு தம்மைத்தாமே எதற்காக ஒப்புக்கொடுத்தார்?

“கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்” (எபே. 5 : 25 - 27).

5. ஆதாம், ஏவாளை ‘மனுஷி’ என்று ஏன் சொன்னான்?
“இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள்” என்று சொன்னான் (ஆதி. 2 : 23).

6. நாம் சகல சிற்றின்பங்களையும் ஏன் தியாகம் செய்ய வேண்டும்?
கிறிஸ்து பரலோகத்தின் சகல மகிமைகளையும் விட்டு தம்மைத்தாமே சபைக்காக ஒப்புக்கொடுத்தது போல, நாமும் அவரில் அன்புகூரும்படியாகவும், அவருடைய பெரிதான அன்புக்குப் பாத்திரராகக் காணப்படும்படியாகவும், நம்முடைய சகல சிற்றின்பங்களையும் தியாகம் செய்யவேண்டும் (போதனை).

7. கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையே காணப்படும் ஐக்கியம் எப்படிப்பட்டது?
ஒரு மனிதன் தன் மனைவியை நேசித்து அவளைப் போஷித்துக் காப்பாற்றுகிறான் (எபே. 5 : 25, 29). அவன் தன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; மனைவி தன் புருஷனுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கிறாள் (எபே. 5 : 23, 24). எனவே, அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஐக்கியம் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையே காணப்படுகிறது.

## IV *சுருக்கமான விடையளி:* (4/6 Marks)

1. வேதாகமத்தில் உள்ள இரகசியங்கள் யாருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன? வசன ஆதாரம் தருக.
தேவனுடைய இரகசியங்கள் பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன (எபே. 3 : 6)
தங்களுக்குண்டான எல்லாவற்றையும் விட்டு விட்டு தம்மைப் பின்பற்றின சீஷர்களிடம் , கர்த்தராகிய இயேசு பரலோக இராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படிக்கு உங்களுக்கு அருளப்பட்டது எனக் கூறினார். (மத். 13 : 11)
தேவ இரகசியங்கள் உண்மையுள்ள பிரதிஷ்டையுள்ள் தேவ ஊழியருக்கு வெளிப்படுத்தப்படுகின்றன. (மத். 16 : 17 - 19)

2. ‘மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விடுவது’ - இதனுடன் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் உள்ள சம்பந்தத்தை ஒப்பிட்டு விளக்குக.
ஒரு மனிதன் தன் மனைவியை நேசித்து, தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பது போல (ஆதி. 2 : 24), கர்த்தராகிய இயேசுவும் சபையில் அன்பு கூர்ந்தபடியினால், தம்முடைய பிதாவின் மடியையும் சிங்காசனத்தையும் பரலோகத்திலுள்ள சகல மகிமையையும் கனத்தையும் விட்டு, மனித சாயலில் பூமிக்கு வந்தார். அதன் பின்னர் “கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்” (எபே. 5 : 25 - 27).

3. ‘தன் மனைவியுடன் இசைந்திருப்பது’ - இதனுடன் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் உள்ள சம்பந்தத்தை ஒப்பிட்டு விளக்குக.
ஒரு புருஷனும் அவன் மனைவியும் அன்பு, கீழ்படிதல் இவற்றின் மூலமாக ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருக்கிறதுபோல, கிறிஸ்துவும் சபையும் ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவில் நிலைத்திருக்கிற இந்த ஜீவியத்தின் மூலம், திராட்சச்செடியில் நிலைத்திருக்கிற கொடியைப்போல, சபையானது மிகுந்த கனிகளைக் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது (யோவான் 15 : 5, 7), கர்த்தரோடு இசைந்திருக்கிறவன், அவருடனே ஒரே ஆவியாயிருந்து (1 கொரி. 6 : 17), தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி அவருடனே விவாகம் செய்யப்பட்டிருக்கிறான் (ரோமர் 7 : 4).

4. ‘இருவரும் ஒரே மாம்சமாயிருப்பது’ - இதனுடன் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் உள்ள சம்பந்தத்தை ஒப்பிட்டு விளக்குக.
ஆதாம் ஏவாளைப் பார்த்து, “இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி

என்னப்படுவாள்'' (ஆதி. 2 : 23) என்று கூறினான். ஒரு மனிதன் தன் மனைவியை நேசித்து அவளைப் போஷித்துக் காப்பாற்றுகிறான் (எபே. 5 : 25, 29). ஆ வன் தன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; மனைவி தன் புருஷனுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கிறாள் (எபே. 5 : 23, 24). எனவே அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஐக்கியம் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையே காணப்படுகிறது.

**V** *__விரிவான விடையளி__* : (10 Marks)

**1.** கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்தின் மூன்று அம்சங்களை எழுதி விளக்குக.

கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்திற்கு மூன்று அமசங்கள் உள்ளன. அவையாவன:

1. மனுஷன் தன் தகப்பனையும் தாயையும் விடுவது
2. மனுஷன் தன் மனைவியுடன் இசைந்திருப்பது
3. இருவரும் ஒரே மாம்சமாயிருப்பது (எபே. 5 : 31,32).

1. மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விடுவது:

ஒரு மனிதன் தன் மனைவியை நேசித்து, தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பது போல (ஆதி. 2 : 24), கர்த்தராகிய இயேசுவும் சபையில் அன்பு கூர்ந்தபடியினால், தம்முடைய பிதாவின் மடியையும் சிங்காசனத்தையும் பரலோகத்திலுள்ள சகல மகிமையையும் கனத்தையும் விட்டு, மனித சாயலில் பூமிக்கு வந்தார். அதன் பின்னர் "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்'' (எபே. 5 : 25 - 27).

2. தன் மனைவியுடன் இசைந்திருப்பது:

ஒரு புருஷனும் அவன் மனைவியும் அன்பு, கீழ்படிதல் இவற்றின் மூலமாக ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருக்கிறதுபோல, கிறிஸ்துவும் சபையும் ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவில் நிலைத்திருக்கிற இந்த ஜீவியத்தின் மூலம், திராட்சச்செடியில் நிலைத்திருக்கிற கொடியைப்போல, சபையானது மிகுந்த கனிகளைக் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது (யோவான் 15 : 5, 7), கர்த்தரோடு இசைந்திருக்கிறவன், அவருடனே ஒரே ஆவியாயிருந்து (1 கொரி. 6 : 17), தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி அவருடனே விவாகம் செய்யப்பட்டிருக்கிறான் (ரோமர் 7 : 4).

3. இருவரும் ஒரே மாம்சமாயிருப்பது:

ஆதாம் ஏவாளைப் பார்த்து, "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள்'' (ஆதி. 2 : 23) என்று கூறினான். ஒரு மனிதன் தன் மனைவியை நேசித்து அவளைப் போஷித்துக் காப்பாற்றுகிறான் (எபே. 5 : 25, 29). ஆ வன் தன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; மனைவி தன் புருஷனுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கிறாள் (எபே. 5 : 23, 24). எனவே அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஐக்கியம் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையே காணப்படுகிறது.

**VI** *__போதனை:__* (2 Marks)

கிறிஸ்து பரலோகத்தின் சகல மகிமைகளையும் விட்டு தம்மைத்தாமே சபைக்காக ஒப்புக்கொடுத்ததுபோல, நாமும் அவரில் அன்புகூரும்படியாகவும், அவருடைய பெரிதான அன்புக்கு பாத்திரராகக் காணப்படும்படியாகவும், நம்முடைய சகல சிற்றின்பங்களையும் தியாகம் செய்யவேண்டும்.

*************

# தேவனுடைய வாசஸ்தலங்கள்
## (பகுதி 1)

**I** *மனப்பாடவசனம்:* (2 Marks)

ஏசாயா 57 : 15

நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்தஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிற்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்."

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி*::

1. தேவன் தெரிந்துகொண்ட வாசஸ்தலம் எது?
   சீயோன் (சங். 132 : 13, 14).
2. பரலோகத்திலே மிகச் சிறந்ததும், உன்னதமானதுமான வாசஸ்தலம் எது?
   சீயோன் (பாடத்திட்டம்).
3. தேவனுடைய வாசஸ்தலம் யாரிடத்தில் இருக்கிறது?
   மனுஷர்களிடத்திலே (வெளி. 21:3)
4. தேவன் எப்பொழுதும் எதை வாஞ்சிக்கிறார்?
   தேவன் எப்பொழுதும் மனுஷரோடு வாசம்பண்ணுவதையே வாஞ்சிக்கிறார் (வெளி. 21:3) (பாடத்திட்டம்).
5. தேவன், ஏதேன் தோட்டத்தில் எதுவரை உலாவிக்கொண்டிருந்தார்?
   ஆதாமும், ஏவாளும் பாவத்தில் விழும் வரை (ஆதி. 3 : 8).
6. அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக என்று தேவன் யாரிடம் கூறினார்?
   மோசேயிடம் (யாத். 25 : 8).
7. ஆசரிப்புக்கூடாரம் எதற்கு நிழலாட்டமாயிருக்கிறது?
   பரலோகத்திற்கு (பாடத்திட்டம்)
8. ஆசரிப்புக்கூடாரத்தில் தேவன் எங்கே வாசம்பண்ணுகிறார்?
   மகா பரிசுத்த ஸ்தலத்தில் (பாடத்திட்டம்).
9. இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசித்தபோது ஆசரிப்புக்கூடாரம் யாரால், எங்கே நிறுவப்பட்டது?
   யோசுவாவினால், சீலோவிலே நிறுவப்பட்டது (யோசுவா 18 : 1)
10. சாலொமோனின் ஆலயம் எங்கே கட்டப்பட்டது?
    மோரியா மலைமீது (2 நாளா. 3 : 1).
11. சாலொமோனின் ஆலயம் எப்பொழுது, யாரால் இடித்து நாசமாக்கப்பட்டது?
    கி.மு. 588 - ல், பாபிலோனிய இராஜாவினால் இடித்து நாசம் செய்யப்பட்டது (பாடத்திட்டம்).
12. செருபாபேலின் ஆலயம் எந்த இராஜாவின் காலத்தில் எந்த ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது?
    கோரேஸ் இராஜாவின் காலத்தில், கி.மு. 515 - ல் கட்டிமுடிக்கப்பட்டது (பாடத்திட்டம்).
13. அழிந்துபோன செருபாபேலின் ஆலயம் மீண்டும் யாரால் கட்டப்பட்டது? அதைக் கட்டிமுடிக்க எத்தனை வருடங்கள் ஆனது?
    ஏரோதினால் கட்டப்பட்டது. 46 வருடங்கள் ஆனது. (யோவான் 2 : 20) (பாடத்திட்டம்)
14. இயேசு பூமியில் இருந்த நாட்களில் இருந்த ஆலயம் எது?
    ஏரோதின் தேவாலயம் (பாடத்திட்டம்)
15. ஏரோதின் ஆலயம் எப்போது, யாருடைய நாட்களில், யாரால் தரையோடு தரையாய் உழப்பட்டது?

கி.பி. 70-ல், தீத்து இராயனுடைய நாட்களில், ரோமரால் தரையோடு தரையாய் உழப்பட்டது (மத். 24 : 2) (பாடத்திட்டம்).

**III** *<u>சுருக்கமான விடையளி:</u>* (4/6 Marks)

**1.** தேவன் எப்பொழுதும் மனுஷரோடு வாசம்பண்ணுவதையே வாஞ்சிக்கிறார் என்பதைக் காட்டும் வசனங்களை வசன ஆதாரத்துடன் எழுது.

கர்த்தர் பரலோகத்திலே உன்னதமானதும், மகா பரிசுத்தமானதும் மிகச் சிறந்ததுமான இடமாகிய சீயோனைத் தமது வாசஸ்தலமாகத் தெரிந்தெடுத்து, அங்கே வாசம்பண்ணுகிறார் என்று சங்கீதம் 132 : 13, 14 - இல் நாம் பார்க்கிறோம். "இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்" என்று நாம் வாசிக்கிறோம் (வெளி.21 : 3). தேவன் எப்பொழுதும் மனுஷரோடு வாசம்பண்ணுவதையே வாஞ்சிக்கிறார் என்பதை இந்த வசனங்கள் காட்டுகின்றன.

**2.** பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலம் - ஏதேன் தோட்டம்- விளக்குக.

ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழும் வரை, தேவன் அவர்களோடு ஏதேன் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார் (ஆதி. 3 :8). மனிதன் நன்மை தீமை அறியும் விருட்சத்தின் கனியையும் புசிக்கக் கூடியவனாய் தேவனைப் போலவே இருக்கும் நிலையை அடையும் வரையிலும், அவன் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து தேவனோடுள்ள இந்த ஐக்கியம், நெருங்கிய தொடர்பு இவற்றால் ஜீவனில் வளர வேண்டும் என தேவன் விரும்பினார். ஆனால் மனிதன் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் குறிக்கப்பட்டிருந்த வேளைக்கு முன்பாக நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்து, தன்னைக்குறித்து தேவன் கொண்டிருந்த அழகான திட்டத்தைப் பாழாக்கினான். இருப்பினும், தேவன் தம்முடைய அளவிடமுடியாத அன்பினாலும் இரக்கத்தினாலும் தம்முடைய நோக்கத்தில் மாறாதவராக மனிதனோடு வந்து வாசம்பண்ணும்படியாக அவனைத் தேடி வருகிறார்.

**3.** பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலமாகிய, 'வனாந்தரத்திலிருந்த ஆசரிப்புக்கூடாரம்' பற்றி விளக்குக.

இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட பின்னர், சிவந்த சமுத்திரத்தைக் கடந்து வனாந்திரத்திற்கு வந்தனர். தேவன் மோசேயிடம், அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக என்று கூறினார் (யாத். 25 : 8). தேவன் சீனாய் மலையின்மேல் தனக்குக் காண்பித்த மாதிரியின்படி, மோசே, கூடாரத்தையும் அதன் சகல பணிமுட்டுகளையும், ஜனங்கள் கொடுத்த மனப்பூர்வமான காணிக்கைகளைக் கொண்டு உண்டுபண்ணினான். இந்த ஆசரிப்புக்கூடாரம் பரலோகத்திற்கு நிழலாயிருந்தது. ஆசரிப்புக்கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவன் வாசம்பண்ணினார். இஸ்ரவேலரின் பாளயம் புறப்பட்டுப் போகும்போதெல்லாம் அவர்கள் கூடாரத்தைப் பெயர்த்து தங்களுடன் சுமந்து செல்வார்கள், இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசித்தபோது அது, சீலோவிலே நிறுவப்பட்டது (யோசுவா 18 : 1).

**4.** பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலமாகிய 'செருபாபேலின் ஆலயத்தைப' பற்றி விளக்குக.

பின்பு பாபிலோனின் பேரரசு பெர்சிய ராஜாக்களின் ஆளுகையின் கீழ் வந்தது.சாலொமோனின் ஆலயம் அழிக்கப்பட்டு ஏறக்குறைய ஐம்பத்திரண்டு வருடங்களுக்குப் பின் கோரேஸ் இராஜாவின் காலத்தில் அநேக யூதர்கள் ஒன்று சேர்ந்து செருபாபேலின் தலைமையின்கீழ் எருசலேமுக்கு வந்து, இராஜாவின் கட்டளையின்படியே தேவாலயத்தைத் திரும்பவும் கட்டினார்கள். பல எதிர்ப்புகளின் மத்தியில் செருபாபேலின் ஆலயம் கி,மு. 515 - இல், அதாவது யூதர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு எழுபத்து மூன்று வருடங்களுக்குப் பின்பு கட்டி முடிக்கப்பட்டது (எஸ்றா 6 : 15).

**5.** சாலொமோனின் ஆலயத்தைப் பற்றியும், ஏரோதின் ஆலயத்தைப் பற்றியும் குறிப்பு வரைக.

<u>சாலொமோனின் ஆலயம் :</u>

இது ஆசரிப்புக்கூடாரத்தைக் காட்டிலும் பன்மடங்கு பெரியதாய் மோரியா மலைமீது கட்டப்பட்டது (2 நாளா. 3 : 1). ஈசாக்கை ஆபிரகாம் பலியாக ஒப்புக்கொடுத்த மலை இதுவே. பல வருடங்களுக்குப் பின் கி.மு. 588 - இல் இவ்வாலயம் பாபிலோனிய இராஜாவால் இடித்து நாசம் செய்யப்பட்டது; யூதர்களும் சிறையாகக் கொண்டு போகப்பட்டனர்.

<u>ஏரோதின் ஆலயம்:</u>

நாளடைவில் அழிந்துபோன செருபாபேலின் ஆலயம் மீண்டும் ஏரோதினால் கட்டப்பட்டது. அவன் கர்த்தராகிய இயேசு பிறப்பதற்கு நாற்பது வருடங்களுக்கு முன்

அவ்வேலையைத் துவங்கினான். அதைக் கட்டி முடிக்க மொத்தம் நாற்பத்தாறு வருடங்கள் ஆனது (யோவான் 2 : 20). கர்த்தராகிய இயேசு பூமியில் இருந்த நாட்களில் இருந்த ஆலயம் இதுவே. ஆனால் கி.பி. 70-இல் தீத்து இராயனுடைய நாட்களில், ரோமரால் இது தரையோடு தரையாய் உழப்பட்டது (மத். 24 : 2).

**V** *விரிவான விடையளி* : (10 Marks)

**1.** பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலங்கள் பற்றி வசன ஆதாரங்களுடன் விவரித்து எழுதுக. (ஏதேனும் மூன்று).

1. ஏதேன் தோட்டம்:

ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழும் வரை, தேவன் அவர்களோடு ஏதேன் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார் (ஆதி. 3 :8). மனிதன் நன்மை தீமை அறியும் விருட்சத்தின் கனியையும் புசிக்கக் கூடியவனாய் தேவனைப் போலவே இருக்கும் நிலையை அடையும் வரையிலும், அவன் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து தேவனோடுள்ள இந்த ஐக்கியம், நெருங்கிய தொடர்பு இவற்றால் ஜீவனில் வளர வேண்டும் என தேவன் விரும்பினார். ஆனால் மனிதன் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் குறிக்கப்பட்டிருந்த வேளைக்கு முன்பாக நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்து, தன்னைக்குறித்து தேவன் கொண்டிருந்த அழகான திட்டத்தைப் பாழாக்கினான். இருப்பினும், தேவன் தம்முடைய அளவிடமுடியாத அன்பினாலும் இரக்கத்தினாலும் தம்முடைய நோக்கத்தில் மாறாதவராக மனிதனோடு வந்து வாசம்பண்ணும்படியாக அவனைத் தேடி வருகிறார்.

2. வனாந்தரத்திலிருந்த ஆசரிப்புக்கூடாரம்:

இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட பின்னர், சிவந்த சமுத்திரத்தைக் கடந்து வனாந்திரத்திற்கு வந்தனர். தேவன் மோசேயிடம், அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக என்று கூறினார் (யாத். 25 : 8). தேவன் சீனாய் மலையின்மேல் தனக்குக் காண்பித்த மாதிரியின்படி, மோசே, கூடாரத்தையும் அதன் சகல பணிமுட்டுகளையும், ஜனங்கள் கொடுத்த மனப்பூர்வமான காணிக்கைகளைக் கொண்டு உண்டுபண்ணினான். இந்த ஆசரிப்புக்கூடாரம் பரலோகத்திற்கு நிழலாயிருந்தது. ஆசரிப்புக்கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவன் வாசம்பண்ணினார். இஸ்ரவேலரின் பாளயம் புறப்பட்டுப் போகும்போதெல்லாம் அவர்கள் கூடாரத்தைப் பெயர்த்து தங்களுடன் சுமந்து செல்வார்கள், இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசித்தபோது அது, சீலோவிலே நிறுவப்பட்டது (யோசுவா 18 : 1).

3 சாலொமோனின் ஆலயம் :

இது ஆசரிப்புக்கூடாரத்தைக் காட்டிலும் பன்மடங்கு பெரியதாய் மோரியா மலைமீது கட்டப்பட்டது (2 நாளா. 3 : 1). ஈசாக்கை ஆபிரகாம் பலியாக ஒப்புக்கொடுத்த மலை இதுவே. பல வருடங்களுக்குப் பின் கி.மு. 588 - இல் இவ்வாலயம் பாபிலோனிய இராஜாவால் இடித்து நாசம் செய்யப்பட்டது; யூதர்களும் சிறையாகக் கொண்டு போகப்பட்டனர்.

4. செருபாபேலின் ஆலயம்:

பின்பு பாபிலோனின் பேரரசு பெர்சிய ராஜாக்களின் ஆளுகையின் கீழ் வந்தது.சாலொமோனின் ஆலயம் அழிக்கப்பட்டு ஏறக்குறைய ஐம்பத்திரண்டு வருடங்களுக்குப் பின் கோரேஸ் இராஜாவின் காலத்தில் அநேக யூதர்கள் ஒன்று சேர்ந்து செருபாபேலின் தலைமையின்கீழ் எருசலேமுக்கு வந்து, இராஜாவின் கட்டளையின்படியே தேவாலயத்தைத் திரும்பவும் கட்டினார்கள். பல எதிர்ப்புகளின் மத்தியில் செருபாபேலின் ஆலயம் கி,மு. 515 - இல், அதாவது யூதர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு எழுபத்து மூன்று வருடங்களுக்குப் பின்பு கட்டி முடிக்கப்பட்டது (எஸ்றா 6 : 15).

5. ஏரோதின் ஆலயம்:

நாளடைவில் அழிந்துபோன செருபாபேலின் ஆலயம் மீண்டும் ஏரோதினால் கட்டப்பட்டது. அவன் கர்த்தராகிய இயேசு பிறப்பதற்கு நாற்பது வருடங்களுக்கு முன் அவ்வேலையைத் துவங்கினான். அதைக் கட்டி முடிக்க மொத்தம் நாற்பத்தாறு வருடங்கள் ஆனது (யோவான் 2 : 20). கர்த்தராகிய இயேசு பூமியில் இருந்த நாட்களில் இருந்த ஆலயம் இதுவே. ஆனால் கி.பி. 70-இல் தீத்து இராயனுடைய நாட்களில், ரோமரால் இது தரையோடு தரையாய் உழப்பட்டது (மத். 24 : 2).

*************

வகுப்பு : 9

பாடம்-20

# தேவனுடைய வாசஸ்தலங்கள்

## (பகுதி II)

**I** *மனப்பாடவசனம்:* (2 Marks)

எபேசியர் 2 : 19 - 22

ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,
அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள் அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்
அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது
அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::*

1. புதிய ஏற்பாட்டு வாசஸ்தலமாகிய ஆவிக்குரிய ஆலயத்தைக் கட்டுகிறவர்கள் யார்?
   கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் (பாடத்திட்டம்).
2. புதிய ஏற்பாட்டில் காணப்படும் தேவனுடைய வாசஸ்தலங்கள் எவை?
   *i.* பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசி
   *ii.* சபை (பாடத்திட்டம்)
   *iii.*
3. நாம் எப்போது தேவனுடைய ஆலயமாகிறோம்?
   நாம் பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெறும்போது தேவனுடைய ஆலயமாகிறோம் (1 கொரி. 6 : 19).
4. புதிய ஏற்பாட்டு சபை எந்த அஸ்திபாரத்தின் மீது கட்டப்படுகிறது? அதன் மூலைக்கல் யார்?
   அஸ்திபாரம் - அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள்
   மூலைக்கல் - இயேசு (எபே. 2 : 20, 21)
5. சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு பூமியில் காணப்படும் எழுத்திற்குரிய ஆலயங்கள் எவை?
   *(i)* உபத்திரவ காலத்தின் ஆலயம்
   *(ii)* ஆயிர வருட அரசாட்சி காலத்தின் ஆலயம் (பாடத்திட்டம்).
6. உபத்திரவ காலத்தின் ஆலயம் எப்பொழுது, யாரால் கட்டப்படும்? எப்பொழுது அழிக்கப்படும்?
   ஏழுவருட உபத்திரவத்தின் முதல் மூன்றரை வருடத்தில் யூதர்களால் கட்டப்படும். ஏழுவருட உபத்திரவ காலத்தின் முடிவில் அழிக்கப்படும் (பாடத்திட்டம்).
7. எப்பொழுது இந்தப் பூமியும் வானமும் ஒழிந்து போகும்? (அல்லது) எப்போது நித்தியம் துவங்கும்?
   ஆயிரவருட அரசாட்சிக்குப்பின் (பாடத்திட்டம்).
8. நித்தயத்தில் காணப்படும் தேவனுடைய வாசஸ்தலங்கள் எவை?
   புதிய எருசலேம், சீயோன் (பாடத்திட்டம்).
9. வரப்போகிற நித்தியத்தில் புதிய எருசலேமாகவும் சீயோனாகவும் இருப்பவர்கள் யார்?
   கிறிஸ்துவின் மணவாட்டியாகிய பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் (பாடத்திட்டம்).

**III** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி:* (2 Marks)

1. பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசி தேவனுடைய ஆலயமாயிருக்கிறார் - குறிப்பு வரைக.
   புதிய ஏற்பாட்டில் தேவன் கைகளால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசமாயிரார். ( அப் 7:48) நம்முடைய சரீரமே பரிசுத்தாவியின் ஆலயமாயிருக்கிறது (1 கொரி. 3 : 16,

17; 6 : 19). நாம் பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெறும்போது தேவனுடைய ஆலயமாகிறோம் ; ஆவியாயிருக்கிற தேவன் நமக்குள் வந்து வாசம் செய்கிறார்.

**2.** யூதர்கள் எப்போது தங்கள் குற்றத்தை உணர்ந்து, இயேசுவிடம் திரும்புவார்கள்?

உபத்திரவகாலத்தில் யூதர்கள் அந்திக்கிறிஸ்துவோடு உடன்படிக்கை செய்திருப்பார்கள். முதல் மூன்றரை வருட முடிவில் அந்திக்கிறிஸ்து ஆலயத்திற்குள் பிரவேசித்து, அதைத் தீட்டுப்படுத்துவான் (IIதெச. 2 : 4). அப்போது யூதர்கள், தங்கள் குற்றத்தை உணர்ந்து, கர்த்தராகிய இயேசுவிடம் திரும்புவார்கள் (பாடத்திட்டம்).

**3.** ஆயிரவருட அரசாட்சி காலத்தின் ஆலயத்தைப் பற்றி எழுது.

ஆயிர வருட அரசாட்சியின் காலத்தில் மற்றொரு ஆலயம் கட்டப்படும் (ஏசாயா 2 : 2,3 ; சக. 14 : 16 - 21; எசே. 37 : 22 - 28). ஆயிரவருட அரசாட்சியில் ஜீவிக்கிறவர்களைனைவரும் சேனைகளின் கர்த்தராகிய இராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கு வருஷாவருஷம் அங்கு போவார்கள் (சக. 14 : 16).

ஆயிரவருட அரசாட்சிக்குப்பின், இந்தப் பூமியும் வானமும் ஒழிந்து போகும் ; நித்தியம் துவங்கும்.

**4.** நித்தியத்தில் காணப்படும் தேவனுடைய வாசஸ்தலத்தைப் பற்றி எழுதுக.

கிறிஸ்துவின் மணவாட்டியாகிற பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் வரப்போகிற நித்தியத்தில் தேவனுடைய நித்திய வாசஸ்தலமாகிய புதிய எருசலேமாகவும் சீயோனாகவும் இருப்பார்கள் (வெளி. 21 : 2, 3; சங். 132 : 13, 14)

**IV** ***சுருக்கமான விடையளி*** : ( 4/6 Marks)

**1.** புதிய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலம் - குறிப்பு வரைக.

1. <u>பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசி - தேவனுடைய ஆலயம்:</u>

புதிய ஏற்பாட்டில் தேவன் கைகளால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசமாயிரார். (அப் 7:48) நம்முடைய சரீரமே பரிசுத்தாவியின் ஆலயமாயிருக்கிறது (1கொரி.3:16,17, 6 : 19). நாம் பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெறும்போது தேவனுடைய ஆலயமாகிறோம்' ஆவியாயிருக்கிற தேவன் நமக்குள் வந்து வாசம் செய்கிறார்.

2. <u>சபை - தேவனுடைய வாசஸ்தலம்</u> :

பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் சேர்ந்து அமையும் புதிய ஏற்பாட்டு சபையில் தேவன் வாசம் பண்ணுகிறார் (எபே. 2 : 22). ஒரே ஆவியினாலே நாம் எல்லாரும் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம் (1 கொரி. 12 : 13). அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்கள் சபைக்கு அஸ்திபாரமாய் இருக்கிறார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதற்கு மூலைக்கல்லாயிருக்கிறார். "அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது" (எபே. 2 : 20, 21). பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற ஜனங்கள் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறார்கள்.

**2.** சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு பூமியில் காணப்படும் எழுத்திற்குரிய ஆலயங்கள் பற்றி எழுதுக.

1. <u>உபத்திரவ காலத்தின் ஆலயம்</u> :

இது முதல் மூன்றரை வருட உபத்திரவ காலத்தின் போது யூதர்களால் கட்டப்படும் ஆலயம் ஆகும். அப்போது யூதர்கள் அந்திக்கிறிஸ்துவோடு உடன்படிக்கை செய்திருப்பார். முதல் மூன்றரை வருட முடிவில் அந்திக்கிறிஸ்து ஆலயத்திற்குள் பிரவேசித்து, அதைத் தீட்டுப்படுத்துவான் (IIதெச. 2 : 4). அப்போதுதான் யூதர்கள், தங்கள் குற்றத்தை உணர்ந்து, கர்த்தராகிய இயேசுவிடம் திரும்புவார்கள், ஏழு வருட உபத்திரவ காலத்தின் முடிவில் இவ்வாலயம் அழிக்கப்படும்.

2. <u>ஆயிர வருட அரசாட்சி காலத்தின் ஆலயம்</u> :

ஆயிர வருட அரசாட்சியின் காலத்தில் மற்றொரு ஆலயம் கட்டப்படும் (ஏசாயா 2 : 2,3 ; சக. 14 : 16 - 21; எசே. 37 : 22 - 28). ஆயிரவருட அரசாட்சியில் ஜீவிக்கிறவர்களைனைவரும் சேனைகளின் கர்த்தராகிய இராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கு வருஷாவருஷம் அங்கு போவார்கள் (சக. 14 : 16).

ஆயிரவருட அரசாட்சிக்குப்பின், இந்தப் பூமியும் வானமும் ஒழிந்து போகும் ; நித்தியம் துவங்கும்.

*************

# திரித்துவ தேவன் (பகுதி - I)

**I** *மனப்பாடவசனம்:* (2 Marks)

I யோவான் 5 : 7

பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்;

யோவான் 17 : 21

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி:*:

1. திரித்துவ தேவனின் ஆள்தத்துவங்களை எழுது.
   பிதாவாகிய தேவன்
   குமாரனாகிய தேவன்
   பரிசுத்தாவியானவராகிய தேவன் (பாடத்திட்டம்).
2. சபையின் முதுகெலும்பு எது?
   திரித்துவ தேவன் பேரிலுள்ள விசுவாசம் (பாடத்திட்டம்).
3. எபிரெய மொழியில் தேவனைக் குறிப்பதற்காக உபயோகிக்கப்பட்டிருக்கும் பன்மைச் சொல் என்ன?
   எலோஹிம்
4. இயேசு ஞானஸ்நானம் பெற்றுக் கறையேறினவுடனே வானத்திலிருந்து உண்டான சத்தம் என்ன?
   'நீர் என்னுடைய நேச குமாரன்' (லூக். 3 : 21, 22).
5. பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் யார்?
   பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி ( 1 யோவான் 5 : 7).

**III** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

1. திரித்துவ தேவனின் மூன்று ஆள்தத்துவங்களின் தன்மைகள் யாவை?
   அவர்கள் ஒருவருக்கொருவர் சமமானவர்கள். நித்தியமாய் நிலைத்திருப்பவர்கள் (பாடத்திட்டம்).
2. தேவன் திரித்துவர் என்பதை தெளிவாக வெளிப்படுத்தும் வார்த்தைகள் யாவை?
   'நமது சாயல் ' (ஆதி. 1 : 26), 'நம்மில் ஒருவரைப் போல் ஆனான் ' (ஆதி. 3 : 22) 'நாம் இறங்கிப்போய' (ஆதி. 11 : 7)
3. வேதாகமம் மனுஷனை எத்தனை பாகங்களாகப் வெளிப்படுத்திக் காட்டுகிறது? அவற்றை எழுதுக.
   வேதாகமம் மனுஷனை 3 பாகங்களாக வெளிப்படுத்திக் காட்டுகிறது. அவையாவன:

   ஆவி, ஆத்துமா, சரீரம் ( I தெச. 5 : 23). இம்மூன்று பகுதிகளும் பிரிந்து தனித்தனியே கிரியை செய்யமுடியாது.
4. சிருஷ்டிப்பில் திரித்துவம் பற்றி எழுதுக.
   "ஆதியிலே வார்த்தை இருந்தது.... அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று" (யோவான் 1 : 1-3). 'தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்' (ஆதி. 1 : 2). இங்கு, பிதாவாகிய தேவன், வார்த்தையாகிய குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்ற மூன்று ஆள்தத்துவங்களையும் நாம் ஒருமிக்கக் காண்கிறோம்.
5. திரித்துவ தேவனுக்கும், திரித்துவ மனிதனுக்கும் உள்ள வித்தியாசத்தை எழுது.
   திரித்துவ தேவன் - பிதா, குமாரன், பரிசுத்தாவியானவர். தனித்தனியாகக் கிரியை செய்யக் கூடியவர்களாயிருக்கிறார்கள்.

திரித்துவ மனிதன் - ஆவி, ஆத்துமா, சரீரம். மூன்று பகுதிகளும் பிரிந்து தனித்தனியே கிரியை செய்யமுடியாது (பாடத்திட்டம்).

6. பழைய ஏற்பாட்டில் திரித்துவம் - குறிப்பு வரைக.
   "நான் ஆதிமுதற்கொண்டு அந்தரங்கத்தில் பேசவில்லை; அது உண்டான காலந்துவக்கி அங்கே நான் இருந்தேன்; இப்பொழுதோ கர்த்தராகிய ஆண்டவரும், அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார்" (ஏசாயா 48 : 16). இவ்வசனத்தில் திரித்துவ தேவனின் மூன்று ஆள்தத்துவங்களையும் நாம் காண்கிறோம் (பாடத்திட்டம்).

<u>*சுருக்கமானவிடையளி:*</u> (4/6 Marks)

1. 'எலோஹிம' - குறிப்பு வரைக.
   மூலபாஷையாகிய எபிரேய மொழியில் தேவனைக் குறிப்பதற்காக உபயோகிக்கப்பட்டிருக்கும், 'எலோஹிம்' (ELOHIM) என்னும் பெயர் பன்மைச் சொல்லாகும். அது, தேவன் திரித்துவர் என்பதை வெளிப்படுத்துகிறது - 'நமது சாயல் ', 'நம்மில் ஒருவரைப் போல் ஆனான்', 'நாம் இறங்கிப்போய்' போன்ற வார்த்தைகளிலிருந்து இது தெளிவாகிறது (ஆதி. 1 : 26, 3 : 22, 11 : 7).

**V** <u>*விரிவான விடையளி*</u> : (10 Marks)

1. புதிய ஏற்பாட்டில் திரித்துவம் பற்றி வசன ஆதாரங்களுடன் எழுது (**Any 5 points).**
   - (i) கர்த்தராகிய இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, 'பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல் அவர்மேல் இறங்கினார்'. 'நீர் என்னுடைய நேசகுமாரன்' என்ற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று (லூக்கா 3 : 21, 22).
   - (ii) பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானங் கொடுக்கும்படி கர்த்தராகிய இயேசு தம் சீஷர்களுக்குக் கட்டளையிட்டார் (மத். 28 : 19).
   - (iii) "நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே [பரிசுத்த ஆவி] . பிதாவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் [குமாரன் ] மூலமாய்ப் பெற்றிருக்கிறோம் " (எபே. 2 : 18 ).
   - (iv) 'பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே' ( 1 யோவான் 5 : 7)
   - (v) "இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்..... அவர் மேல் நீங்களும் ஆவியினாலே [பரிசுத்த ஆவி] தேவனுடைய [பிதா] வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்"( எபே. 2 : 20 - 22).
   - (vi) "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே..... சாட்சி கொடுக்கிறார். நாம்...... தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தருமாமே" (ரோமர் 8 : 16, 17).
   - (vii) கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக (IIகொரி. 13 : 14)
   - (viii) "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது"( I பேதுரு 1 : 2).
   - (ix) "நீங்களோ...... பரிசுத்தாவிக்குள் ஜெபம்பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு ..... கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்" (யூதா 20, 21).

*************

# திரித்துவ தேவன் (பகுதி - II)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)
2 கொரிந்தியர் 13 : 14

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி:*

1. எந்தப் பாவம் இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை என்று இயேசு கூறினார்?
பரிசுத்த ஆவிக்கு விரோதமாக பேசுவது (மத். 12 : 32).

2. சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துபவர் யார்?
சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் (யோவான் 16 : 13).

3. திரித்துவ தேவனில் தேற்றரவாளன் யார்?
பரிசுத்த ஆவியானவர் (யோவான் 14 : 16, 17).

4. யாருடைய வாக்குத்தத்தின்படி பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டார்?
பிதா அருளிய வாக்குத்தத்தின்படி (அப். 2 : 33).

5. மனிதன், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றவனாய்க் காக்கப்பட என்ன செய்ய வேண்டும்?
மனிதன், தன் ஆவி ஆத்துமா சரீரத்தில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டிருக்க வேண்டும் (பாடத்திட்டம்).

6. எல்லா நம்மைகளுக்கும் ஊற்றாயிருப்பவர் யார்?
பிதா (யாக். 1 : 17).

7. சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேரானவர் யார்?
குமாரன் (கொலோ. 1 : 15).

**III** *ஓரிரு வாக்கிய களில் விடையளி :* (2 Marks)

1. மனிதனைக் குறித்து, அன்பின் பூரணரான தேவனின் நோக்கம் என்ன?
மனுஷன் அன்பில் பரிசுத்தமுள்ளவனும், குற்றமில்லாதவனுமாயிருக்க வேண்டுமென்பதே. (எபே. 1 : 4)

**IV** *சுருக்கமானவிடையளி:* (4/6 Marks)

1. பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் ஒரே ஆள்தத்துவம் அல்ல என்பதை நிரூபி.
   (i) 'நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்வதே' என்னுடைய போஜனமாயிருக்கிறது.(யோவான் 4 :34). இதில், 'நான்' என்பதும் 'என்னை அனுப்பினவர்' என்பதும் ஒரே ஆள்தத்துவமாயிருக்க முடியாது.
   (ii) கர்த்தராகிய இயேசுவே பிதாவாக இருந்தால் 'உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால்' (யோவான் 17:24) என்று கர்த்தராகிய இயேசு கூறியது அர்த்தமற்றதாகிவிடும்.
   (iii) குமாரனாகிய இயேசுவும் பிதாவும் இரு ஆள்தத்துவங்களாயிராவிட்டால், 'என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்'(மத்தேயு 27:46) என்று கர்த்தராகிய இயேசு சத்தமிட்டது அர்த்தமற்றதாகிவிடும்.

2. குமாரனும் பரிசுத்த ஆவியும் ஒரே ஆள்தத்துவம் அல்ல என்பதை நிரூபி.
   (i) "நான் [கர்த்தராகிய இயேசு] போகாதிருந்தால் தேற்றரவாளன் [பரிசுத்த ஆவியானவர்] உங்களிடத்தில் வரார்;" (யோவான் 16 : 7).
   (ii) ஆவியானவர் புறாவைப் போல் அவர்(இயேசு) மேல் இறங்கினார்(மத்3:16).

(iii) "எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" (மத். 12 : 32).

(iv) 'சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்' என கர்த்தராகிய இயேசு கூறினார் (யோவான்16:13).

**3.** பிதாவும் பரிசுத்த ஆவியும் ஒரே ஆள்தத்துவம் அல்ல என்பதை நிரூபி.

(i) "சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் பிதா உங்களுக்குத் தந்தருளுவார் " (யோவான் 14 : 16, 17).

(ii) 'கர்த்தராகிய ஆண்டவரும் [பிதா], அவருடைய ஆவியும் ள்னனை அனுப்புகிறார்' (ஏசாயா 48 : 16).

(iii) 'பிதா அருளிய வாக்குத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று ...... இதைப் பொழிந்தருளினார்' (அப். 2 : 33).

**4.** தேவன் திரித்துவராயிருக்கக் காரணம் என்ன?

மனுஷன் அன்பில் பரிசுத்தமுள்ளவனும் குற்றமில்லாதவனுமாயிருக்க வேண்டுமென்பது அன்பின் பூரணரான தேவனின் நோக்கமாகும் (எபே. 1 : 4). இந்த நோக்கத்தை நிறைவேற்றும்படி தேவன் திரித்துவத்தின் மூலமாக – அன்பின பிதாவாக, அன்பின் குமாரனாக, அன்பின் பரிசுத்த ஆவியானவராக இ,ருந்து தம் அன்பை வெளிப்படுத்தினார்.

பிதா - மனுஷனைச் சிருஷ்டிக்கும் முன்னரே தேவன் அவனுக்குத் தேவையான சகலத்தையும் உண்டாக்கினார். அவர் எல்லா நன்மைகளுக்கும் ஊற்றாயிருக்கிறார்.(யாக்.1:17).

குமாரன் - பிதாவுக்குச் சமமாயிருந்தும் அவர் மனுஷன் நிமித்தமாய் தம் அன்பை வெளிப்படுத்தச் சித்தங்கொண்டு சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறானார் (கொலோ. 1 : 15). தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து கீழ்ப்படிந்தார்.

பரிசுத்தாவியானவர் - நம்மேலுள்ள தம்முடைய அன்பினால் அவர் ஒரு ஆசாரியனைப் போலிருந்து, தேவனுக்குப் பிரியமான பலியாக நம்மை மாற்றுகிறார் (ரோமர் 15 : 15).

**V** <u>*விரிவான விடையளி*</u> : (10 Marks)

**1.** பிதா, குமாரன், பரிசுத்தாவியானவர் - இவர்கள் ஒரே ஆள்தத்துவம் அல்ல என்பதை வசன ஆதாரங்களுடன் நிரூபி.

<u>பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் ஒரே ஆள்தத்துவம் அல்ல:</u>

(i) 'நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்வதே' என்னுடைய போஜனமாயிருக்கிறது.(யோவான் 4 :34). இதில், 'நான்' என்பதும் 'என்னை அனுப்பினவர்' என்பதும் ஒரே ஆள்தத்துவமாயிருக்க முடியாது.

(ii) கர்த்தராகிய இயேசுவே பிதாவாக இருந்தால் 'உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால்' (யோவான் 17:24) என்று கர்த்தராகிய இயேசு கூறியது அர்த்தமற்றதாகிவிடும்.

(iii) குமாரனாகிய இயேசுவும் பிதாவும் இரு ஆள்தத்துவங்களாயிராவிட்டால், 'என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்'(மத்தேயு 27:46) என்று கர்த்தராகிய இயேசு சத்தமிட்டது அர்த்தமற்றதாகிவிடும்.

<u>குமாரனும் பரிசுத்த ஆவியும் ஒரே ஆள்தத்துவம் அல்ல:</u>

(i) "நான் [கர்த்தராகிய இயேசு] போகாதிருந்தால் தேற்றரவாளன் [பரிசுத்த ஆவியானவர்] உங்களிடத்தில் வரார்;" (யோவான் 16 : 7).

(ii) ஆவியானவர் புறாவைப் போல் அவர்(இயேசு) மேல் இறங்கினார்(மத்3:16).

(iii) "எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" (மத். 12 : 32).

(iv) 'சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்' என கர்த்தராகிய இயேசு கூறினார் (யோவான்16:13).

<u>பிதாவும் பரிசுத்த ஆவியும் ஒரே ஆள்தத்துவம் அல்ல:</u>

(i) "சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் பிதா உங்களுக்குத் தந்தருளுவார்" (யோவான் 14 : 16, 17).

(ii) 'கர்த்தராகிய ஆண்டவரும் [பிதா], அவருடைய ஆவியும் ென்னனை அனுப்புகிறார்' (ஏசாயா 48 : 16).

(iii) 'பிதா அருளிய வாக்குத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று ...... இதைப் பொழிந்தருளினார்' (அப். 2 : 33).

தேவன் திரித்துவர் என்பதை நிரூபிக்க இவ்வாறு இன்னும் பல வசனங்களை ஆதாரமாகக் கூறலாம்.

**VI** *<u>போதனை:</u>* (2 Marks)

மனுஷன் தமக்கு முன்பாக அன்பில் பரிசுத்தமுள்ளவனும் குற்றமில்லாதவனுமாயிருப்பதற்காக தேவன் உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்து இயேசுவுக்குள் அவனைத் தெரிந்துகொண்டார். எனவே மனிதன் தன் ஆவி ஆத்துமா சரீரத்தில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டு, கர்த்தராகிய இயேசு வரும்போது குற்றமற்றவனாய்க் காக்கப்பட்டிருக்க வேண்டும்.

*************

வகுப்பு : 9

பாடம்-18

ஞாயிறு பள்ளி

# கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியம்

**I** *மனப்பாடவசனம்:* (2 Marks)

எபேசியர் 5 : 25 - 27

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூறுங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து,

தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்,

கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.ணி

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::*

**1.** இரகசியங்கள் என்றால் என்ன?

தேவனுடைய மறைக்கப்பட்ட சத்தியங்களே இரகசியங்கள் ஆகும். (பாடத்திட்டம்)

**2.** வேதாகமத்தில் எத்தனை இரகசியங்கள் உள்ளன?

வேதாகமத்தில் பதின்மூன்று இரகசியங்கள் உள்ளன (பாடத்திட்டம்),

**3.** தேவனுடைய இரகசியங்களை வெளிப்படுத்துகிறவர் யார்?

பரிசுத்த ஆவியானவர் (எபேசி. 3 : 6)

**4.** பெரிய இரகசியம் எது?

கிறிஸ்துவையும், சபையும் பற்றிய இரகசியம் (எபே. 5 : 31, 32).

**5.** எதன் மூலம் சபையானது மிகுந்த கனிகளைக் கொடுக்கக்கூடும்?

கிறிஸ்துவில் நிலைத்திருக்கிற ஜீவியத்தின் மூலம் (யோவான் 15 : 5).

**III** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

**1.** கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்தின் அம்சங்கள் எத்தனை? அவை யாவை?

கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்திற்கு மூன்று அமசங்கள் உள்ளன. அவையாவன:

1. மனுஷன் தன் தகப்பனையும் தாயையும் விடுவது
2. மனுஷன் தன் மனைவியுடன் இசைந்திருப்பது
3. இருவரும் ஒரே மாம்சமாயிருப்பது (எபே. 5 : 31,32).

**2.** கிறிஸ்துவும் சபையும் ஒருவரோடொருவர் எவற்றின் மூலமாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள்?

ஒரு புருஷனும் அவன் மனைவியும் அன்பு, கீழ்படிதல் இவற்றின் மூலமாக ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருக்கிறதுபோல, கிறிஸ்துவும் சபையும் ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருக்கிறார்கள் (பாடத்திட்டம்).

**3.** இயேசு சபையில் அன்புகூர்ந்து என்ன செய்தார்?

பிதாவின் மடியையும் சிங்காசனத்தையும் பரலோகத்திலுள்ள சகல மகிமையையும் கனத்தையும் விட்டு, மனித சாயலில் பூமிக்கு வந்தார் (பாடத்திட்டம்).

4. இயேசு தம்மைத்தாமே எதற்காக ஒப்புக்கொடுத்தார்?
“கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்” (எபே. 5 : 25 – 27).

5. ஆதாம், ஏவாளை ‘மனுஷி’ என்று ஏன் சொன்னான்?
“இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள்” என்று சொன்னான் (ஆதி. 2 : 23).

6. நாம் சகல சிற்றின்பங்களையும் ஏன் தியாகம் செய்ய வேண்டும்?
கிறிஸ்து பரலோகத்தின் சகல மகிமைகளையும் விட்டு தம்மைத்தாமே சபைக்காக ஒப்புக்கொடுத்தது போல, நாமும் அவரில் அன்புகூரும்படியாகவும், அவருடைய பெரிதான அன்புக்குப் பாத்திரராகக் காணப்படும்படியாகவும், நம்முடைய சகல சிற்றின்பங்களையும் தியாகம் செய்யவேண்டும் (போதனை).

7. கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையே காணப்படும் ஐக்கியம் எப்படிப்பட்டது?
ஒரு மனிதன் தன் மனைவியை நேசித்து அவளைப் போஷித்துக் காப்பாற்றுகிறான் (எபே. 5 : 25, 29). அவன் தன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; மனைவி தன் புருஷனுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கிறாள் (எபே. 5 : 23, 24). எனவே, அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஐக்கியம் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையே காணப்படுகிறது.

## IV *சுருக்கமான விடையளி:* (4/6 Marks)

1. வேதாகமத்தில் உள்ள இரகசியங்கள் யாருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன? வசன ஆதாரம் தருக.
தேவனுடைய இரகசியங்கள் பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன (எபே. 3 : 6)
தங்களுக்குண்டான எல்லாவற்றையும் விட்டு விட்டு தம்மைப் பின்பற்றின சீஷர்களிடம் , கர்த்தராகிய இயேசு பரலோக இராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படிக்கு உங்களுக்கு அருளப்பட்டது எனக் கூறினார். (மத். 13 : 11)
தேவ இரகசியங்கள் உண்மையுள்ள பிரதிஷ்டையுள்ள தேவ ஊழியருக்கு வெளிப்படுத்தப்படுகின்றன. (மத். 16 : 17 – 19)

2. ‘மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விடுவது’ – இதனுடன் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் உள்ள சம்பந்தத்தை ஒப்பிட்டு விளக்குக.
ஒரு மனிதன் தன் மனைவியை நேசித்து, தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பது போல (ஆதி. 2 : 24), கர்த்தராகிய இயேசுவும் சபையில் அன்பு கூர்ந்தபடியினால், தம்முடைய பிதாவின் மடியையும் சிங்காசனத்தையும் பரலோகத்திலுள்ள சகல மகிமையையும் கனத்தையும் விட்டு, மனித சாயலில் பூமிக்கு வந்தார். அதன் பின்னர் “கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்” (எபே. 5 : 25 – 27).

3. ‘தன் மனைவியுடன் இசைந்திருப்பது’ – இதனுடன் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் உள்ள சம்பந்தத்தை ஒப்பிட்டு விளக்குக.
ஒரு புருஷனும் அவன் மனைவியும் அன்பு, கீழ்படிதல் இவற்றின் மூலமாக ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருக்கிறதுபோல, கிறிஸ்துவும் சபையும் ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவில் நிலைத்திருக்கிற இந்த ஜீவியத்தின் மூலம், திராட்சச்செடியில் நிலைத்திருக்கிற கொடியைப்போல, சபையானது மிகுந்த கனிகளைக் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது (யோவான் 15 : 5, 7), கர்த்தரோடு இசைந்திருக்கிறவன், அவருடனே ஒரே ஆவியாயிருந்து (1 கொரி. 6 : 17), தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி அவருடனே விவாகம் செய்யப்பட்டிருக்கிறான் (ரோமர் 7 : 4).

4. ‘இருவரும் ஒரே மாம்சமாயிருப்பது’ – இதனுடன் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் உள்ள சம்பந்தத்தை ஒப்பிட்டு விளக்குக.

ஆதாம் ஏவாளைப் பார்த்து, "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள்" (ஆதி. 2 : 23) என்று கூறினான். ஒரு மனிதன் தன் மனைவியை நேசித்து அவளைப் போஷித்துக் காப்பாற்றுகிறான் (எபே. 5 : 25, 29). ஆ வன் தன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; மனைவி தன் புருஷனுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கிறாள் (எபே. 5 : 23, 24). எனவே அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஐக்கியம் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையே காணப்படுகிறது.

**V** <u>*விரிவான விடையளி*</u> : (10 Marks)

**1.** கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்தின் மூன்று அம்சங்களை எழுதி விளக்குக.

கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் பற்றிய இரகசியத்திற்கு மூன்று அமசங்கள் உள்ளன. அவையாவன:

1. மனுஷன் தன் தகப்பனையும் தாயையும் விடுவது
2. மனுஷன் தன் மனைவியுடன் இசைந்திருப்பது
3. இருவரும் ஒரே மாம்சமாயிருப்பது (எபே. 5 : 31,32).

1. மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விடுவது:

ஒரு மனிதன் தன் மனைவியை நேசித்து, தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பது போல (ஆதி. 2 : 24), கர்த்தராகிய இயேசுவும் சபையில் அன்பு கூர்ந்தபடியினால், தம்முடைய பிதாவின் மடியையும் சிங்காசனத்தையும் பரலோகத்திலுள்ள சகல மகிமையையும் கனத்தையும் விட்டு, மனித சாயலில் பூமிக்கு வந்தார். அதன் பின்னர் "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே. 5 : 25 – 27).

2. தன் மனைவியுடன் இசைந்திருப்பது:

ஒரு புருஷனும் அவன் மனைவியும் அன்பு, கீழ்படிதல் இவற்றின் மூலமாக ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருக்கிறதுபோல, கிறிஸ்துவும் சபையும் ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவில் நிலைத்திருக்கிற இந்த ஜீவியத்தின் மூலம், திராட்சச்செடியில் நிலைத்திருக்கிற கொடியைப்போல, சபையானது மிகுந்த கனிகளைக் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது (யோவான் 15 : 5, 7), கர்த்தரோடு இசைந்திருக்கிறவன், அவருடனே ஒரே ஆவியாயிருந்து (1 கொரி. 6 : 17), தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி அவருடனே விவாகம் செய்யப்பட்டிருக்கிறான் (ரோமர் 7 : 4).

3. இருவரும் ஒரே மாம்சமாயிருப்பது:

ஆதாம் ஏவாளைப் பார்த்து, "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள்" (ஆதி. 2 : 23) என்று கூறினான். ஒரு மனிதன் தன் மனைவியை நேசித்து அவளைப் போஷித்துக் காப்பாற்றுகிறான் (எபே. 5 : 25, 29). ஆ வன் தன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; மனைவி தன் புருஷனுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கிறாள் (எபே. 5 : 23, 24). எனவே அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஐக்கியம் கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இடையே காணப்படுகிறது.

**VI** <u>*போதனை:*</u> (2 Marks)

கிறிஸ்து பரலோகத்தின் சகல மகிமைகளையும் விட்டு தம்மைத்தாமே சபைக்காக ஒப்புக்கொடுத்ததுபோல, நாமும் அவரில் அன்புகூரும்படியாகவும், அவருடைய பெரிதான அன்புக்கு பாத்திரராகக் காணப்படும்படியாகவும், நம்முடைய சகல சிற்றின்பங்களையும் தியாகம் செய்யவேண்டும்.

**************

# தேவனுடைய வாசஸ்தலங்கள்

(பகுதி 1)

**I** *மனப்பாடவசனம்:* (2 Marks)

ஏசாயா 57 : 15

நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்தஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிற்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்.”

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::*

1. தேவன் தெரிந்துகொண்ட வாசஸ்தலம் எது?
   சீயோன் (சங். 132 : 13, 14).
2. பரலோகத்திலே மிகச் சிறந்ததும், உன்னதமானதுமான வாசஸ்தலம் எது?
   சீயோன் (பாடத்திட்டம்).
3. தேவனுடைய வாசஸ்தலம் யாரிடத்தில் இருக்கிறது?
   மனுஷர்களிடத்திலே (வெளி. 21:3)
4. தேவன் எப்பொழுதும் எதை வாஞ்சிக்கிறார்?
   தேவன் எப்பொழுதும் மனுஷரோடு வாசம்பண்ணுவதையே வாஞ்சிக்கிறார் (வெளி. 21:3) (பாடத்திட்டம்).
5. தேவன், ஏதேன் தோட்டத்தில் எதுவரை உலாவிக்கொண்டிருந்தார்?
   ஆதாமும், ஏவாளும் பாவத்தில் விழும் வரை (ஆதி. 3 : 8).
6. அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக என்று தேவன் யாரிடம் கூறினார்?
   மோசேயிடம் (யாத். 25 : 8).
7. ஆசரிப்புக்கூடாரம் எதற்கு நிழலாட்டமாயிருக்கிறது?
   பரலோகத்திற்கு (பாடத்திட்டம்)
8. ஆசரிப்புக்கூடாரத்தில் தேவன் எங்கே வாசம்பண்ணுகிறார்?
   மகா பரிசுத்த ஸ்தலத்தில் (பாடத்திட்டம்).
9. இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசித்தபோது ஆசரிப்புக்கூடாரம் யாரால், எங்கே நிறுவப்பட்டது?
   யோசுவாவினால், சீலோவிலே நிறுவப்பட்டது (யோசுவா 18 : 1)
10. சாலொமோனின் ஆலயம் எங்கே கட்டப்பட்டது?
    மோரியா மலைமீது (2 நாளா. 3 : 1).
11. சாலொமோனின் ஆலயம் எப்பொழுது, யாரால் இடித்து நாசமாக்கப்பட்டது?
    கி.மு. 588 - ல், பாபிலோனிய இராஜாவினால் இடித்து நாசம் செய்யப்பட்டது (பாடத்திட்டம்).
12. செருபாபேலின் ஆலயம் எந்த இராஜாவின் காலத்தில் எந்த ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது?
    கோரேஸ் இராஜாவின் காலத்தில், கி.மு. 515 - ல் கட்டிமுடிக்கப்பட்டது (பாடத்திட்டம்).
13. அழிந்துபோன செருபாபேலின் ஆலயம் மீண்டும் யாரால் கட்டப்பட்டது? அதைக் கட்டிமுடிக்க எத்தனை வருடங்கள் ஆனது?
    ஏரோதினால் கட்டப்பட்டது. 46 வருடங்கள் ஆனது. (யோவான் 2 : 20) (பாடத்திட்டம்)
14. இயேசு பூமியில் இருந்த நாட்களில் இருந்த ஆலயம் எது?
    ஏரோதின் தேவாலயம் (பாடத்திட்டம்)

15. ஏரோதின் ஆலயம் எப்போது, யாருடைய நாட்களில், யாரால் தரையோடு தரையாய் உழப்பட்டது?

கி.பி. 70-ல், தீத்து இராயனுடைய நாட்களில், ரோமரால் தரையோடு தரையாய் உழப்பட்டது (மத். 24 : 2) (பாடத்திட்டம்).

## III *சுருக்கமான விடையளி:* (4/6 Marks)

1. தேவன் எப்பொழுதும் மனுஷரோடு வாசம்பண்ணுவதையே வாஞ்சிக்கிறார் என்பதைக் காட்டும் வசனங்களை வசன ஆதாரத்துடன் எழுது.

கர்த்தர் பரலோகத்திலே உன்னதமானதும், மகா பரிசுத்தமானதும் மிகச் சிறந்ததுமான இடமாகிய சீயோனைத் தமது வாசஸ்தலமாகத் தெரிந்தெடுத்து, அங்கே வாசம்பண்ணுகிறார் என்று சங்கீதம் 132 : 13, 14 - இல் நாம் பார்க்கிறோம். “இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்” என்று நாம் வாசிக்கிறோம் (வெளி.21 : 3). தேவன் எப்பொழுதும் மனுஷரோடு வாசம்பண்ணுவதையே வாஞ்சிக்கிறார் என்பதை இந்த வசனங்கள் காட்டுகின்றன.

2. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலம் - ஏதேன் தோட்டம்- விளக்குக.

ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழும் வரை, தேவன் அவர்களோடு ஏதேன் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார் (ஆதி. 3 :8). மனிதன் நன்மை தீமை அறியும் விருட்சத்தின் கனியையும் புசிக்கக் கூடியவனாய் தேவனைப் போலவே இருக்கும் நிலையை அடையும் வரையிலும், அவன் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து தேவனோடுள்ள இந்த ஐக்கியம், நெருங்கிய தொடர்பு இவற்றால் ஜீவனில் வளர வேண்டும் என தேவன் விரும்பினார். ஆனால் மனிதன் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் குறிக்கப்பட்டிருந்த வேளைக்கு முன்பாக நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்து, தன்னைக்குறித்து தேவன் கொண்டிருந்த அழகான திட்டத்தைப் பாழாக்கினான். இருப்பினும், தேவன் தம்முடைய அளவிடமுடியாத அன்பினாலும் இரக்கத்தினாலும் தம்முடைய நோக்கத்தில் மாறாதவராக மனிதனோடு வந்து வாசம்பண்ணும்படியாக அவனைத் தேடி வருகிறார்.

3. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலமாகிய, ‘வனாந்தரத்திலிருந்த ஆசரிப்புக்கூடாரம்’ பற்றி விளக்குக.

இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட பின்னர், சிவந்த சமுத்திரத்தைக் கடந்து வனாந்திரத்திற்கு வந்தனர். தேவன் மோசேயிடம், அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக என்று கூறினார் (யாத். 25 : 8). தேவன் சீனாய் மலையின்மேல் தனக்குக் காண்பித்த மாதிரியின்படி, மோசே, கூடாரத்தையும் அதன் சகல பணிமுட்டுகளையும், ஜனங்கள் கொடுத்த மனப்பூர்வமான காணிக்கைகளைக் கொண்டு உண்டுபண்ணினான். இந்த ஆசரிப்புக்கூடாரம் பரலோகத்திற்கு நிழலாயிருந்தது. ஆசரிப்புக்கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவன் வாசம்பண்ணினார். இஸ்ரவேலரின் பாளயம் புறப்பட்டுப் போகும்போதெல்லாம் அவர்கள் கூடாரத்தைப் பெயர்த்து தங்களுடன் சுமந்து செல்வார்கள், இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசித்தபோது அது, சீலோவிலே நிறுவப்பட்டது (யோசுவா 18 : 1).

4. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலமாகிய ‘செருபாபேலின் ஆலயத்தைப’ பற்றி விளக்குக.

பின்பு பாபிலோனின் பேரரசு பெர்சிய ராஜாக்களின் ஆளுகையின் கீழ் வந்தது.சாலொமோனின் ஆலயம் அழிக்கப்பட்டு ஏறக்குறைய ஐம்பத்திரண்டு வருடங்களுக்குப் பின் கோரேஸ் இராஜாவின் காலத்தில் அநேக யூதர்கள் ஒன்று சேர்ந்து செருபாபேலின் தலைமையின்கீழ் எருசலேமுக்கு வந்து, இராஜாவின் கட்டளையின்படியே தேவாலயத்தைத் திரும்பவும் கட்டினார்கள். பல எதிர்ப்புகளின் மத்தியில் செருபாபேலின் ஆலயம் கி,மு. 515 - இல், அதாவது யூதர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு எழுபத்து மூன்று வருடங்களுக்குப் பின்பு கட்டி முடிக்கப்பட்டது (எஸ்றா 6 : 15).

5. சாலொமோனின் ஆலயத்தைப் பற்றியும், ஏரோதின் ஆலயத்தைப் பற்றியும் குறிப்பு வரைக.

<u>சாலொமோனின் ஆலயம்</u> :

இது ஆசரிப்புக்கூடாரத்தைக் காட்டிலும் பன்மடங்கு பெரியதாய் மோரியா மலைமீது கட்டப்பட்டது (2 நாளா. 3 : 1). ஈசாக்கை ஆபிரகாம் பலியாக ஒப்புக்கொடுத்த மலை இதுவே. பல வருடங்களுக்குப் பின் கி.மு. 588 - இல் இவ்வாலயம் பாபிலோனிய இராஜாவால் இடித்து நாசம் செய்யப்பட்டது; யூதர்களும் சிறையாகக் கொண்டு போகப்பட்டனர்.

ஏரோதின் ஆலயம்:

நாளடைவில் அழிந்துபோன செருபாபேலின் ஆலயம் மீண்டும் ஏரோதினால் கட்டப்பட்டது. அவன் கர்த்தராகிய இயேசு பிறப்பதற்கு நாற்பது வருடங்களுக்கு முன் அவ்வேலையைத் துவங்கினான். அதைக் கட்டி முடிக்க மொத்தம் நாற்பத்தாறு வருடங்கள் ஆனது (யோவான் 2 : 20). கர்த்தராகிய இயேசு பூமியில் இருந்த நாட்களில் இருந்த ஆலயம் இதுவே. ஆனால் கி.பி. 70-இல் தீத்து இராயனுடைய நாட்களில், ரோமரால் இது தரையோடு தரையாய் உழப்பட்டது (மத். 24 : 2).

**V** *விரிவான விடையளி* : (10 Marks)

**1.** பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலங்கள் பற்றி வசன ஆதாரங்களுடன் விவரித்து எழுதுக. (ஏதேனும் மூன்று).

1. ஏதேன் தோட்டம்:

ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழும் வரை, தேவன் அவர்களோடு ஏதேன் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார் (ஆதி. 3 :8). மனிதன் நன்மை தீமை அறியும் விருட்சத்தின் கனியையும் புசிக்கக் கூடியவனாய் தேவனைப் போலவே இருக்கும் நிலையை அடையும் வரையிலும், அவன் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து தேவனோடுள்ள இந்த ஐக்கியம், நெருங்கிய தொடர்பு இவற்றால் ஜீவனில் வளர வேண்டும் என தேவன் விரும்பினார். ஆனால் மனிதன் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் குறிக்கப்பட்டிருந்த வேளைக்கு முன்பாக நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்து, தன்னைக்குறித்து தேவன் கொண்டிருந்த அழகான திட்டத்தைப் பாழாக்கினான். இருப்பினும், தேவன் தம்முடைய அளவிடமுடியாத அன்பினாலும் இரக்கத்தினாலும் தம்முடைய நோக்கத்தில் மாறாதவராக மனிதனோடு வந்து வாசம்பண்ணும்படியாக அவனைத் தேடி வருகிறார்.

2. வனாந்தரத்திலிருந்த ஆசரிப்புக்கூடாரம்:

இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட பின்னர், சிவந்த சமுத்திரத்தைக் கடந்து வனாந்திரத்திற்கு வந்தனர். தேவன் மோசேயிடம், அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக என்று கூறினார் (யாத். 25 : 8). தேவன் சீனாய் மலையின்மேல் தனக்குக் காண்பித்த மாதிரியின்படி, மோசே, கூடாரத்தையும் அதன் சகல பணிமுட்டுகளையும், ஜனங்கள் கொடுத்த மனப்பூர்வமான காணிக்கைகளைக் கொண்டு உண்டுபண்ணினான். இந்த ஆசரிப்புக்கூடாரம் பரலோகத்திற்கு நிழலாயிருந்தது. ஆசரிப்புக்கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவன் வாசம்பண்ணினார். இஸ்ரவேலரின் பாளயம் புறப்பட்டுப் போகும்போதெல்லாம் அவர்கள் கூடாரத்தைப் பெயர்த்து தங்களுடன் சுமந்து செல்வார்கள், இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசித்தபோது அது, சீலோவிலே நிறுவப்பட்டது (யோசுவா 18 : 1).

3 சாலொமோனின் ஆலயம் :

இது ஆசரிப்புக்கூடாரத்தைக் காட்டிலும் பன்மடங்கு பெரியதாய் மோரியா மலைமீது கட்டப்பட்டது (2 நாளா. 3 : 1). ஈசாக்கை ஆபிரகாம் பலியாக ஒப்புக்கொடுத்த மலை இதுவே. பல வருடங்களுக்குப் பின் கி.மு. 588 - இல் இவ்வாலயம் பாபிலோனிய இராஜாவால் இடித்து நாசம் செய்யப்பட்டது; யூதர்களும் சிறையாகக் கொண்டு போகப்பட்டனர்.

4. செருபாபேலின் ஆலயம்:

பின்பு பாபிலோனின் பேரரசு பெர்சிய ராஜாக்களின் ஆளுகையின் கீழ் வந்தது.சாலொமோனின் ஆலயம் அழிக்கப்பட்டு ஏறக்குறைய ஐம்பத்திரண்டு வருடங்களுக்குப் பின் கோரேஸ் இராஜாவின் காலத்தில் அநேக யூதர்கள் ஒன்று சேர்ந்து செருபாபேலின் தலைமையின்கீழ் எருசலேமுக்கு வந்து, இராஜாவின் கட்டளையின்படியே தேவாலயத்தைத் திரும்பவும் கட்டினார்கள். பல எதிர்ப்புகளின் மத்தியில் செருபாபேலின் ஆலயம் கி,மு. 515 - இல், அதாவது யூதர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு எழுபத்து மூன்று வருடங்களுக்குப் பின்பு கட்டி முடிக்கப்பட்டது (எஸ்றா 6 : 15).

5. ஏரோதின் ஆலயம்:

நாளடைவில் அழிந்துபோன செருபாபேலின் ஆலயம் மீண்டும் ஏரோதினால் கட்டப்பட்டது. அவன் கர்த்தராகிய இயேசு பிறப்பதற்கு நாற்பது வருடங்களுக்கு முன் அவ்வேலையைத் துவங்கினான். அதைக் கட்டி முடிக்க மொத்தம் நாற்பத்தாறு வருடங்கள் ஆனது (யோவான் 2 : 20). கர்த்தராகிய இயேசு பூமியில் இருந்த நாட்களில் இருந்த ஆலயம் இதுவே. ஆனால் கி.பி. 70-இல் தீத்து இராயனுடைய நாட்களில், ரோமரால் இது தரையோடு தரையாய் உழப்பட்டது (மத். 24 : 2).

**************

வகுப்பு : 9

பாடம்-20

# தேவனுடைய வாசஸ்தலங்கள்

## (பகுதி II)

**I** *மனப்பாடவசனம்:* (2 Marks)

எபேசியர் 2 : 19 - 22

ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,

அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள் அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்

அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது

அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்.

**II** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி::*

1. புதிய ஏற்பாட்டு வாசஸ்தலமாகிய ஆவிக்குரிய ஆலயத்தைக் கட்டுகிறவர்கள் யார்?
   கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் (பாடத்திட்டம்).
2. புதிய ஏற்பாட்டில் காணப்படும் தேவனுடைய வாசஸ்தலங்கள் எவை?
   *i.* பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசி
   *ii.* சபை (பாடத்திட்டம்)
   *iii.*
3. நாம் எப்போது தேவனுடைய ஆலயமாகிறோம்?
   நாம் பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெறும்போது தேவனுடைய ஆலயமாகிறோம் (1 கொரி. 6 : 19).
4. புதிய ஏற்பாட்டு சபை எந்த அஸ்திபாரத்தின் மீது கட்டப்படுகிறது? அதன் மூலைக்கல் யார்?
   அஸ்திபாரம் - அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள்
   மூலைக்கல் - இயேசு (எபே. 2 : 20, 21)
5. சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு பூமியில் காணப்படும் எழுத்திற்குரிய ஆலயங்கள் எவை?
   *(i)* உபத்திரவ காலத்தின் ஆலயம்
   *(ii)* ஆயிர வருட அரசாட்சி காலத்தின் ஆலயம் (பாடத்திட்டம்).
6. உபத்திரவ காலத்தின் ஆலயம் எப்பொழுது, யாரால் கட்டப்படும்? எப்பொழுது அழிக்கப்படும்?
   ஏழுவருட உபத்திரவத்தின் முதல் மூன்றரை வருடத்தில் யூதர்களால் கட்டப்படும். ஏழுவருட உபத்திரவ காலத்தின் முடிவில் அழிக்கப்படும் (பாடத்திட்டம்).
7. எப்பொழுது இந்தப் பூமியும் வானமும் ஒழிந்து போகும்? (அல்லது) எப்போது நித்தியம் துவங்கும்?
   ஆயிரவருட அரசாட்சிக்குப்பின் (பாடத்திட்டம்).
8. நித்தயத்தில் காணப்படும் தேவனுடைய வாசஸ்தலங்கள் எவை?
   புதிய எருசலேம், சீயோன் (பாடத்திட்டம்).
9. வரப்போகிற நித்தியத்தில் புதிய எருசலேமாகவும் சீயோனாகவும் இருப்பவர்கள் யார்?
   கிறிஸ்துவின் மணவாட்டியாகிய பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் (பாடத்திட்டம்).

**III** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி:* (2 Marks)

1. பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசி தேவனுடைய ஆலயமாயிருக்கிறார் - குறிப்பு வரைக.

புதிய ஏற்பாட்டில் தேவன் கைகளால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசமாயிரார். ( அப் 7:48) நம்முடைய சரீரமே பரிசுத்தாவியின் ஆலயமாயிருக்கிறது (1 கொரி. 3 : 16, 17; 6 : 19). நாம் பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெறும்போது தேவனுடைய ஆலயமாகிறோம் ; ஆவியாயிருக்கிற தேவன் நமக்குள் வந்து வாசம் செய்கிறார்.

**2.** யூதர்கள் எப்போது தங்கள் குற்றத்தை உணர்ந்து, இயேசுவிடம் திரும்புவார்கள்?

உபத்திரவகாலத்தில் யூதர்கள் அந்திக்கிறிஸ்துவோடு உடன்படிக்கை செய்திருப்பார்கள். முதல் மூன்றரை வருட முடிவில் அந்திக்கிறிஸ்து ஆலயத்திற்குள் பிரவேசித்து, அதைத் தீட்டுப்படுத்துவான் (IIதெச. 2 : 4). அப்போது யூதர்கள், தங்கள் குற்றத்தை உணர்ந்து, கர்த்தராகிய இயேசுவிடம் திரும்புவார்கள் (பாடத்திட்டம்).

**3.** ஆயிரவருட அரசாட்சி காலத்தின் ஆலயத்தைப் பற்றி எழுது.

ஆயிர வருட அரசாட்சியின் காலத்தில் மற்றொரு ஆலயம் கட்டப்படும் (ஏசாயா 2 : 2,3 ; சக. 14 : 16 - 21; எசே. 37 : 22 - 28). ஆயிரவருட அரசாட்சியில் ஜீவிக்கிறவர்களனைவரும் சேனைகளின் கர்த்தராகிய இராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கு வருஷாவருஷம் அங்கு போவார்கள் (சக. 14 : 16).

ஆயிரவருட அரசாட்சிக்குப்பின், இந்தப் பூமியும் வானமும் ஒழிந்து போகும் ; நித்தியம் துவங்கும்.

**4.** நித்தியத்தில் காணப்படும் தேவனுடைய வாசஸ்தலத்தைப் பற்றி எழுதுக.

கிறிஸ்துவின் மணவாட்டியாகிற பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் வரப்போகிற நித்தியத்தில் தேவனுடைய நித்திய வாசஸ்தலமாகிய புதிய எருசலேமாகவும் சீயோனாகவும் இருப்பார்கள் (வெளி. 21 : 2, 3; சங். 132 : 13, 14)

**IV** <u>*சுருக்கமான விடையளி*</u> : ( 4/6 Marks)

**1.** புதிய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலம் - குறிப்பு வரைக.

1. <u>பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசி - தேவனுடைய ஆலயம்:</u>

புதிய ஏற்பாட்டில் தேவன் கைகளால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசமாயிரார். (அப் 7:48) நம்முடைய சரீரமே பரிசுத்தாவியின் ஆலயமாயிருக்கிறது (1கொரி.3:16,17, 6 : 19). நாம் பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெறும்போது தேவனுடைய ஆலயமாகிறோம்˙ ஆவியாயிருக்கிற தேவன் நமக்குள் வந்து வாசம் செய்கிறார்.

2. <u>சபை - தேவனுடைய வாசஸ்தலம்</u> :

பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் சேர்ந்து அமையும் புதிய ஏற்பாட்டு சபையில் தேவன் வாசம் பண்ணுகிறார் (எபே. 2 : 22). ஒரே ஆவியினாலே நாம் எல்லாரும் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம் (1 கொரி. 12 : 13). அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்கள் சபைக்கு அஸ்திபாரமாய் இருக்கிறார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதற்கு மூலைக்கல்லாயிருக்கிறார். "அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது" (எபே. 2 : 20, 21). பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற ஜனங்கள் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறார்கள்.

**2.** சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு பூமியில் காணப்படும் எழுத்திற்குரிய ஆலயங்கள் பற்றி எழுதுக.

1. <u>உபத்திரவ காலத்தின் ஆலயம்</u> :

இது முதல் மூன்றரை வருட உபத்திரவ காலத்தின் போது யூதர்களால் கட்டப்படும் ஆலயம் ஆகும். அப்போது யூதர்கள் அந்திக்கிறிஸ்துவோடு உடன்படிக்கை செய்திருப்பார். முதல் மூன்றரை வருட முடிவில் அந்திக்கிறிஸ்து ஆலயத்திற்குள் பிரவேசித்து, அதைத் தீட்டுப்படுத்துவான் (IIதெச. 2 : 4). அப்போதுதான் யூதர்கள், தங்கள் குற்றத்தை உணர்ந்து, கர்த்தராகிய இயேசுவிடம் திரும்புவார்கள், ஏழு வருட உபத்திரவ காலத்தின் முடிவில் இவ்வாலயம் அழிக்கப்படும்.

2. <u>ஆயிர வருட அரசாட்சி காலத்தின் ஆலயம்</u> :

ஆயிர வருட அரசாட்சியின் காலத்தில் மற்றொரு ஆலயம் கட்டப்படும் (ஏசாயா 2 : 2,3 ; சக. 14 : 16 - 21; எசே. 37 : 22 - 28). ஆயிரவருட அரசாட்சியில் ஜீவிக்கிறவர்களனைவரும் சேனைகளின் கர்த்தராகிய இராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கு வருஷாவருஷம் அங்கு போவார்கள் (சக. 14 : 16).

ஆயிரவருட அரசாட்சிக்குப்பின், இந்தப் பூமியும் வானமும் ஒழிந்து போகும் ; நித்தியம் துவங்கும்.

*************

# Lesson 1

# Journey of Israelites part I

**Israelites slaves in Egypt**

**Israelites making bricks in Egypt**

**Israelites observing the Passover**

# Lesson 2

# Journey of Israelites part II

**Israelites leaving Egypt**

**Pillar of cloud and Pillar of fire**

**Egyptians Pursuing Israelites**

**Parting of Red Sea**

**Israelites walking on the dry area of Red Sea**

**The blood of the paschal lamb is struck on the door posts.**

**Israelites striking the blood of the lamb on the door posts**

# Lesson 3

# Journey of Israelites part III

**In Marah, the bitter water turned sweet.**

**A Well and palm trees**

**Elim: 12 wells and 70 palm trees**

**People gathering manna**

**Israelites gathering manna early in the morning**

**Route from Marah to Wilderness of Sinai**

**Moses smiting the rock with the rod**
**Aaron and Hur holding Moses's hands**

# Lesson 4

# Journey of Israelites part IV






**Moses receiving the Ten commandments**
**The Pattern of the Tabernacle**



**The details of the Priesthood**

# Lesson 15

## Sanctification through the blood

**Red Heifer**

**Slaying of the Red heifer and burning its parts**

# Lesson 16

# Triune God

**Son- Jesus taking water baptism, Holy Spirit- Descending as a dove, Father- Voice heard Saying "This is my beloved son"**

# Lesson 19
# Habitations of God

**Garden of Eden**



**Tabernacle**

**Solomon's Temple**

**Herod's Temple**



**Zerubbabel's Temple**